Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

ஜூலை 21 - 27, 2011

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 920

## யாருக்கு வாக்கு?

## அழிவுக்கா - அபிவிருத்திக்கா



## இறுதி நேரத்தில் கழுத்தறுத்தார் சம்பந்தன்

- புலித் தளபதி -

## சிவலிங்கத்துக்குச் செய்யப்படும் அர்ச்சனைகள்

புஷ்பங்களில் சாத்வீகம், ரஜசம், தாமசம், மிச்ரம் என்ற நான்கு வகைகள் உண்டு. வெண்மையான புஷ்பங்கள் சாத்வீகம், சிவந்தவை ரஜசம், கருநிற புஷ்பங்கள் தாமசம், மஞ்சள் வர்ண முள்ளது மிச்ரம். மூன்று தளங்கள் உள்ளதும், சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணமுள்ளதுமான ஒரு வில்வத்தை, சிவனுக்கு, அர்ப்பணம் செய்தால், மூன்று ஜென்மாவின் குலோத்தாரணம் செய்து, சிவலோகத்தில் கொண்டாடப்படுவான்.

வில்வ பத்ரம் புதிதாக இருந்தாலும், காய்ந்திருந்தாலும், சிவனுக்கு அர்ச்சிப்பதால், சகல பாவங்களும் விலகும்.வில்வ பத்தி ரத்தை ஒரு முறை அர்ச்சித்தபின், மறுதினம் அதையே தண்ணீரில் கழுவி, மீண்டும் அர்ச்சிக்கலாம் தோஷமில்லை. சுவர்ண புஷ்பம், மூன்று நாளும் வில்வம், ஐந்து நாளும் துளசி, பத்து நாளும் திரும்பத் திரும்ப எடுத்து, பூஜிக்கலாம் பழசு என்ற தோஷ மில்லை. ஸ்நானம் செய்தபின், அப்படியே புஷ்பம் பறித்து வந்தால், அது, பூஜைக்கு உதவாது. கீழே விழுந்த புஷ்பம், வஸ்திரத்தில், கையில் கொண்டு வந்த புஷ்பம், வாடியது, புழு அரித்தது, கேசம் சேர்ந்தது ஆகிய புஷ்பங்களைத் தள்ள வேண்டும். அட்சதையால் விஷ்ணுவையும், துளசியால் விநாயகரையும், அருகினால் தேவி யையும், வில்வத் தால் சூரியனையும் பூசிக்கக் கூடாது. ஊமத்தை, எருக்கு புஷ்பங்கள், விஷ்ணுவுக்கு கூடாது. பூஜைக்குரிய எருக்கு, செண்பகம், புன்னை, நந்தியாவட்டை, பாதரி, கண்டங்கத்தரி, அரளி, நீலோற்பலம் ஆகிய இந்த எட்டும், அஷ்ட புஷ்பங்கள் எனப் படும். தாமரை பூவில் சரஸ்வதியும், அரளிப் பூவில் பிரம்மாவும், வன்னி யில் அக்கினியும் இப்படி ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு தெய்வம் உள்ளது.

எஸ்.லக்மணன், யாழ்ப்பாணம்.

## எல்லாவற்றுக்கும் முதன்மையானவர் இயேசு

இறை மக்களுக்கான ஒளிமயமான உரிமைப்பேற்றில் பங்குபெற உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கியுள்ளார். அவரே இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுவித்து தம் அன்பான மகனின் ஆட்சிக்குட்படுத்தினார். அம் மகனால்தான் நாம் பாவ மன்னிப்பாகிய மீட்பைப் பெறுகிறோம். அவர் கட்புலனாகாத கடவுளது சாயல், படைப்பனைத்திலும் தலைப்பேறு. ஏனெனில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை, தட்புலனாகுபவை, கட்புலனாகாதவை, அரியணையில் அமர்வோர், ஆட்சியாளர்,அதிகாரம் கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டனர். அனைத்தும் அவர் வழியாய் அவருக்காகப் படைக்கப்பட்டன. அனைத்துக்கும் முந்தியவர் அவரே, அனைத்தும் அவரோடிணைந்து நிலை பெறுகின்றன.

முன்பு நீங்கள் இறைவனோடு உறவற்றவர்களாய் இருந்தீர்கள். அவரைப் பகைக்கும் உள்ளம் உடையோராய்த் தீயச்செயல்களை புரிந்து வந்தீர்கள். இப்பொழுது நீங்கள் தூயோராகவும், மாசற்றோராகவும் குறைச்சொல்லுக்கு ஆளாகாதோராகவும் தம்முன் விளங்குமாறு ஊனுடல் எடுத்த தம் மகனது சாவின் வழியாகக் கடவுள் உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். நீங்கள் நற்செய்தியைக் கேட்டுப் பெற்றுக் கொண்ட எதிர்நோக்கத்தை இழந்துவிடாமல் நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டு அதில் உறுதியாக நிலைத்திருங்கள். (கொலோசையர் 1: 12–23)

கிறிஸ்ரீனா, குருநகர்.

ஆன்மீகம்

## கஞ்சத்தனம் வேண்டாம்!

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "தொழுகை, நோன்பு ஆகிய கடமைகளுக்குப் பின்னர் ஹலாலான வருமானம் இன்றியமையாததாகும்" என்று கூறியுள்ளனர். இந்த ஹதீஸ், ஸுனனே தைலமீ, ஷீஅபுல் ஈமான், முஸ்னத் அஹ்மத் ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளது.

"ஹராமானப் பொருளை உண்பவனின் அல்லது அப்பொருளைக் கொண்டு ஆடை வாங்கி அணிபவனின் துஆ இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஹராமான பொருளைக் கொண்டு ஸதக்கா(அறம்) செய்தால் அது ஏற்கப்படமாட்டாது. அப்பொருளிலிருந்து செலவு செய்தால் அதில் பரகத்தும் உண்டாகாது." இவையனைத்தும் ஹதீஸ்களின் கருத்தாகும்.எனவே ஒருவனை வறுமை எப்படித்தான் வாட்டினாலும், துன்பம் தொல்லை தந்தாலும், இன்னல்கள் இடர்கள் ஏற்பட்டாலும், அவசரப்பட்டு அவன் ஹராமானப் பொருட்களைத் தேடுவதில் தன் பார்வையை செலுத்திவிடக்கூடாது. ஹலாலான வருமானம் தேடுவதில் சிரமங்கள் இருந்தபோதிலும் அதுவே அவனுக்குத் தேவையானதாகும்.

மேலும் ஹலாலான வருமானத்தின் மூலம் நீக்கப்படும் வறுமை, இறைவனுக்கு உகந்த நல்வாழ்வை மனிதனுக்குக் கொண்டு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

முஹம்மது ஹஸனி-கல்முனை-07

## வாசகர் சாலை

### அருமையிலும் அருமை

உனது பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். நீ தரும் விடயங்கள் அனைத்தும் அருமை. கால ஓட்டத்தின் மாறுதலுக்கேற்ப எம் சிறுவர்களுக்கு அறிவளிக்கக் கூடிய சிறுகதைகள், தகவல் துணுக்குகள் என்பவை சிறப்பாக உள்ளன. இதுபோன்ற இன்னும் பல தகவல்களை உன்மூலமாக அறிய ஆவலாய்க் காத்திருக்கின்றோம். எமது ஆவலை நிறைவேற்றுவாய் என எதிர்பார்க்கின்றோம்.

இ.ராகவன், கொக்குவில்.

### வாழ்த்துக்கள்

உலகாளும் உத்தம முரசுக்கு எனது வாழ்த்துக்கள். நான் எப்பொழுதுமே உன்னை வாசிக்கத் தவறவில்லை. படிப்பினையூட்டும் விடயங்களை எடுத்துக் கூறுகின்றாய். 919 ஆவது இதழில் வெளிவந்த அமலன் எழுதிய 'மக்களுக்குப் புரியாத இராஜதந்திரம்' என்ற கட்டுரை சிறப்பாக உள்ளது. உனக்கு எனது பாராட்டுக்கள்.

ஜே.மாதங்கினி, வவுனியா.

### ஆரூடம்

வாரம், வாரமாக நீ வரும் வரை உனக்காகக் காத்திருப்பவர்களில் நானும் ஒருத்தி. உனை வாசித்து யாசிப்பதில் ஒரு மகிழ்ச்சிதான் எனக்கு. பலதரப்பட்டவைகளை எடுத்தியம்பினாலும் சில குறிப்பிட்ட குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாய தேவையும் இருக்கிறது. பெரும்பாலும் உனது பக்கங்களில் தொடர் கட்டுரைகளும், தொடர்கதைகளுமாகவே உள்ளது. அதை விடுத்து வேறு புதிய தொழில்நுட்பம், சம்பந்தமானவைகளை பிரசுரிக்கலாம் என்பது எனது கருத்து. மற்றும் நான் அறிந்த வகையில், முரசின் ஆரூடங்கள் பிழைத்ததில்லை. பத்திகை உலக ஜாம்பவான்களும், புத்தி ஜீவிகளும் கூறுகின்ற ஆரூடங்களுக்கு நேர் எதிரான கருத்தினை முரசு துணிந்து கூறும். அதுவே சரியானது என்பதைக் கால ஓட்டம் நிரூபிக்கும். இவ்வாறான பல சம்பவங்கள் பலமுறை என்னை வியப்படையச் செய்திருக்கின்றது. அவ்வாறான தீர்க்க தரிசனக்கருத்துக்கள் தொடர வேண்டும் என்பதே என் வேண்டுகள்.




எஸ்.றேமன், யாழ்ப்பாணம்.

## கவிதைப் போட்டி இல.920



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.08.2011

கவிதைப் போட்டி இல. 920
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### திருவினையாக்கும்

சீறி வந்த அலையால்
அணைத்துக்கொண்டாள்
தென்னையை -எனினும்
உயிரைக் காக்க
எடுத்த முயற்சி
திருவினையாக்கும்.

ஏ.அருணன்மொழி,
கைதடி.

### தவிப்பு

சுனாமிப் பேரலைக்குள்
சிக்கித் தவிக்கும்
இந்தச் சிறுமியின்
உயிரைக் காப்பாற்ற
மனிதநேயம் கொண்டவர்கள்
யாரும் இவ்வுலகில் இல்லையா?

சு.ஜெயரூபன்,பருத்தித்துறை

### பாவியான சுனாமியே

சுனாமியே நீ
பேரலையாய் வந்து
பிஞ்சுகளின் உயிரோடு
விளையாடிவிட்டாய்
ஒன்று மறியா பாலகர்கள்
உனக்கு என்னதான்
செய்துவிட்டார்கள்.

எஸ்.ரணா,
காலி.

### படம் பிடித்தவன்

உன்னை படம் பிடித்தவன் –உயிரோடு
இருக்கிறானோ தெரியவில்லை –
ஆனால்
அவன் உயிரோடு இருந்தால்
உனக்காகவே கண்
கலங்கியிருப்பான்.

க.மதனிகா, மட்டக்களப்பு.

### புண்ணியம்

சிறுமியின் கழுத்தளவில்
தண்ணீர் வந்தாலும்
அவள் செய்த
புண்ணியத்தால்
தப்பிவிட்டாள்
பாவியிவள்.

எச்.எம்.றஹீனா,
கேகாலை.


### மிரட்சி கொள்ளாதே...

மிரட்சியுடன் நீ பார்க்கும் பார்வை
சுனாமிக்கே
பொறுக்கவில்லையம்மா
இரக்கம் கொண்டு –உன்
தலைக்கு மேல் செல்லவில்லை.

கே.பிரதா,திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.918

### பாராட்டுக்குரியது




### ஆறாத காயம்....?

சிறுமியே
அஞ்சி நெஞ்சு
பதைபதைக்க
யாருமில்லா நேரமதில்
- தென்னையே
தஞ்சமென நீ இருக்கும்
காட்சி
என்னை மட்டுமல்ல
எல்லோர்
மனதிலும்
தைத்திருக்கும்
ஆறாத காயமாய்....

கே.ஹம்ஷன்,
கண்டி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772,
கொழும்பு,
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-0212221811
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):- thinamurasu@live.com

## உங்கள் பக்கம்



### அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டும்

மன்னார் பிரதேச பிரிவுக்குட்பட்ட சிறுநாவற்குளம் கிராமத்தில் மீளக்குடியேறியுள்ள மக்கள் வீடு மற்றும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கிய வண்ணம் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்த சூழ்நிலை காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருந்துள்ளனர். பின்பு 33 குடும்பங்களைச் சேர்ந்த 163 பேர் கடந்த வருடம் ஜூன் மாதம் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்காலிக வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

அதேவேளை அடிப்படை வசதிகளான குடிநீர், மலசலகூடம் போன்றவை அற்ற நிலையில் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மீளக்குடியமர்ந்து ஒரு வருடமாகியும் எமது தேவைகளைப் பூர்த்தி செய்து தருவதற்கு எவரும் முன்வரவில்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமை நிலையில் வாழும் எமக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்படும் வீட்டுத்திட்டத்தைக் தருவதற்குக் கூட எந்தவிதமான நடவடிக்கைகளும் உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் சிறுநாவற்குள நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. முன்பு குடியேறிய எமக்கே உரிய வசதிகளை மேற்கொள்ளாமல் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பது எந்தவகையில் நியாயமாகும்.

எனவே வீடு மற்றும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழும் எமது பிரதேச மக்களுக்கு உரிய அதிகாரிகள் தலையிட்டு, எமது அன்றாட பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாக கேட்டுக் கொள்கின்றேன்.

எஸ்.மாரிமுத்து, சிறுநாவற்குளம்

## இளைஞர் நாடாளுமன்றம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமாகியது

இளைஞர் நாடாளுமன்றத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த 15 ஆம் திகதியன்று மகர கமையில் இடம்பெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது நாடளாவிய ரீதியில் 335 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற சபாநாயகர், சமல் ராஜ பக்ச, இளைஞர் சேவைகள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும ஆகியோர் இந்த நிகழ் வில் பங்கேற்றனர். இந்த இளைஞர் நாடாளு மன்றத்துக்கு மாவட்டம் ஒன்றில் இருந்து, பிரதேச செயலகப்பிரிவில் இருவர் என்ற அடிப்படையில் தெரிவாகியுள்ளனர்.

இந்தநிலையில் இளைஞர் நாடாளுமன் றத்தின் பிரதமர் மற்றும் அமைச்சரவை என் பன இளைஞர் சேவைகள் அமைச்சரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துக் கொண்டனர். இளைஞர் நாடாளுமன்றத்தின் பிரதம மந்திரியாக தம்மிக்க ஜெயசிங்க தெரி வானார்.சபாநாயகராக எம்.அனீஸ் தெரிவா னார். இதனை தவிர, இளைஞர் நாடாளு மன்றம் பிரதிப் பிரதமர், பிரதி சபாநாயகர் மற்றும் 13 அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகிய நிலைகளை கொண்டுள்ளது.

## மோசடி செய்த விளையாட்டு வீரர் ரங்க விமலவன்ச விளக்கமறியலில்

தெற்காசிய விளையாட்டுப்போட்டிகளின் தங்கப்பதக்கம் பெற்ற இலங்கை வீரரான ரங்க விமலவன்சவை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.


அமெரிக்க வீசாவை பெற்றுத்தருவதாக கூறி ஒருவரிடம் 1.6 மில்லியன் ரூபாய்களை பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது.


ரங்க விமலவன்ஸவிடம் பணத்தை கொடுத்ததாக கூறப்படுபவரின் மனைவி இது தொடர் பில் வழக்கை தாக்கல் செய்துள்ளார். ரங்க, தமது கணவருக்கு அமெரிக்க வீசாவை பெற் றுத் தருவதாக கூறி, அவரிடம் இருந்து 2.4 மில்லியன் ரூபாய்களை பெற்றதாக தெரிவித் துள்ளார். எனினும் சந்தேகநபர் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றவில்லை. பின்னர் 8 இலட்சம் ரூபாவை மாத்திரம் அவர் திரும்பி தந்தாக மனுதாரர் குறிப்பிட் டுள்ளார். இந்தநிலையில் மன்றில் தகவல் தந்த பொலிஸார், சந்தேகநபருக்கு எதிராக இதேபோன்று மூன்று குற்றச்சாட்டுக்கள் உள்ளதாக குறிப்பிட்டனர்.

இதனையடுத்து சந்தேகநபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

# கூட்டமைப்பினுள் கருத்து வேறுபாடு; வாக்காளர் மத்தியில் குழப்பம்

### வெற்றியைப் பாதிக்கும் என்கின்றனர் விமர்சகர்கள்





**தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர்களிடையேயான கருத்து வேறுபாடுகளும், ஏட்டிக்குப்போட்டியான மற்றும் ஒன்றுக்கொன்று முரணான பத்திரிகை அறிக்கை களும், கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியிலும் கூட்டமைப்பின் வீட்டுச்சின்னத்துக்கு வாக்களிக்க எண்ணியிருந்த வாக்காளர்கள் மத்தியிலும் அதிருப்தி யையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தக வல்கள் தெரிவிக்கின்றன.**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்கள் உட்பட 65 உள்ளூராட்சி சபை களுக்கான தேர்தல் வாக்களிப்பு தினம் நெருங்கி வருகின்ற நிலையில் கூட்டமைப்பின் தலைவர் களில் ஒருவரும் உள்ளூராட்சி சபைத் தேர் தல் வேட்பாளருமான என்.கே.சிவாஜிலிங் கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூட்டமைப்புக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இது தொடருமா யின் கூட்டமைப்பு தேர்தலில் இருந்து விலகிக் கொள்ளுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட் டிருந்தது. மறுதினமே இவ் அறிக்கையை மறுத்து உரைத்திருக்கும் கூட்டமைப்பின் பேச்சாளர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந் திரன் தனது அறிக்கையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூட்டமைப்பு தேர்தலில் இருந்து விலகிக் கொள்ளாது எனவும், விலகிக்கொள் ளும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஏற்கனவே யாழ்ப்பாணம் மாநகர சபை, வவுனியா நகர சபை ஆகியவற்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே நானா நீயா என்ற போட்டி நிலவி வருவதும் அதன்காரணமாக குறித்த உள்ளூராட்சி சபை களில் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் மக் கள் அதிருப்தி அடைந்திருப்பதும் தெரிந்ததே. இந்நிலையில் கூட்டமைப்புத் தலைவர்களின் இவ்வாறான முரணான அறிக்கைகள் மக்க ளையும் கூட்டமைப்பு ஆதரவாளர்களையும் சிந்திக்க வைத்திருக்கின்றது.

இவ்வாறு நாளுக்கு நாள் முரணான செய்திகள் கூட்டமைப்பின் தலைவர்களின் ஊடாக வெளிவருவது கூட்டமைப்பின் தேர் தல் வெற்றியில் பாரிய தாக்கத்தைச் செலுத் தப் போவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரி விக்கின்றனர்.

## இராணுவத் தளபதிக்கு எதிராக வழக்கு தாக்கல்

கொழும்பு

போரின் போது அவையங்களை இழந்த படைவீரர் ஒருவர் தாக்கல் செய்த மனு மீது கொழும்பு மேல்நீதிமன்றம், இராணுவ தள பதிக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

தமக்கு மேலதிக ஓய்வூதியம் நிதி செலுத் தப்பட்டுள்ளதாகவும் அது, குற்றம் என்றும் கூறி, தமது ஒய்வூதிய நிதி நிறுத்தப்பட்டுள் ளதாக மனுதாரரான அசோக தயாரட்ன என்ற இராணுவ வீரர் தமது மனுவில் தெரி வித்துள்ளார்.


இதனை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், பிரதிவாதியான இராணுவ தளபதி ஜெகத் ஜெயசூரியவுக்கு அழைப்பாணையை அனுப்பியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, வழங்கிய உறுதிமொழியின்படி போரில் காயமடைந்து செயலிழந்துபோன படைவீரர்களுக்கு சாகும் வரை ஓய்வூதியம் வழங்கப்பட வேண் டும் என்பதே மனுதாரரின் வாதமாகும்.

மனுதாரரான இராணுவ வீரர், 1985 ஆம் ஆண்டு ஸ்ரீமகாபோதி புலிகளால் தாக்கப் பட்டபோது காயமடைந்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.

## முறைகேடுகள் நடைபெற்றால் முடிவுகள் இரத்து செய்யப்படும்

### தேர்தல் ஆணையாளர் மகிந்த



முறைகேடுகள் இடம்பெற்றதாக கூறப்பட்டால் தேர்தல் அதிகாரிகள் குறித்த வாக்குச்சாவடியின் முடிவுகளை ரத்துச்செய்வார்கள் என்று உறுதி அளிக்கப்பட்டது. தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, இந்த உறுதிமொழியை தம்மை சந்தித்த அரசியல் செயலாளர்களிடம் வழங்கி யுள்ளார்.

தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் பல்வேறு கட்சிகளும் தமது கவனத்துக்கு கொண்டு வந் துள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார். இந்த சந்திப்பில் பங்கேற்ற தேர்தல் கண்காணிப்பு மையமான பெபரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி, சட்டரீதியற்ற தேர்தல் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்ற உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதேவேளை வாக்குச்சாவடிகளுக்குப் பிரவேசிக்கும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் தமது அடையாளங்களை நிருபிக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக்கொண்டார்.

## அரிசி விலை குறைவடையும் சாத்தியம்

நெல் மற்றும் அரிசியின் விலைகள் எதிர்வரும் வாரத்தில் குறை வடையும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. பெருமளவான கையிருப்புகள் சந்தைக்கு வருவதை அடுத்தே இந்த தகவலை ஹெக்டர் கொபேகடுவ நெல் ஆராய்ச்சி மைய பேச்சாளரான எஸ். ஏ.சி.யு சேனாநாயக்க தெரிவித் துள்ளார். தற்போது சிவப்பு பச்சையரிசி 50 ரூபாவாகவும், நாடு 58ரூபாவாக வும் விற்பனையாகின்றன. பாஸ்மதி அரிசி 80 முதல் 100 வரையில் விற்பனையாகின்றன.

கீரி சம்பா, 115 ரூபா முதல் 120 வரையில் விற்பனையாகிறது. இந்த நிலையில் யால பிரதேசத்தில் இருந்து நெல் இந்த மாத இறுதியில் சந்தைக்கு வரவுள்ளது. எனவே நெல் மற்றும் அரிசியின் விலைகளில் குறைவு ஏற்படும் என்று சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

## எதிர்ப்புப் போராட்டங்கள் எதிர்விளைவையே ஏற்படுத்தும்

### வைத்திய கலாநிதி கிபாயா இஸ்திகார்

மூதூர்

சவூதியில் மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள மூதூர் பெண் ரிசானா நபீக்கை விடுதலை செய்யு மாறு கோரி மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எதிர்விளைவை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கப்பட் டுள்ளது.

சவூதியில் இருந்து ரிசானா நபீக்கின் குடும்பத்தினருடன் தொடர் புகளைக் கொண்டுள்ள வைத்திய கலாநிதி கிபாயா இஸ்திகார் என்பவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தப்போராட்டங்கள் இறந்துப் போன குழந்தையின் பெற்றோரை கோபம் கொள்ள வைக்கக்கூடும் என்று கிபாயா குறிப்பிட்டுள்ளார்.

கண்டியை சேர்ந்த கிபாயா, கடந்த 10 வருடங்களாக சவூதியில் பல்வைத்தியராக கடமையாற்றுகிறார். அவரே சவூதியில் சிறைவைக்கப்பட் டுள்ள ரிசானாவைக் கிரமமாக சென்று பார்வையிட்டு வருகிறார். ரியாத்தில் இருந்து 400 கிலோமீற்றர் தொலை வில் உள்ள சிறையில் வைக்கப்பட் டுள்ள ரிசானாவை, மாதம் ஒருமுறை சென்று பார்வையிட்டு அவருக்கு உளரீதியான ஆலோசனை வழங்கி வருவதாக கிபாயா குறிப்பிட்டுள் ளார்.

ரிசானாவினால் கொல்லப்பட்ட தாக கூறப்படும் குழந்தையின் பெற் றோர் மன்னிப்பு வழங்கினால் மாத் திரமே ரிசானாவுக்கு விடுதலை உண்டு. எனவே இந்த விடயத்தை கவனமாக கையாளவேண்டும் என்று கிபாயா கோரியுள்ளார்.

## வடக்கின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப கடன்திட்டம்

### மத்திய வங்கி அனுசரணை

போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு பகுதிக்கு 4.6 பில்லியன் ரூபாய் கடன்நிதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. மத்திய வங்கியின் அனுசரணையுடன் இந்த கடன்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கான இந்த திட்டத்தின் மூலம் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பக கூடியதாக இருக்கும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.வடக்கின் எழுச்சி என்ற திட்டத்தின்கீழ் 3000 மில்லியன் ரூபாய்கள் அடங்கிய மூன்று ஒரு கடன் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் வறுமை ஒழிப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த கடனை 35 ஆயிரத்து 250 பேர் பெற்றுள்ளனர்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

## முரசம்

## ஆரம்பம் ஒரு அரசியல் பயணம்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெறுகின்ற உள்ளூராட்சி சபை தேர்தல்களில் வெற்றி பெறுகின்ற எதிர்பார்ப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிதானம் இழந்து உளரத் தொடங்கியுள்ளது.

தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும். ஏனென்றால் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு சர்வதேசத்தின் துணையோடு, இலங்கை அரசிடம் இருந்து தீர்வை பெற்றுக்கொள்ள அது உதவும் என்று கூறி வருகின்றனர். அதேவேளை போர் குற்றச்சாட்டுக்களில் திண்டாடிக் கொண்டு இருக்கும் இலங்கை அரசாங்கம் வடக்கில் நடைபெறுகின்ற தேர்தல்களில் வெற்றுபெறுமாக இருந்தால் அது அரசை பாதுகாக்கவே உதவும் என்றும் கூட்டமைப்பு கூறுகின்றது.

நடைபெற இருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் இலங்கை அரசாங்கத்தை ஆட்சி கவிழ்ப்பதுக்கோ அல்லது அரசியல் யாப்பின் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கோ ஒரு நாளும் உதவப் போவதில்லை. இது கிராம மட்டத்தில் இருந்து அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு அல்லது முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு உதவியாகவே இருக்கும்.

கூட்டமைப்பு மானம் உள்ள தமிழர்கள் அனைவரும் தமக்கே வாக்களிக்க வேண்டும் என்று கூறி வருகின்றது. கூட்டமைப்பின் இக்கூற்று தொடர்பில் தமிழ் மக்கள் விசனமடைந்து இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. அதாவது மானம் உள்ள தமிழர்கள் வாக்களிப்பு என்பதன் ஊடாக சாதிக்கின்ற விடயம் எதுவென்றால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு பதவிகள் பெற்றுக் கொடுப்பதும் அவர்களது குடும்பங்கள் வெளிநாடுகளில் குடியேறுவதற்கு வசதிசெய்து கொடுப்பதும் அவர்களது பிள்ளைகள் உறவினர்கள் சொகுசாக வாழ்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் என்ற நிலைமையே வரலாறாகி இருக்கிறது. மீண்டும் தமிழ் மக்களின் மானத்தை கேள்விக்கு உட்படுத்தும் கூட்டமைப்பினரின் மானத்தை ஆராய வேண்டியிருக்கிறது. தேர்தல் காலங்களில் மட்டும் தேசியம், தன்னாட்சி, அரசியல் அபிலாஷைகள் என்று பேசுகின்ற கூட்டமைப்பினர் அடுத்த தேர்தல் வரை தமிழ் மக்களுக்காகவோ அல்லது தாம் பேசுகின்ற கொள்கைகளுக்காகவோ எதையும் செய்வதில்லை.

அபிவிருத்தியா? அரசியல் தீர்வா? என்று இரண்டு கேள்விகள் இருக்க முடியாது. யுத்தத்திற்கு முகம் கொடுத்த மக்கள் தாம் இழந்த உயிர் இழப்புக்களைத் தவிர ஏனைய அனைத்தையும் மீளப் பெற்றெடுக்க வேண்டுமாக இருந்தால் அரசியல் தீர்வை நோக்கிய பயணத்திற்கு அபிவிருத்தியின் துணையோடு பயணிக்க வேண்டும். தற்போது அச்சம் அகன்ற அமைதியான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. நாம் நிரந்தர சமாதானத்திற்காக இந்த நாட்டின் ஏனைய இனங்களோடு சேர்ந்து முயற்சிக்க வேண்டும். கூட்டமைப்போ தமிழ் மக்களை இலங்கை அரசினது, இந்த நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மை சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களினது பகைமை சக்தியாக அல்லது இணங்கி வாழுவதால் என்கின்ற வெற்றிக்கான சூட்சுமம் தெரியாத வளர்ச்சி அடையாத இனமாக தமிழ் மக்களை இனம்காட்டி அவ்வாறான ஒரு இனத்தின் தலைவர்களாக தம்மை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இவ்வாறான இருண்ட யுகப் பயணம் அழிந்த தமிழ் மக்களின் வாழ்வு மேலும் அழிவுகளுக்குள் இழுத்துச் செல்வதாகவும் ஏனைய இனங்களின் வெறுப்புக்கும் சந்தேகத்துக்கும் இடமளிக்கும் துயரத்திற்குமே கொண்டு செல்லும் தமிழ் மக்கள் யுத்தத்திற்குப் பின் நடந்த தேர்தல்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உசுப்பேற்றல்களுக்கு எடுபட்டதைப் போல் எதிர்காலத்தில் இழுபட்டுவிடக் கூடாது. தமிழ்மக்கள் சிந்திக்கத் தொடங்கி இருக்கிறார்கள். அரசியல் எத்தகைய பலம் வாய்ந்த அணுகுமுறை என்பதை புரிந்து கொண்டு இருக்கிறார்கள். மீண்டு எழுவதற்கு அரசியலையே தமது சக்தியாக பிரயோகிக்க போகின்றார்கள் என்ற செய்தியை உலகிற்கு உணர்த்தப் போகும் ஒரு ஜனநாயகப் பயணத்தின் ஆரம்பத்தை இந்த [illegible]ில் கூட்டமைப்பை நிராகரிப்பதன் [illegible] வந்து கலக்கும்வரை வேண்டும்.

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

---

வடக்கில் என்றும் இல்லாதவாறு உள்ளூராட்சி தேர்தல் பிரச்சாரங்கள் தீவிரமடைந்துள்ளன. அரசாங்கக்கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பலப்பரீட்சையாக இந்த தேர்தல் களம் மாறியுள்ளது.

தமிழ் மக்களின் அதிக ஆதரவைப் பெற்ற கட்சி என்ற நிலையைத் தக்க வைத்துகொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த தேர்தலில் போட்டியிடுகிறது.

பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றன.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு மாறாக அழிவுக்கான பாதைக்காக வாக்கு சேகரிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற பின்னர் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுக்காணப்பட வேண்டியது அவசியம். எனினும் அதற்கு முன்னர்

பிரச்சாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகிறது.

இதன் காரணமாக யுத்தம் ஒன்றின் பின்னர் அமைதியை வேண்டி நிற்கும் மக்கள் மத்தியில் மீண்டும் வன்முறைகளை கட்டவிழ்த்து விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் இன்று யாழ்ப்பாணத்தில் பாரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

முக்கியத்துவம் வழங்கும் வகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதும் மகிழ்ச்சிப்படுத்துவதுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்காக இருந்து வருகிறது.

இந்தநிலையில் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தமக்கு வாக்குக்கேட்கும் தமிழ்த்

# யாருக்கு வாக்கு?



எனினும் அதனை தகர்க்கும் முயற்சியில் அரசாங்கமும் தோழமைக் கட்சிகளும் தேர்தலில் போட்டியிடுகின்றன. இந்தநிலையில் தேர்தல் பிரசாரங்களின் போது பேசப்படும் கருத்துக்கள் இன்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றன.

அரசாங்கமும் அதன் தோழமைக் கட்சிகளும் யுத்தத் தினால் அழிந்துபோன இடங்களின் அபிவிருத்தி என்ற அடிப்படையில் தமது

தேசியக் கூட்டமைப்பினர், அபிவிருத்திக்காக அரசாங்கக் கட்சிகளுக்கு வாக்களிக்கும் மக்களை உணர்வு அற்றவர்கள் என்ற சொல்கிறதா? என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

எனவே அந்த மக்களை வில்க்கி விட்டு தமது அரசியலை கொண்டு செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கம் அதன் அரசியல் தோல்வி நிலையை

அமலன்

# அழிவிற்கா? அபிவிருத்திக்கா?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள் என்று கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏன்? அவர்களின் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளார்கள் என்பது எதிர்த் தரப்பினரின் கேள்வியாக அமைந்துள்ளது. இந்த நிலையில் உடனடியாக யதார்த்தமற்ற ஒரு செயலை வைத்துக் கொண்டு அதனை அரசியலாக்கும் பிரசாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக யுத்தம் ஒன்றின் பின்னர் அமைதியை வேண்டி நிற்கும் மக்கள் மத்தியில் மீண்டும் வன்முறைகளை கட்டவிழ்த்து விட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அழிந்துபோனவற்றை அபிவிருத்தியும் செய்யவேண்டும் என்பதே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உட்பட்ட அரசாங்கத்தின் தொனிப்பொருளாக அமைந்துள்ளது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் தமிழ் மக்களை அழிவுக்கு இட்டு செல்லும் வகையில் அவர்கள் மத்தியில் ஆவேசமான கருத்துக்களை விதைத்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள் என்று கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏன்? அவர்களின் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளார்கள் என்பது எதிர்த்தரப்பின் கேள்வியாக அமைந்துள்ளது.

இந்தநிலையில் உடனடியாக யதார்தமற்ற ஒரு செயலை வைத்துக்கொண்டு அதனை அரசியலாக்கும்

எனினும் இதனை தேர்தலுக்கான முனைப்புகள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரம் செய்து வருகிறது.

எனவே இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் தொடர்ந்தும் அபிவிருத்தி அயடையாமல் இருப்பதையா விரும்புகிறது என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு தகுந்த பாடத்தை கற்பிப்பார்கள் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கு மாறான கருத்தை வெளியிட்டு வருகின்றது.

சர்வதேசத்தின் பிரசாரங்களுக்கு

எடுத்துக்காட்டுகிறது.

மறுபுறத்தில் தமது கட்சிக்கு அச்சுறுத்தல் உள்ளதால் தேர்தலில் இருந்து விலகப்போவதாக எம். கே. சிவாஜிலிங்கம் கூறுகிறார்.

எனினும் அவ்வாறான செய்தி பொய்ப்பிரச்சாரம் என்று சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவிக்கிறார்.

இதன் மூலம் ஒன்று அரசாங்க கட்சிகளின் வெற்றியை தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பு உறுதிப்படுத்துகிறது.

அத்துடன் இன்னும் தமக்குள்ளேயே முரண்பாடுகளை கொண்டிருக்கிறது என்ற தோற்றங்களை காணக்கூடியதாக உள்ளது.

எனவே வடக்கின் உள்ளூராட்சி தேர்தலில் பொதுமக்கள் அரசியல் வெளித்தோற்றத்தை மாத்திரம் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பாடம் ஒன்றை படிப்பிப்பார்கள் என்பது திண்ணம். □

# நாம் நம்பியவர்களால் கைவிடப்பட்டோம்

# ஏன் இப்படி நடந்தது?



புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்

நன்றி : இணையம்

ஆம். இத்தனை வலிமையுடன் இருந்த நமது போராளிகள் இப்படி முடக்கப்பட்டதன் காரணம்? ஒவ்வொரு தடவையும் நாம் பல இடங்களை கைப்பற்றிய பொழுதெல்லாம் இலங்கை அரசு இந்தியாவுடனும் சில மேற்கு நாடுகளுடனும் சேர்ந்து எமது படைகளை பின்வாங்கச் செய்தனர். இதற்கு இலங்கை அரசு இந்தியாவின் துணையுடன் எம் தலைமையை பணிய வைத்து அந்த நிகழ்வுகளை கச்சிதமாக முடித்து வந்தது. நம் தலைமை அந்த நிர்ப்பந்தத்துக்கு பணிந்ததன் காரணம். மேற்குலகுடன் இணைந்து நம் போராட்டம் பயங்கரவாத போராக திரிபுபடுத்தி அழிக்கப்படும் என இந்தியா கூறிவந்ததுதான். அதனால் இந்தியாவின் சொல்லை தட்ட முடியாத நிலை.

அதேபோலத்தான் நமது கட்டுப்பாட்டுக்குள்ளும் சில இடங்களை சிங்களம் பிடித்திருந்த பொழுது இந்தியா, நோர்வே போன்ற சில ஐரோப்பிய நாடுகளின் உதவியுடனேயே நமது தரப்பும் செய்தது. இதன் காரணமாக இராணுவ சமநிலையை இருபகுதியினரும் தக்கவைத்து வந்தனர்.

குறிப்பு:- ஒட்டுமொத்த நகர்வுகளும் அல்ல. இராணுவ தளர்ச்சி நடைபெற்று வந்த காலத்தில் அதாவது புலிகளின் கை ஓங்கிச் சென்ற காலத்தில் தான் இப்படி நடந்தது.

இப்படி சமநிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கு எமது மேற்குலக பொறுப்பாளர்கள் அன்ரன் பாலசிங்கம் மற்றும் தமிழ்ச்செல்வன் ஆகியோர் தமது அரசியல் வலிமைகளை நன்கு பயன்படுத்தி வந்தனர். இந்த நடைமுறையை நம்பித்தான் எமது இறுதி கால நகர்வும் நடந்தது.

மேற்குலகம் அப்போதைய தலைவர்கள் கே.பி.நெடியவன், காஸ்ரோ ஆகியோர் நமது அப்போதைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். இவர்கள் சொல்லும் விடயங்களை நம்பி நாம் கழுத்தறுக்கப்பட்டோம் என்பது தான் உண்மை.

ஆம். யுத்தம் நம்மை முற்றுகையிட்டுக் கொண்டிருந்த பொழுது முன்னைய போல் இம்முறையும் நடக்கும். படையினர் பின்வாங்கப்படுவர் என எதிர்பார்த்தோம் நடக்கவில்லை.. இந்தியாவின் பல தலைவர்களையும் நோர்வேயிடமும் கேட்டுப்பார்த்தோம், பதிலேதும் கிடைக்கவில்லை. இதனால் நம் புலம்பெயர் தலைவர்களை குடைந்தெடுத்தார்கள் நம் தலைமைகள்.



ஆனால் அவர்கள் அந்த நாடுகள் கைவிரித்துவிட்டனர் எனவும். இம்முறை போரை முடிவுக்கு கொண்டுவர இந்தியா விரும்புவதாகவும். அதற்கான நடவடிக்கைகளை புலிகள் தலைமைப்பீடத்தை செய்யச்சொல்லியும் கூறப்பட்டது. இந்த செய்தியால் நம் தலைமை ஆடிப்போனது. ஏன் இப்படி நடந்தது? எதனால் இப்படி சொல்லப்பட்டது? என்ற கேள்விகளுடன். உங்கள் இராஜதந்திர நகர்வுகளை நம்பித்தானே நாம் எமது படைகளை பின்வாங்கி சென்றோம் என கூறி புலம்பெயர் தலைமைகளுடன் சீறிப்பாய்ந்தனர் நமது தலைவர்கள்.

எனவே இந்த கட்டத்தில் நாம் ஒட்டுமொத்தமாக நம்பியவர்கள் எல்லோரும் சூழ்ச்சி செய்து கவிழ்த்து விட்டனர். நம் தலைமை பீடத்தை. இருந்தும் மறுபுடியும் பேசச்சொல்லி வற்புறுத்தப்பட்டது. நாம் அப்பொழுது இருந்த நிலைமையில் நாம் ஒடுக்கப்பட்டு இருந்ததால் இலங்கை அரசு அதற்கு சம்மதிக்க மறுத்துவிட்டது. உலகுக்கு மக்களை மீட்கும் போர் செய்வதாக சொல்லி எம் இதயம்வரை நகரத்தொடங்கியது.

சடுதியாக மாற்று வழி செய்யச்சொல்லி எமது தலைமை புலம்பெயர் தேசத்தை பணித்தது. இப்பொழுது தான் இந்தியாவின் நகர்வு நேரடியாக நம்மை கால்வாரிவிட்டது.

இந்தியாவின் கருணாநிதி அந்த நேரத்தில் தேர்தலை மையமாக கொண்டு நகர்வுகளை செய்தார். அவரது மத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசின் செயல்நெறிக்குள் இருந்து செயற்பட தொடங்கியது. இதை நாம் உடனடியாக அறிந்து கொள்ளும் நிலையில் அன்று இருந்திருக்கவில்லை. காரணம், நம் புலனாய்வு தகவல்கள் வெளிநாடுகளில் இருந்து உண்மையானதாக நம்மை வந்து சேரவில்லை.

அன்ரன் பால்சிங்கத்தின் மறைவுடன் தளர்ந்த நம் வெளிநாட்டு நகர்வுகள் அண்ணன் தமிழ்ச்செல்வனுடைய இழப்பின் பின் அடியுடன் தொலைந்துவிட்டது என்பது உண்மை. இதனால் தான் நம் புலம்பெயர் நாடுகளின் ஆதரவை ஒருதுளிகூட பெறமுடியாது போனது.


மாற்றுவழி செய்வதற்கு நம் புலம்பெயர் தலைமையுடன் இந்தியாவின் கருணாநிதியின் அரசையும் அவரது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பாதிரியார் ஜெகத்காஸ்பாரையும் தொடர்பு கொண்டவண்ணம் இருந்தது நம் தலைமை. அப்பொழுதுதான் நம்பியார், கனிமொழி, பாதிரியார் என எல்லோரும் மாற்று வழி செய்ய சில கட்டுப்பாடுகளை விதித்தனர்.

(தொடரும்...)

# அமைச்சர் அழகிரியும் பிரதமரின் சகிப்புத்தன்மையும்

ரிஷி

தமிழக அரசியல்





டில்லியில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த அதே நேரத்தில், தனது ஆதரவு முன்னாள் அமைச்சர்கள் சிலருடன் குலுமணாலியில் ஒய்வெடுத்துக் கொண்டிருந்தார் அமைச்சர் அழகிரி! "இவர் அமைச்சராக இருக்க வேண்டியவர் அல்ல. டூரிஸ்டாக இருந்திருக்க வேண்டியவர்" என்று கமெண்ட் அடித்தாராம் பிரதமர்.

புதிய அமைச்சரவை மாற்றத்தின் போது அழகிரியின் பதவியில் பிரதமர் கை வைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், அழகிரியின் தலைக்குமேல் எப்போதும் கத்தி தொங்கிக் கொண்டுதான் இருக்கின்றது என்று சொல்கிறார்கள் டில்லி வட்டாரங்களில். இதுபற்றி கோபாலபுரத்துக்கும் தகவல் பாஸ் பண்ணப்பட்டுவிட்டதாம்.

சென்னை சென்று கலைஞரைச் சந்தித்த பிரணாப் முகர்ஜி, மற்றைய விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது இடைநடுவே அழகிரி விஷயம் பற்றியும் பேசத் தொடங்கியிருக்கிறார். அப்போது அந்த ரூமில் மற்றையவர்களும் இருந்தார்கள்.

பிரணாப் பேசும்போது, குறுக்கிட்ட கலைஞர், 'நாம் இந்த விஷயத்தை, கொஞ்சம் பேர்சனலாக கடைசியாகப் பேசலாம்" என்று கூறிவிட்டதில், அந்த சப்ஜெக்ட் அப்போதைக்கு நிறுத்திக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

பிரணாப்பின் பேச்சுக்கள் முடிந்த பின், ரூமில் இருந்த மற்றையவர்களை வெளியே அனுப்பிவிட்டு, கலைஞரும் பிரணாப்பும் தனிமையில் சில நிமிடங்கள் பேசிக்கொண்டனர். அப்போதுதான் அழகிரி பற்றிய பிரதமரின் மெசேஜ், கலைஞருக்குக் கூறப்பட்டது என்கிறார்கள் அறிவாலய வட்டாரத்தில்.

டில்லி வட்டாரங்களில் சொல்லப்படுவது என்னவென்றால், அழகிரியின் அமைச்சு மாற்றப்பட்டு அவருக்கு முக்கியத்துவமற்ற இலாகா ஒன்றைக் கொடுப்பதுதான் கடைசி நாள்வரை பிரதமரின் கார்ட்களில் இருந்திருக்கின்றது. ஆனால், தி.மு.க.விடமிருந்து ஏற்கனவே இரு கேபினெட் அமைச்சுகளும் பறிக்கப்பட்ட நிலையில், இருக்கும் ஒரேயொரு கேபினெட் அமைச்சையும் மாற்றுவது நன்றாக இருக்காது என்று முடிவெடுக்கப்பட்டதாம்.

இப்படித்தான், அழகிரியின் அமைச்சு தப்பியிருக்கின்றது.

பிரதமரின் கோபத்துக்குக் காரணம், கேபினெட் அமைச்சராக அழகிரியின் திறமையின்மையும், அலட்சியமும்தான் என்கிறார்கள் டில்லியில். அதுவும் பிரதமரின் கோபம் எகிறியதன் காரணம், பிரதமர் நடாத்தும் அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் அழகிரி தலையைக் காட்டுவதில்லை என்பதுதானாம்.

07ஆம் திகதி பிரதமர் கூட்டிய கூட்டத்தில் அழகிரி அப்செண்ட். "மிஸ்டர் உரம்--இரசாயனம் எங்கே?" என்று லேசான கேலி தொனிக்கும் குரலில் கேட்டிருக்கிறார் பிரதமர். அதற்கு அதே கேலியான குரலில் மற்றொரு அமைச்சரிடமிருந்து "டில்லி வெயிலுக்கு எங்காவது ஒய்வெடுக்கப் போயிருப்பார்" என்று பதில் வந்ததாம்.

அந்த நேரத்தில் அங்கே சிரிப்பொலி எழுந்து அடங்கியதுடன் அந்த விவகாரம் முடிந்து போனது. பிரதமரும் அதை ஒரு ஜோக்காக எடுத்துக்கொண்டு விட்டுவிட்டு அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டார்.


ஆனால், கூட்டம் முடிந்தபின் பிரதமர் தெரிந்துகொண்ட விஷயம்தான் அவரைக் கொதிக்க வைத்துவிட்டது. விஷயம் என்னவென்றால், அழகிரி ஒய்வெடுக்கச் சென்றிருக்கிறார் என்று கூறப்பட்டது, பிரதமர் நினைத்திருந்தது போல ஜோக் அல்ல. நிஜமே அதுதான்!

டில்லியில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த அதே நேரத்தில், தனது ஆதரவு முன்னாள் அமைச்சர்கள் சிலருடன் குலுமணாலியில் ஒய்வெடுத்துக் கொண்டிருந்தார் அமைச்சர் அழகிரி! "இவர் அமைச்சராக இருக்க வேண்டியவர் அல்ல. டூரிஸ்டாக இருந்திருக்க வேண்டியவர்" என்று கமெண்ட் அடித்தாராம் பிரதமர்.

இந்தத் தகவல்களைக் கூறும் டில்லி வட்டாரங்கள், பிரதமரின் ஹிட்-லிஸ்டில் இருக்கும் முதலாவது ஆளே அழகிரிதான். அரசியல் காரணங்களுக்காக பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருக்கிறார். அவரது பொறுமை ரொம்ப நாளைக்கு நீடிக்காது என்றார்கள்.

இந்தப் பின்னணியில்தான், கலைஞரிடம் பிரதமரின் கோபம் பற்றிக் கூறிவிட்டுச் சென்றிருக்கிறார் பிரணாப் முகர்ஜி. கலைஞரால் என்னதான் செய்ய முடியும்? ஸ்கூலுக்குச் செல்லும் வயதா அழகிரிக்கு, கூட்டிச்சென்று அமைச்சரவைக் கூட்டத்தில் விட்டுவிட்டு வருவதற்கு?

# காசநோயிற்கான சிகிச்சை



**Dr. சி. ஜமுனானந்தா**

*நோயாளி தொடர்பாகவும், சிகிச்சை தொடர்பாகவும் உள்ள அறிவு பற்றி மேற்பார்வையில் பரிசோதிக்க வேண்டும்.*

1.நோயாளி: தான் எடுக்கும் மருந்துகளின் வகை, நிறம் ஆகியவற்றைத் தெரிந்துள்ளாரா?- எவ்வளவு காலம் மருந்து எடுக்க வேண்டும்? - பரிந்துரைத்த எல்லா மருந்துகளையும் எடுக்கவேண்டியதன் முக்கியத்துவம், பொதுவான பக்கவிளைவுகள் ஏற்படின் என்ன செய்வது?

02.நேரடிக் கண்காணிப்பில் ஆரம்பத்தில் சிகிச்சை பெறுவதன் முக்கியத்துவம்.

03.சளிப்பரிசோதனை செய்வதன் முக்கியத்துவமும், சளிப்பரிசோதனை முடிவுகளின் விளக்கமும்.

04.நோய் அறிகுறிகள் பற்றிய அறிவும், தொற்றும் தன்மை பற்றிய அறிவும்.

05.நெருங்கிப் பழகியவர்கள் பரிசோதிக்கப்படல் முக்கியம் என்பது பற்றிய அறிவு.

06.பொருட்கள் போதிய அளவில் மருந்துகள், ஊசிகள், சளிப்பரிசோதனைப் பாத்திரம் என்பன உள்ளன.

07.சளிப்பரிசோதனைக்கு நிரப்பும் படிவம், போதிய அளவு உள்ளதா? எனப் பார்த்தல்.

***மேற்பார்வையிடல் நடவடிக்கை***

01.சிகிச்சை அட்டைகளைப் பரிசீலிக்க வேண்டும்.

02.சுகாதார உத்தியோகத்தர் நோயாளருக்கு மருந்து கொடுப்பதை அவதானித்தல்.

03.சுகாதார உத்தியோகத்தர்களுடன் கதைத்தல்.

04.நோயாளிகளுடன் கதைத்தல்.

05.மருந்து விநியோகத்தைப் பரிசோதித்தல்.

***நுணுக்குக்காட்டி நிலையத்தில்***

01.சிறுவர்கள் அல்லாத வெளிநோயாளர்களின் 2% காசநோய் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டு, சளிப்பரிசோதனை செய்ய வேண்டும். சளியினை எடுப்பதற்குச் சூரிய ஒளிபடும் வெளியில், ஓர் இடம் ஒதுக்கப்படல் வேண்டும்.

***ஓ. நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சையினை நடைமுறைப்படுத்தல்***

01.நுணுக்குக்காட்டி நிலையங்களை உருவாக்கல்.

02.ஏனைய சுகாதார சேவைகளுடன் ஒன்றிணைதல்.

03.மருந்து விநியோகத்தைப் பலப்படுத்தல்.

04.சுகாதார உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்.

சிறப்பாக நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சையின் சளியில், கிருமி இல்லாது போகும் வீதம்: 2 மாதத்தில் 90 வீதத்திற்கு மேல் இருக்கும். குணமடையும் வீதம்: 90வீதத்துக்கு மேல் இருக்கும். நோயாளிகளைக் கண்டுபிடிக்கும் வீதம்: 90 வீதத்துக்கு மேல் இருக்கும்.

ஒரு பிரதேசத்தின் குணமடையும் வீதம் 90 வீதத்தினைத் தாண்டிய பின்பே ஏனைய நோயாளிகளைக் கண்டறிய முயற்சிக்க வேண்டும்.

காசநோயாளிகளுக்கான குறுகிய கால நேரடி அவதானிப்பின் கீழான சிகிச்சை நடைமுறைப்படுத்தல்.

01.காசநோய்க்குரிய அறிகுறிகளான இரண்டு கிழமைகளுக்கு மேற்பட்ட இருமல், உடல் மெலிதல், மாலை நேரக் காய்ச்சல், இருமலுடன் இரத்தம் போதல் என்பன காணப்படின் அவர்களை மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்திற்குச் சளிப் பரிசோதனைக்கு வழிகாட்டவும்.

02.சிகிச்சைபெறும் காச நோயாளருடன் நெருங்கிய தொடர்புடையவர்களைச் சளிச்சோதனைகு வழிகாட்டவும்.

03.சிகிச்சை ஆரம்பிக்கப்பட்ட நோயாளிக்கு முதல் மருந்து மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் அளிக்கப்பட்டு, பின் நோயாளிக்கு மிக அருகில் உள்ள சிகிச்சை நிலையத்தில் அளிக்கப்படும்,

04.நோயாளிகள் தினமும் அச்சிகிச்சை நிலையத்திற்கு வந்து தங்களுக்கு உரிய மருந்துகளைச் சுகாதார உத்தியோகத்தர முன்னிலையில் உட்கொள்ளுவர்.

05.மாவட்டத்திலுள்ள சகல வைத்தியசாலைகளும், நேரடி அவதானிப்பில் சிகிச்சை வழங்கும். மையங்களாக அமையும்,

06.ஒவ்வொரு நோயாளிக்கும் உரிய மருந்தும், மாவட்ட காசநோய்த் தடுப்புப் பிரிவினால் சிகிச்சை வழங்கும் மையங்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

07.மருந்துகள் நோயாளி எடுத்தபின், சிகிச்சை அட்டையில் பதியப்படும்.

08.நோயாளி மருந்து எடுக்க ஒரு நாள் வரத் தவறினால கூட உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். நோயாளியின் வீட்டிற்கு அருகில் வசிக்கும் சுகாதார உத்தியோகத்தர்கள் மூலம் அல்லது சுகாதாரத் தொண்டர்கள் மூலம் உடனடியாக அவர்களை மீள வரவழைத்து மருந்துகளைக் கொடுக்கலாம்.

09.மூன்று நாட்களுக்கு மேல் நோயாளியைக் கண்டுபிடிக்க முடியா விடின், அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனைக்கும், மாவட்ட காசநோய்த் தடுப்புப் பணிமனைக்கும் அறிவிக்கவும்.

10.பொதுச்சுகாதார பரிசோதகர் உடனடியாக மருந்து எடுக்கத் தவறியவர்களைக் கண்டறிய நடவடிக்கை எடுப்பர்.

11.மருந்து எடுப்பவரின் கண் மஞ்சள் நிறமானால்: வாந்தி அதிகம் எடுத்தால், தோலில் அதிகம் 'கடி' ஏற்படின், அவர்களை மாவட்ட மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பவேண்டும்.

12.ஒவ்வொரு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும், குடும்பநல மாதுக்களும், தாங்கள் பிரதேச வரைபடத்தில் காசநோயாளர் இனங்காணப்படின், சிவப்பு நிறத்தில் அடையாளப்படுத்தி வைக்கவும்.


13.காசநோய் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்ட பின், சிவப்பு நிறம் அகற்றப்படும். இதனை அப்பிரதேச செயற்பாட்டின் பின்னூட்டலாகக் கருதலாம்.

(தொடரும்...)

# கண்ணதாசனின்

## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 09



177

**அந்த** நாளில் (Jugement day) ஸ்வாமி இவன் இந்தப் பிறவியில் செய்த பாப-புண்ணியங்களைக் கணக்குப் பார்த்து இவனை நித்திய ஸ்வர்க்க வாசகத்துக்கோ அல்லது நிரந்தர நரக வாசகத்துக்கோ அனுப்பிவிடுவார் என்பதாகும்.

என்னிடம் வந்த ஒரு வெள்ளைக்காரர்- இப்போதெல்லாம் தான் என்னிடம் நிறைய வெள்ளைக்காரர்கள் வந்தபடி இருக்கிறார்களே, அவர்களில் ஒருத்தர்- இவர் புஸ்தகம் கிஸ்தகம் எழுதிப் பிரசித்தி பெற்றவர்-வேடிக்கையாகச் சொன்னார். அவருக்குப் பைபிளில் எங்கு பார்த்தாலும் கடவுள் அன்பே உருவானவர் என்று சொல்லிவிட்டு, இப்படிப்பட்டவர் ஒரு தப்புப் பண்ணியவனைத் துளி கூடக் கருணையில்லாமல், மீளவே வழியில்லாமல் நித்திய நரகத்துக்கு அனுப்புகிறார் என்று சொல்வது பொருத்தமில்லாமல் தோன்றியதாம். எனவே ஒரு பாதிரியாரிடம் சமாதானம் கேட்டாராம். அதற்குப் பாதிரியார் 'நிரந்தரமாகக் காலியாகவே இருக்கிறது' என்றாராம்.

ஆனால் யோசித்துப் பார்த்தால் இதை நாம் ஏற்றுக் கொள்வது சிரமமாய் இருக்கும். சுவாமி கருணை காரணமாகப பாவியைக் கூட நரகத்துக்கு அனுப்பவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் அவர்கள் சித்தாந்தப்படி அவர் பாவியின் உயிரை எங்கே அனுப்ப முடியும்?, அவர்கள் கொள்கைப்படி மறு ஜன்மம் இல்லையாதலால் பூலோகத்துக்கு மறுபடி அனுப்ப முடியாது. ஆனதால் பாவியையும் ஸ்வர்க்கத்துக்குத்தான் அனுப்ப வேண்டியதாகும். அப்படியானால் நாம் லோகத்தில் எந்தப் பாபத்தை வேண்டுமானாலும், எந்தனை பாவங்கள் வேண்டுமானாலும் கூசாமல் செய்துகொண்டே போகலாம். முடிவில் எப்படியும் ஸ்வாமி நம்மை ஸ்வர்க் கத்துக்கு அனுப்பிவிடுவார் என்று ஆகும். அதற்கப்புறம் லோகத்தில் சகலரும் ஒழுங்கு தப்பித்தான் நடப்பார்கள்.

நம் மதப்படியும் கர்ம பலனைத் தந்து தீர்ப்புத் தருகிற பல தாதாவான ஈஸ்வரன் பரம கருணாமூர்த்திதான். ஆனால் அதற்காக லோகம் அதர்மத்தில் மனமறிந்து விழட்டும் என்று விடுகிறவன் அல்ல அவன்.

அதனால் என்ன பண்ணுகிறான்?

நம் பாப பலனை (புண்ணிய பலனையும் தான்) அனுபவிப்பதற்காக நம்மை, இன்னொரு ஜென்மா கொடுத்து மறுபடி இந்த உலகுக்கே அனுப்பிவைக்கிறான். ஸ்வர்க்க ஆனந்தம், நரகக் கஷ்டம் இரண்டும் இந்த உலகத்திலேயே தான் இருக்கின்றன. நாம் கலந்தாங்கட்டியாகப் பாவம், புண்ணியம் இரண்டும் போன ஜன்மாவில் பண்ணியிருப்பதால் இப்போது கெட்டது, நல்லது இரண்டையும் சேர்த்து அனுபவிக்கிறோம். ரொம்பப் பாபம் செய்தவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறோம். பொதுவிலே ரொம்பக் கஷ்டப்படுகிறவர்கள் அல்லது சமமாகக் கஷ்ட-சுகம் உள்ளவர்கள்தான் இருக்கிறோமே தவிர, தாங்கள் பரம சுகமாக இருப்பதாக நினைக்கிறவர்கள் ரொம்பவும் துர்லபமாகவே இருக்கிறார்கள். இதிலிருந்தே நாம் அனைவரும் பொதுவில் பாபமே அதிகம் பண்ணியிருக்கிறோம் என்பது புரிகிறது.

பகவான், கருணை காரணமாக, இன்னொரு ஜன்மாவிலிருந்து இவன் பாபத்தைக் கழுவிக் கொள்வானா என்று பார்ப்பதற்காக, ஒரு பெரிய வாய்ப்பாக (Opportunity) பிறவியைக் கொடுக்கிறார். அதிலே ஒரு சாஸ்திரம், ஷேத்திரங்கள். இத்தியாதி வசதிகளை எல்லாம் கொடுத்து இவனுடைய அழுக்கைத் துடைக்க முன் வருகிறார். 'இவன் கையாலாகாதவன், ஒரு நாளும் தானாக முன்னேறமாட்டான்' என்று அடியோடு உதவாக்கரையாக நினைத்து இவனுக்குப் பாவியானாலும் கூட ஸ்வர்க்கத்தைக் கொடுத்து விடுகிறார் என்பதைவிட, இப்படி இவனைக் கூட நம்பி, உடன் தன்னைத் தானே கடைத்தேற்றிக்கொள்வான் என்று நம்பிக்கை வைத்துப் புனர்ஜன்மா தந்து, இதில் இவனுடைய தன் முயற்சிகளுக்குப் பல விதத்தில் கை கொடுக்க ஸ்வாமி முன் வருவதாகச் சொல்வது நன்றாக இருக்கிறது. பொருத்தமாக இருக்கிறது. அதுதான் பரமகருணையாக இருக்கிறது. எனக்கென்று முயற்சி என்ன இருக்கிறது. எல்லாம் உன் செயல் என்று ஜீவன் சரணாகதி செய்கிறபோது ஸ்வாமியே இவனை ஒரே இவனாக முயற்சியை விடுகிற சரணாகதியில் அனுக்கிரகம் செய்வது வேறு. இவனுக்கு முயற்சி செய்யவே லாயக்கில்லை என்று நினைத்து அனுக்கிரகம் செய்வது வேறு தான். புருஷ யத்தனம் என்று ஒன்று இருப்பதாக நினைக்கிற வரையில் அதில் ஜீவனை நம்பிவிட்டு வைப்பதுதான் பரமகருணை. அதுதான் நிஜமான அனுக்கிரகம்.

நிரந்தர நரகத்திற்கு ஸ்வாமி எவரையும் அனுப்புவதில்லை என்பது ஒருதனிப்பட்ட பாதிரியாரின் அபிப்பிராயம்தான். அதுவேதான் கிறிஸ்துவம் முதலான 'ஒரே பிறவி' மதங்களின் கோட்பாடு என்று சொல்வதில்லை. ஒரே ஜன்மத்தில் ஒருத்தன் பண்ணுகிற புண்ணியத்திற்காக அல்லது பாபத்திற்காக அவனை ஸ்வாமி ஸ்வர்க்கம் அல்லது நரகத்திற்கு நிரந்தரமாக அனுப்பிவிடுகிறார் என்பதுதான் அம்மதங்களின் பொதுக் கருத்து! அதிலும் நாம் பொதுவாகப் பாபமே பண்ணுவதால் நரக தண்டனை பெறுகிறவர்கள் தான் ஜாஸ்தியாக இருப்பார்கள் என்பதால் தீர்ப்பு நாளைக்கே ரொம்பவும் பயங்கரமான பெயர் Dooms day என்றே வைத்திருக்கிறார்கள். இது பகவானின் கருணைக்குக் குறைவாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

நம் மதத்தின் புனர்ஜென்மக் கொள்கைக்கு ஆதரவாக ஒன்றை அழுத்தமாகக் காட்டலாம்.

வெள்ளைக்காரி ஒருத்தி என்னிடம் வந்து இந்த (reincornation) விஷயத்துக்கு நிருபணம் (Proof) கேட்டாள். நான் அவளிடம் வாதம் ஒன்றும் செய்யவில்லை. அப்போது மடத்து முகாமில் ஒரு பண்டிதர் இருந்தார். அவருக்கு இங்கிலிஸும் வரும். அவரிடம் அவளை அங்கே உள்ள பிரசவ வைத்தியசாலைக்கு அழைத்துக்கொண்டுபோய், அங்கே பிறந்திருக்கிற குழந்தைகளைப் பற்றிய விபரங்களைக் குறிப்பெடுத்துக் கொண்டு வரும்படி சொன்னேன். அவளும் அப்படியே பிரசவ வைத்தியசாலைக்கு அவரோடு போய்விட்டு வந்து குழந்தைகளைப் பற்றிய குறிப்புக்களைச் சொன்னாள். அதன்படி ஒரு குழந்தை கொழு கொழுவென்று இருந்தது.

தொடரும்...

# மட்டக்களப்பின் உற்பத்தித் திறனுக்கு

# சாட்சியான வர்த்தகக் கண்காட்சி





**- லோகேஸ்வர்-**


**உற்பத்தித் திறன் விருத்திகளால் மக்கள் மத்தியில் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன். பொருளா-தார மேம்பாடும் ஏற்படுகிறது. இதனால் நல்லதொரு அபிவிருத்தி ஏற்படும் என்பதே நம்பிக்கையாகும். ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியினை அதன் உற்பத்தியாலும் வருமானத்திலும் கண்டு கொள்ளலாம் என்பதற்கு ஆரம்பப்படியாக மட்டக்களப்பில் வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய கைத்தொழில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.**

**உற்பத்தித்** துறையில் ஏற்படுகின்ற மேம்பாடே ஒரு நாட்டின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்காற்றுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அந்தவகையில் கிழக்கு மாகாணத்தின் உற்பத்தித் துறையினை வெளிக் கொணரும் வகையில் அண்மையில் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட வர்த்தகக் கண்காட்சி முக்கிய இடம்பெறுகிறது.

ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்திக்கான நிறுவனத்தின் (UNI-DO) அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவ சாய சம்மேளனத்தினரால் (BDCCIA) நடத்தப்பட்ட இக் கண்காட்சியில் கிழக்கு மாகாணத்தில் முதன்மைப்படுத்தப்படும் அனைத்து உற்பத்தித் துறைகளும் காட்சிக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் பிரமாண்ட வர்த்தகக் கண்காட்சியும் சந்தையும் கடந்த 08ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெற்றது. மட். மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலய மாணவி களின் கரகம் மற்றும் கன்னங்குடா மகாவித்தியாலய மாணவர்களின் வசந்தன் நடனங்களுடன் அதிதிகள் வரவேற்று அழைத்து வரப்பட்டு





கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதிகளாக ஐக்கிய நாடு களின் கைத்தொழில் அபிவிருத்திக்கான நிறுவன திட்ட முகாமையாளர் திருமதி குலோறியா எம்.அடபொன், முன்னாள் அமைச்சரும் வர்த்தக கைத்தொழில் அதிகாரசபையின் தலைவர் எம்.எஸ்.எஸ். அமீர்அலி ஆகியோரும் சிறப்பு அதிதி களாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மாகாண சபை உறுப்பினர்களான எட்வின் கிருஸ்ணானந்தராஜா, பூ.பிரசாந்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

யுத்தத்துக்கும், சுனாமிக்கும் பின்னர் முதன் முதலாக நடாத்தப்படும் இவ்வர்த்தகக் கண்காட்சியில் பல கம்பனிகள், ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் தங்கள் என பலரும் வர்த்தக நிலையங்களை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கிராமியக் கைத்தொழில் அமைப்புக்கள் பலவற்றின் கைப்பணிப் பொருள்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் (2010) மாவட்டத்தில் முதலிடம் பெற்றவர்களுக்கு வெகுமான-மும், நினைவுப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் வர்த்தகத் துறையில் சாதனை செய்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் மட்/வின்சன் மகளிர் தேசிய பாடசாலையில் கணிதப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற இரத்தினசிங்கம் சகிதா, வர்த்தகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற இதே பாட-சாலையைச் சேர்ந்த சிவபக்தன் ஜனனி, கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தையும் பெற்ற தவக்குமார் தவப்பிரியா, இவர்களுடன் சென் மிக்கேல் கல்லூரியில் கல்வி பயின்ற மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தையும் பெற்ற விஞ்ஞானப்பிரிவைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் சஞ்ஜீவன் ஆகியோ-ரின் திறமையினை பாராட்டுப் பெற்றனர்.

கடந்த வருடம் சிறந்த பெறுபேற்றை மட்டக்களப்புக்கு பெற்றுத் தந்தவர்கள் என்ற வகையிலும் எதிர்காலத்தில் மாணவர்கள், கல்வியில் ஆர்வத்தினை ஏற்படுத்தும் வகையிலும் இப்பாராட்டு வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் விவசாய சம்மேளனத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி தெரிவித்தார்.

இக்கண்காட்சி குறித்த ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இது குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன், மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாபெரும் வர்த்தகக் கண்காட்சிக்கு கிழக்கு மாகாணசபை பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டமானது இயற்கை அழிவுக்கு அடிக்கடி முகம் கொடுக்கும் மாவட்டமாகும். இங்கு கடந்த 30 வருடகாலமாக ஏற்பட்ட யுத்தம், சுனாமி அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அடிமட்ட மக்களின் வாழ்வாதாரம் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கான மீள்வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களினால் பல்வேறு உதவி கள் மேற்கொள்ளப்பட்டாலும் உற்பத்தி, கைத்தொழில் துறையின் வளர்ச்சி முக்கியமானதாகும்.

தற்போதைய நிலையில் மிக முக்கியமாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை மீளமைக்கும் பொருட்டு சுயதொழில் முயற்சியாளர்களை அதிகரிப்படும் மேம்படுத்துவதற்காக மாவட்டத்தின் மிகப் பிரதான தொழிலாக கொண்டுள்ள விவசாயம், மீன்பிடி, பால் உற்பத்தி என்பவற்றுடன் சுற்றுலாத்துறையினை மையமாகக் கொண்டு இக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை பாராட்டத்தக்கதாகும்.

கடந்த 5வருடகாலமாக ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்திக்கான நிறுவனம் (UNIDO) மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக, கைத்தொழில், விவ சாய சம்மேளனத்துடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

இதில், விவசாயப் பிரதேசமா-கிய போரதீவு, பட்டிப்பளை, வவுன-தீவு, செங்கலடி, வாகரை போன்ற பிரதேச செயலகப்பிரிவுடன் ஓட்டமாவடியிலும் விவசாயிகளின் விளைச்சலை அதிகரிக்கும் வகையில் புதிய தொழில்நுட்ப இயந்திரங்களை தருவித்து விவசாயக் குழுக்களை உருவாக்கி, அவர்களைப் பல படி உயர்த்தி அபிவிருத்தி செய்வதுடன் பெண்களையும், விதவைகளையும் இத் தொழிலில் ஈடுபடுத்துவதுடன் சுயதொழிலை ஊக்குவிக்கும் பல கருத்திட்டங்களை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள்.

இதுவரையும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட தொகையினை முயற்சியுடைய சமூகத்துக்காக முதலீடு செய்துள்ளார் கள். இதன் செயல்திட்டக் காலம் முடிவுறும் காலத்தில் இவ் வர்த்தகக் கண்காட்சியினை நடாத்துவதற்கு UNI-DO பக்கபலமாக செயற்பட்டுள்ளது.

இவ் வர்த்தகக் கண்காட்சியில் பனை அபிவிருத்தி சபை, விவசாயத் திணைக்களம், விவசாய விரிவாக்கல் திணைக்களம், கால்நடை அபிவிருத்தி திணைக்களம், மீன்பிடி திணைக்களம் என்பன முழு ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் வழங்கியிருந்தன.

ஒவ்வொரு பிரதேசத்துக்கும் தகுந்த காலத்தில் இவ்வாறான செயல்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படாவிட்டால் அதன் பிரயோசனங்களைச் முழுமையாக அனுபவிக்க முடியாது என்பது உண்மையாகும். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத் தினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களும் அதற்குத் துணையாக நின்று செயற்படும் யுனிடோ நிறுவன-மும் பாராட்டத்தக்கன.

இவ்வாறான கைத்தொழில் வளர்ச்சிசார்ந்த வேலைத்திட்டங்கள் பயிற்சிகள் வெளிப்படுத்தல்கள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகள் எதிர் நோக்கும் அடுத்த பிரச்சனையான வேலையற்றோர் பிரச்சினையினைத் தீர்க்கின்ற களமாக அமையும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இன்றும் சரியான முறையில் மீளாத நிலையில் உள்ள படுவான்கரை, வாகரை, மூதூர், வெருகல் உள்ளிட்ட பிரதேசங்களில் இருந்து பல உற்பத்தி முயற்சியாளர்கள் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டிருந்தமை சிறப்பானதாக அமைந்திருந்தது.

அதேநேரம் போக்குவரத்து குறை வாக உள்ள பிரதேச மக்களும் பங்குகொள்ளக்கூடியவாறும் மிக வருமானம் குறைந்த வறுமை நிலையில் உள்ளவர்களை மேம்படுத்தும் வகையில் யுனிடோ மற்றும் சம்மேளனத்தினரால் உதவி வழங்கப்பட்டவர்களது உற்பத்திப் பொருள்களான பாய், செருப்பு வகைகள், மட்டக்களப்பு பலகார வகைகள், அரிசி,அரிசிமா, அழகு சாதனப் பொருள்கள், எனப் பல பொருள்களும் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டருந்தன.

உற்பத்தித் திறன் விருத்திகளால் மக்கள் மத்தியில் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், பொருளாதார மேம்பாடும் ஏற்படுகிறது. இதனால் நல்லதொரு அபிவிருத்தி ஏற்படும் என்பதே நம்பிக்கையாகும்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியினை அதன் உற்பத்தியாலும் வருமானத்திலும் கண்டு கொள்ளலாம் என்பதற்கு ஆரம்பப்படியாக மட்டக்களப்பில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய கைத்தொழில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற விவயத்தினை இந்த இடத்தில் சொல்லியாகவேண்டும்.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி யில் அக்கறை உள்ளவர்கள் மட்டக் களப்பில் நடைபெற்று வரும் கைத் தொழில் முயற்சிகளுக்கு உதவிக்ளை வழங்குவது சிறப்பாக இருக்கும் இதுவே எதிர்கால சந்ததியினக்கும் பெரும் உதவிகளைச் செய்யும் என்பதே ஏற்பாட்டாளர்களது வேண்டுகோளாக இருந்தது. கிழக்கு மாகாணத்தின் முக்கியதொரு நிலையில் உள்ள மட்டக்களப்பில் நல்லதொரு வெளிப் பாட்டைத் தந்திருக்கும் ஐக்கிய நாடு களின் கைத்தொழில் அபிவிருத்திக்கான நிறுவனத்தின் (UNIDO) அனு சரணையுடன் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தினரால் நடத்தப்பட்ட வர்த்தகக் கண்காட்சியும் வர்த்தக சந்தையும் எதிர்காலத்திட்டமிடல்களில் பெரும் பங்காற்றும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

இதே நேரம் கிழக்கின் அபிவிருத் திக்குப் பங்காற்றும் வகையில், வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இந்த விடயங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படப் போகின்றன. அத்துடன் வெளிப்படுத்தப் படாதிருக்கின்றவைகள் எவ்வாறு கண்டுபிடிக்கப்படப் போகின்றன என்பதே கிழக்கின் புத்திஜீவிகள் விடுக்கும் கேள்வியாகும்.

கிழக்கின் அபிவிருத்திகள் குறித்துச் சிந்திக்கின்ற அரசியல்வாதிகள் யாவரும் இந்தக் கேள்விக்கான பதிலை முன்வைத்தே ஆகவேண்டும். ■

# நடிகர் திலகம்

## ஒரு சகாப்தம்

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சிவாஜி இரசிகர்கள், யாழ்.மாவட்டம்.



**தமிழ்** நாட்டில் வாழ்ந்த, வாழும் தமிழ் மக்களுக்கும், உலகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கும், இந்திய நாட்டிற்கும் பெருமை தேடித் தந்தவரும், தன் நடிப்பால் தமிழ்ப் பண்பாடுகளைச் சிறப்பாக எடுத்துக் காட்டியவரும், மேற்கூறிய அனைத்துத் தரப்பினரையும் மற்றும் உலக மக்களில் பலரையும் தனது நடிப்பாற்றலால் மகிழ்ச்சிப் படுத்தியவரும் ஆகிய நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களின் 10 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது பெருமைகள், சாதனைகளை நினைவு கூருவது மிகவும் பொருத்தமாகும்.

நடிப்புலக அகராதியாக விளங்கும் நடிகர் திகலகத்தைத் தமிழக அரசுகள் பலமுறை சிறந்த நடிகராகத் தெரிவு செய்து சிறப்புப் பட்டங்களை வழங்கின. இந்திய அரசாங்கம் பத்மஶ்ரீ, பத்ம விபூஷணன், தாதா சாகேப் பால்கே விருது போன்ற சிறப்புப் பட்டங்களை வழங்கிக் கௌரவித்தது. அமெரிக்க அரசாங்கம் தனது நாட்டிற்கு அழைத்து நயாகரா நகரத்திற்கு ஒரு நாள் அதிபராக நியமித்து கௌரவம் கொடுத்தது. அத்துடன் பிரான்ஸ் நாடு தனது நாட்டின் உயர் கௌரவ விருதான 'செவாலியர்' விருதை தனது நாட்டிற்கு அழைத்து வழங்கிக் கௌரவித்தது. இவை இவருக்கு கிடைத்த முக்கிய கௌரவங்களாகும்.

1928 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி பிறந்த சிவாஜிகணேசன் அவர்கள் 1952 ஆம் ஆண்டு மணவாழ்க்கையையும், திரையுலக வாழ்க்கையையும் ஒரே சேரத் தொடங்கி, வெற்றிநடைபோடத் தொடங்கினார். முதலாவது படமாகிய 'பராசக்தி' யிலேயே கதாநாயகனாக அறிமுகமாகி வெள்ளிவிழாப் படமாக பெருவெற்றி பெற்றது. நல்ல தமிழ்பேசும் இவரது நாவன்மையை உலகத் தமிழர் கண்டு வியக்க வைத்தது.

இதனைத் தொடர்ந்து பல நூறு நாள் படங்கள் அமைந்தன. பல வெள்ளி விழாப் படங்கள் தொடர்ந்தன. வேறு எந்த தமிழ் கதா நாயக நடிகரும் இல்லாதவாறு 100 நாள் படங்கள் நூறு நாட்களுக்கு மேலும் வெள்ளி விழாப் படங்கள் 15 க்கு மேலும் அமைந்தன. இவ்வளவும் மற்றெந்த காதாநாயக நடிகருக்கும் இல்லாதவாறு சராசரியாக ஒரு வருடத்திற்கு 8 படங்கள் வீதம் வெளியிட்டு நடந்தேறிய சாதனைகள் தொடர்ந்து 300 படங்களுக்கு மேல் நடித்தார்.

இவருக்கு மட்டுமே உரித்தான சாதனைகளில் சில பின்வருமாறு:-

1) ஒரே வருடத்தில் வெளிவந்து இரு படங்கள் வெள்ளி விழாக் கண்டன. பல வருடங்களில்.

1959 இல் - வீரபாண்டிய கட்டப்பொம்மன், பாகப்பிரிவினை

1961 இல் - பாவ மன்னிப்பு, பாசமலர்

1972 இல் - பட்டிக்காடா பட்டணமா, வசந்த மாளிகை

1983 இல் - நீதிபதி, சந்திப்பு

2)ஒரே தினத்தில் வெளிவந்து இரு படங்களும் 100 நாள் ஓடிய சாதனை பல முறை உள்ளன.

3)அதேபோல இலங்கையில் - கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் 100 நாள் ஓடிய சாதனை வேறெந்த நடிகருக்கும் இல்லாதவாறு இவர் படங்களுக்கு மட்டுமே உண்டு.(தீபம், அந்தமான் காதலி)


4)இலங்கையில் - கொழும்பில் மற்றைய தமிழ் நடிகர் எவருக்கும் இல்லாதவாறு வெள்ளி விழாவில் படங்கள் கூடுதலாக அமைந்தன. அவைகள் பராசக்தி, வசந்த மாளிகை, உத்தமன், பைலட் பிறேம்நாத் என்பனவாகும்.

100 நாள் படங்கள் பல ஆகும்.

5)இலங்கையில் - யாழ்ப்பாணத்தில் மற்றைய தமிழ் நடிகர் எவருக்கும் இல்லாதவாறு வெள்ளி விழாப் படங்கள் மூன்று அமைந்தன. அவை வசந்தமாளிகை, உத்மன், பைலட் பிறேம்நாத் என்பனவானகும்.

இவைகள் வசூலிலும் சாதனைகள் புரிந்தவையாகும். வேறு எந்த நடிகரின் படமும் யாழ். நகரில் வெள்ளி விழாக் காணவில்லை. அத்துடன் யாழ். நகரில் நாட்களிலும் வசூலிலும் உச்ச நிலையில் இருப்பவை சிம்மக்குரலோனின் படங்கள்தான் என்பது யாவரும் அறிந்ததே.

திரை உலகத்தில் பல சரித்திர புராணத் திரைப்படங்களை அளித்து மக்களை உணர்ச்சிபூர்வமாக மகிழ்வித்த காவிய நாயகன் நடிகர் திலகத்தின் நினைவுக்ள் எந்நாளும் மறையாது என்பதை இன்றைய தினத்தில் நினைந்து கொண்டு இவரது மறைவு கலை உலகத்திற்குப் பேரிழப்பாகும் என்பதையும் குறிப்பிட முடியும்.





---




# மோகமும் வேகமும் அதிகரிக்கும் பருவம்

முப்பது வயதானால் அழகும் மெருகும் கூடுவது ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும்தான். முப்பதை கடந்த பெண்கள் பணியிலும், அனுபவத்திலும், முதிர்ச்சியடைகின்றனர். பெண்களுக்கான மிக முக்கியமான கால கட்டம் தொடங்குவது முப்பது வயதிற்கு மேல்தான் என்கின்றனர் உளவியலாளர்கள்.

இருபதில் தொடங்கும் திருமண வாழ்க்கையில் குழந்தைகளை பெற்றெடுத்து அவர்களை வளர்த்து ஆளாக்கி பள்ளிக்கு அனுப்பும் வரைக்கும் பெண்களுக்கு எதைப்பற்றியும் நினைக்க தோன்றுவதில்லை.

ஓரளவிற்கு குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆன பின்பே தங்களின் மீதே அக்கறை ஏற்படுகிறது. உடுத்தவும், அழகுபடுத்திக் கொள்ளவும் ஆயத்தமாவது பெண்கள் முப்பது வயதிற்கு மேல்தான். தாம்பத்திய வாழ்க்கையிலும் அதிக ஈடுபாடு ஏற்படுவது நடுத்தர வயதில்தான் என்று ஆய்வின் முடிவு ஒன்று தெரிவிக்கின்றது.

நாற்பது வயதில்தான் தாம்பத்திய உறவில் அதிக ஆர்வம் ஏற்படுவதாக 81 சதவிகித பெண்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் 20 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் 63 சதவிகிதம் பேர் தாம்பத்ய உறவில் ஈடுபாடு காட்டுவதாக தெரிவித்துள்ளனர். இதற்கு காரணம் இளவயதில் காட்டும் வேகமும், நடுத்தர வயதில் ஏற்படும் விவேகமும்தான் என்கிறது அந்த ஆய்வு. சிகாகோ பல்கலைக்கழக ஆய்வறிக்கையின்படி 20 வயதுகளில் இருக்கும் பெண்கள் மிகக்குறைவாகவே உச்சக்கட்ட சிலிர்ப்பு நிலையை அடைகின்றனர் என்றும் 40 வயதுகளில் இருக்கும் பெண்களே அதிகமாக அந்நிலையை அடைகின்றனர் என்றும் தெரிகிறது.

இளவயதில் ஆர்வமும் வேகமும் கொண்டதாக உடலுறவு இருக்கிறது. ஆனால் நடுவயதில் கணவன் இயல்பாகவே மெதுவான, நிதானமாக செயல்பட்டு தனது மனைவிக்கு சமமாக உறவில் அதிக நேரம் நீடித்திருக்கிறான். மனைவியை சிலிர்ப்பு நிலைக்கு கொண்டு போவதில் ஆர்வம் காட்டும் கணவன் இயல்பாகவே தானும் அந்தப் பரவசத்தை அடைகிறான். கவர்ச்சியைக் கண்ணால் கண்டாலே இளமைப் பருவம் மோக வயப்படும். வயது முதிரும் போது மோகத்திற்கு பார்வை மட்டும் போதுமானதாக இருப்பதில்லை. தொடு உணர்ச்சிகளே அந்நிலைக்குத் தூண்ட முடியும். எனவே தான் இவ்வயதுகளில் நிதானமும் செயல்திறனும் இவ்விடயத்தில் உதவிகரமாக இருக்கிறது.

இளமைக் காலத்தில் உறவுக்கு அழைப்பதில் ஆண்தான் முன்நிற்கின்றான். ஆனால் நடுவயதில் பெண்தான் ஆர்வம் மிகுந்தவளாக இருப்பாள். காரணம் ஆண், பெண் இருவர் உடலிலும் சுரக்கும் ஈஸ்ட்ரோஜன் மற்றும் டெஸ்டோஸ்டெரோன் திரவங்கள்தான். வயது கூடும்போது அவை மாற்றமடைகின்றன. ஆணுக்கு இவையிரண்டும் அளவில் குறையத் தொடங்கும். ஆனால் பெண் உடலில் டெஸ்டோஸ் டெரோனின் குறைவை ஈஸ்ட்ரோஜன் ஈடுகட்டுகிறது. எனவேதான் ஆணை விடவும் பெண் நடுவயதில் அதிக ஆர்வம் கொண்டவளாக இருக்கிறாள்.

# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன்

அவலம் 39

“என்ன இந்த நேரத்தில்...? கேட்டவாறே ஐயா அவர்களை வரவேற்றார்.

“இனி இஞ்சாலைதான் எங்கட இருப்பு...? அவன் கூறியவாறே குழந்தையோடு ஐயாவுக்குப் பக்கத்தில் அமர்ந்தாள். அவன் அவர்களுக்கு முன்பாகக் கிடந்த வலைக்கும்பிகளுக்கு மேல் இருந்தான்.

“ஏன் என்ன பிரச்சினை...? ஷெல்லுகள் ஏதும் வருகுதே...?

“ஓம் ஐயா...தங்கச்சி வீட்டுக்கு முன்னால ரண்டு மூண்டு ஷெல் விழுந்த இடத்தில ஒரு தென்னைமரம் முறிஞ்சு விழுந்து ஒரு பிள்ளைத்தாச்சிப் பெட்டை செத்துப்போச்சுது.”

“ஐயோ...கடவுளே!” மகள் கூறியதைக் கேட்டு ஐயா திகைத்துப்போனார்.

“அப்ப உன்ர தங்கச்சி, கொத்தான், பிள்ளையள் வெளிக்கிடேல்லையே...?”

“....”

“என்னடிபிள்ளை பேசாமல் இருக்கிறாய்? அவள் என்ன வரமாட்டன் எண்டு சொல்லுறாளே...?”

“அவள் ஒண்டும் சொல்லேல்லை. அவர்தான்...?”

“ஏன் அவருக்கென்ன...?” ஐயாவுக்கு ஆத்தரம் வந்துவிட்டது. சற்று அதட்டலாகவே கேட்டார்.

“அவருடைய குணம் உங்களுக்குத் தெரியும்தானே. அவர் இப்பவும் இயக்கத்தை நம்பிக்கொண்டிருக்கிறார். இயக்கம் விடாதாம். அடிச்சுக்கலைக்குமாம். எங்களைப் போகச்சொல்லி...” அவள் வார்த்தையைக் கூறி முடிக்கவில்லை. ஐயா! அந்தத் தள்ளாத வயதிலையும் உருத்திரமூர்த்தியாகவே மாறிவிட்டார். தனக்கு முன்பாக மூத்த மருமகன் இருப்பதையும் மறந்து அவனது சகலனை வாயிலே வந்தவசை வார்த்தைகளால் அர்ச்சனை செய்தார் அவர்.

அவனும் அவளும் எதுவும் கூறவில்லை. மௌனமாக இருந்தார்கள். அவருடைய கோபம் நியாயமானது என்பது அவர்களுக்குப் புரிந்தது. உயிருக்கு அஞ்சிய நிலையில் ஊர் மக்கள் முழுவதும் இடம்பெயர்ந்து வரும் நிலையிலும், பெற்றமகள் என்ற பாசத்தின் நிமித்தமும், பேரப்பிள்ளைகள் மீதான வாஞ்சையும் அவருக்கு இரண்டாவது மருமகன் மீது சினம் கொள்ளவைத்துவிட்டது.

“இயக்கமே போக்கிடமில்லாமல் தவிக்குது. அதுக்குள்ள அவர் இயக்கத்தை நம்பி இருக்கிறாராமே? என்ர பிள்ளைக்கு ஏதாவது ஒண்டு நடக்கட்டும். அதுக்குப் பிறகு என்ன நடக்குதெண்டதைப் பார் இருந்து...”

இயலாத நிலையிலும் அவருக்கு இளமை திரும்பிவிட்டது போலிருந்தது. பாரிசவாத நோயினால் அதிக தூரம் நடக்கமுடியாத நிலையில், இன்னொருவரின் உதவியோடு நடமாடிக்கொண்டிருந்தார். மாதகல் கடற்பரப்பில் கடற்தொழில் செய்து வளர்ந்த உடம்பு காலப்போக்கில் தளர்ந்து முதுமையடைந்து போய் இருந்தது. ஆயிரம் உறவுகளைக் கொண்ட குடும்பமாக இருந்தாலும், வலிகாம இடப்பெயர்வோடும், வன்னிமீதான சிங்கள இராணுவத்தின் படையெடுப்பின் நிமித்தம் ஏற்பட்ட இடப்பெயர்வோடும் அவர் உடல் உளரீதியாக வெகுவாகவே பாதிக்கப்பட்டு இருந்தார். தனது இரு பிள்ளைகள் ‘மாவீரர்கள்’ ஆனதால், பெருமையோடு இருந்தவருக்கு இயக்கத்தின் சமகால அடாவடித்தனமான செயற்பாடுகளைக் கண்ணுற்றபின், தன் இருபிள்ளைகளின் ‘வீரச்சாவு’ அர்த்தமற்றதாகிப்போய்விடுமோ என தனக்குள் அஞ்சிய வண்ணம் இருந்தார்.

“இனி இயக்கம் தாக்குப்பிடித்து அடிபடும் எண்டு நான் நினைக்கேல்லை...” ஐயா கூறிக்கொண்டிருக்கையில், அவர்கள் இருந்த வீட்டிற்கு அருகில் பலர் குளறி அழும் சத்தம் கேட்டது.

“உதென்னடி உது? பேந்து உதுக்குள்ளாலை...”

வலைக்கும்பிகளுக்கு மேல் இருந்த அவன், எழுந்து வந்து தெருப் படலையடியில் நின்று தெருவைப் பார்த்தான். ஒரு வீட்டுக்கு முன்பாக கன்ரர் வாகனம் நிற்பது தெரிந்தது. அதனருகில் புலிச்சீருடையில் இரண்டு பெண்கள் ஒரு முதியவருடன் கதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் ,திரும்பி வீட்டிற்குள் வந்தான்.

“என்னப்பா பிரச்சினை...? அவள் கேட்டாள்.

“ஏதோ வீரச்சாவு போல கிடக்குது. கன்ரர் வாகனத்தில சிவப்பு-மஞ்சள் நிறக் கொடியள் கிடக்குது.”

உதில வீரச்சாவு கொண்டாட அவங்களல்லே ஷெல் குத்தப்போறாங்கள்...” அவள் பயந்த நிலையில் கூறினாள்.

“அதுகளுக்கு சனம் சாதி சாகிறதைப் பற்றிக் கலை கிடக்குதே. தன்ர நாட்டுக் குடிமக்கள் எண்டு அரசாங்கமும் நினைக்குதில்லை. இயக்கமும் தன்ர இனத்துச் சனங்கள் எண்டு கவலைப்படுவதுமில்லை. சிங்களவனோடை அடிபட்டு கடைசியில அகதியளா பேர் எடுத்ததுதான் மிச்சம். உந்த விடுதலைப் போராட்டமெண்டு எத்தனை பொடிபெட்டையள். பொதுச்சனங்கள் செத்துப்போச்சுதுகள்... இனி இருக்கிற சனத்தையும் சாகடிச்சுப்போட்டு ஆர் தமிழீழத்தை ஆளப்போகினமாம்...?” ஐயா எரிச்சலுடன் கேட்டு முடித்தார்.

“என்ன இந்த நேரம் வந்து நிக்கிறியள்...?” குரல் வந்த திக்கை நோக்கி மூவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

ஐயாவின் மைத்துனர் முறையான ஒருவர் குடிசைவாசலில் சிரித்தபடி நின்றார்.

“இனி இஞ்சாலதான் எங்கட இருப்பு...”

“ஏன்ரி பிள்ளை...” ஐயாவின் மைத்துனர் கேட்டார்.

“அங்கால இருக்கேலாதாம் மாமா. கிபிரடி ஷெல்லடி எல்லாம் நடக்கத் தொடங்கியிட்டுது. பயமாக்கிடக்குது. அதுதான் வந்திட்டம்...”

“ஒரு வருடத்தில் ஒண்டாயிருந்தா ஒருத்தருக்கொருத்தர் ஆறுதல்தானே. இனி நீ ஒருடமும் போகவேண்டாம். இஞ்சை மாத்தளனில இரு...”

ஐயாவின் மைத்துனர் கூறியதைக் கேட்டு அவன் சிரித்தான்.

“ஏன் தம்பி சிரிக்கிறியள்...?”

“புதுக்குடியிருப்பு மட்டும் வந்த ஆமி, இஞ்சால மாத்தளன் பக்கம் வரமாட்டான் எண்டதுக்கு என்ன நிச்சயம். என்ன விலை கொடுத்தாயினும், எவ்வளவு இழப்புக்களைச் சந்திச்சாயினும் வன்னிப் பெருநிலப்பரப்பை முழுக்கக் கைப்பற்றுவதுதான் அவன்ர நோக்கமாக்கிடக்குது. சனாதிபதியும் அப்படித்தானே சொல்லுறார். புலிகளிடமிருந்து மக்களை மீட்பதற்காக இந்தப்போர் நடக்குதாம்...”

மாமா சிரித்துவிட்டுக் கூறினார்.

“புட்டுக்கை தேங்காய்ப்பூ கிடந்தமாதிரி சனத்துக்குள்ள புலியள் இருக்குதுகள். இதில் என்னனெண்டு பிரிச்சுப் பார்த்து அடிக்கப் போகினம்? பிடிக்கப்போகினம்? புலியளை அழிக்க நினைச்சால் சனமும் அரைக்கரைவாசி அழியும். அதில ஆர்... எவர் அடங்கியிருக்கினமோ கடவுளுக்குத்தான் தெரியும்...”

“இஞ்சை சின்னத்தங்கச்சி வாறாள்...”

குடிசை வாசலில் நின்றவாறு ஐயாவின் மைத்துனர் கூறியதும் அவள் எழுந்து வந்து வெளியே பார்த்தாள்.

“எடி... அக்கா... என்ன இந்த நேரத்தில. அத்தான் வரேல்லையே...?”

“கொட்டிலுக்குள்ளை நிற்கிறாள்.”

அக்காவுடன் உள்ளே நுழைந்த சின்னத் தங்கை ஐயாவுக்கான இரவுச்சாப்பாட்டையும் தண்ணீர்ப்போத்தலையும் அவரது கட்டிலில தலை மாட்டுப் பகுதியில் இருந்த மேசை மீது வைத்துவிட்டு, ஐயாவின் மடியில் இருந்த அக்காவின் பிள்ளையைத் தூக்கி எடுத்துக் கொஞ்சிக்கொண்டாள்.

“கொக்காளும் கொத்தானும் இனி இஞ்சாலதான் இருப்பு...” ஐயா கூறினார்.

“ஏன்...?” முகத்தில் வியப்புத் தொனிக்க சின்னத்தங்கை கேட்டாள்.

“அங்கால ஆமிகிட்ட வந்திட்டானாம். ஷெல்லுகள் வருகுதாம்...” ஐயாவின் மைத்துனர் கூறிக்கொண்டார்.

“இஞ்சாலையும் ஷெல்லுகள் இடைக்கிடை வந்து விழுகுதுதானே! நேற்று பொக்கணைப் பள்ளிக்கூடத்துக்கு முன்னால விழுந்ததில் ஆறுபேர் சரியாம்...” என்று சின்னத்தங்கை கூறியதை ஆமோதித்தார் ஐயாவின் மைத்துனர்.

“சரி இருளுது... நீங்கள் எங்கை நிற்கப்போறியள். இஞ்சையோ அல்லது சின்னவள் வீட்டையோ...” ஐயா கேட்டார்.

“நாங்கள் சின்னவள் வீட்டை போறம் ஐயா...” அவள் கூறினாள்.

“ஏன் பிள்ளை... இஞ்சை இருங்கோவன்... ஐயாவின் மைத்துனர் தடுத்தார்.

அவன் அதைவிரும்பவில்லை அவனுள் ஏதோ மனதை உறுத்துவது போன்ற உணர்வும், பதகளிப்பும் ஏற்படுவதை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

“என்ன இது ..? ஏன் இப்படி மனம் பதட்டப் படுகுது..?”என்று அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்ட போதிலும், அதற்கான விடைதெரியவில்லை அவனுக்கு. ஆயினும், ஏதோவொரு அசம்பாவிதம் நிகழப் போகிறது... என்பது மட்டும் அவனுக்குத் தெரிந்துகொண்டது. அதனால்தான் அங்கு தங்க விருப்பப்படாமல் வெளியேற விரும்பினான்.

அவன், அவள், சின்னத்தங்கை மூவருமாக ஐயாவிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு, கப்பல் றோட்டில் ஏறி கிழக்குத்திசை நோக்கி கடற்கரைப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்தார்கள்.

“பெரியப்பா பாலர் அத்தான் ஆட்களும் முள்ளிவாய்க்காலில் இருந்து வந்திருக்கினம்...” சின்னவள் கூறியதைக் கேட்டு அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனும தன் மனைவியை ஒருவித அர்த்தத்தோடு பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

அவளது தந்தையின் சகோதரி மகனான பாலர் குடும்பத்துக்கும் அவனுக்கும் ஒத்துப்போகும் தன்மை மிகக் குறைவாகவே இருந்ததினால், அவன் அக்குடும்பத்தினருடனான உறவுகளைச் சற்று விலக்கியே வைத்திருந்தான். இந்நிலையில், மீண்டும் ஒரே இடத்தில் சேர்ந்திருக்க அவனுக்கு மனம் சங்கடப்பட்டது. இரணைப்பாலையில் சகலனோடு ஒத்துப்போகும் தன்மை இல்லாததினாலும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அதை ஏற்றுக்கொண்ட அவன், இப்போது பாலர் குடும்பத்துக்குப் பக்கத்தில் போய் இருக்கத் தயங்கினான்.

“என்ன அத்தான் யோசினை...? பேசாமல் வாறியள்...” சின்னத்தங்கை கேட்டாள்.

“ஒண்டுமில்லை. எல்லாம் உங்கட மாமிமகன் பாலன் குடும்பத்தைப் பற்றித்தான்...”

அக்காவும் சின்னவளும் எதுவும் கூறவில்லை. அவர்களுக்கு அவனது மனநிலை புரிந்துகொண்டது.

“நீங்கள் எங்கட தரப்பாள் வீட்டுக்குள்ள இருங்கோ. அவை வீட்டை போகவேண்டாம்...” சின்னத்தங்கை கூறியபடியே... கப்பல் றோட்டிலிருந்து திரும்பி மணல் தரைக்குள் இறங்கினாள்.

றோட்டோரம் நின்றிருந்த அவர்களது மைத்துனர் பாலு அவர்களைக் கண்டதும் வாயெல்லாம் பல்லாக வரவேற்றார்.

அவனுக்கோ அதைப்பார்க்க எரிச்சலாயிருந்தது.

(அவலம் தொடரும்...)


“இயக்கமே போக்கிடமில்லாமல் தவிக்குது. இனி இயக்கம் தாக்குப்பிடித்து அடிபடும் எண்டு நான் நினைக்கேல்லை... எங்களைக் குடிமக்கள் எண்டு அரசாங்கமும் நினைக்குதில்லை. இயக்கமும் தன்ர இனத்துச் சனங்கள் எண்டு கவலைப்படுவதுமில்லை. சிங்களவனோடை அடிபட்டு கடைசியில அகதியளா பேர் எடுத்ததுதான் மிச்சம். உந்த விடுதலைப் போராட்டமெண்டு எத்தனை பொடிபெட்டியள். பொதுச்சனங்கள் செத்துப்போச்சுதுகள்... இனி இருக்கிற சனத்தையும் சாகடிச்சுப் போட்டு ஆர் தமிழீழத்தை ஆளப்போகினமாம்... புதுக்குடியிருப்பு மட்டும் வந்த ஆமி. இஞ்சால மாத்தளன் பக்கம் வரமாட்டான் எண்டதுக்கு என்ன நிச்சயம். என்ன விலை கொடுத்தாயினும், எவ்வளவு இழப்புக்களைச் சந்திச்சாயினும் வன்னிப் பெருநிலப்பரப்பை முழுக்கக் கைப்பற்றுவதுதான் அவன்ர நோக்கமாக்கிடக்குது. சனாதிபதியும் அப்படித்தானே சொல்லுறார். புலிகளிடமிருந்து மக்களை மீட்பதற்காக இந்தப்போர் நடக்குதாம்...”












# மானும் மீனும்

அது ஒரு மலையோரம், மாலைப்பொழுது! காடெங்கும் ஓடி விளையாடி உணவு தின்று, தண்ணீருக்காக அலையும் மான் கூட்டம்!

ஒவ்வொரு மானும் வெவ்வேறு திசைகளில் சுற்றித் திரிய ஒரு மான் தண்ணீர் இருக்கும் இடத்தை பார்த்து விட்டது!

அது வேகமாய் துள்ளிக்குதித்து அருகே சென்று பார்த்த போது வற்றிப்போன அந்த குளத்தில் குறைந்த அளவே தண்ணீர் இருந்தது.

குறைவாக இருந்தாலும் அதை குடித்து விட வேண்டும் என்ற ஆவலில் மான் தண்ணீர் அருகே சென்றது.

அப்போது தண்ணீரில் இருந்து சத்தம் கேட்டது.

"அண்ணே... நீங்க இந்த தண்ணியைக் குடிக்கிறது தப்பில்லை. ஆனால் இந்த குளத்தில் இருக்கிற தண்ணீரை நம்பித்தான் நிறைய பேர் இருக்கிறோம். இந்த தண்ணியையும் நீங்க குடிச்சிட்டால் நாங்கள் இப்பவே இறந்திடுவோம். நீங்கள் நினைச்சால் இன்னும் இரண்டு நாள்... நாங்கள் உயிரோடு இருப்போம்! ஒருவேளை, அதுக்குள் மழை பெய்தால் உயர்பிழைப்போம்" என்று உயிர் பயத்தில் மீன்கள் பேசின.

கெஞ்சும் குரலில் மீன்கள் கேட்டுக்கொண்டதால் தண்ணீர் குடிக்க வந்த மான் தயங்கியது. சில நிமிட மௌனத்திற்கு பிறகு தாகத்துடன் திரும்பியது. அடுத்த சில மைல் தூரத்தில் உள்ள குளத்தில் அந்த மான் தன்னுடைய தாகம் தீர்த்துக் கொண்டது.

சில நாட்களுக்குப் பிறகு மழை பெய்து காடு செழித்திருக்க, நீர் வளம் நன்றாக பெருகியது. அப்போது அந்த குளத்தின் அருகே தண்ணீர் குடிக்க அதே மான் வந்தது.

மறுபடியும் ஒரு சத்தம், "தண்ணீர் குடிக்காதீங்க! குளத்தில் இறங்காதீங்க"!

தண்ணீர் நிறைய இருக்கும் போது இந்த மீன் ஏன் இப்படி சொல்கிறது என்று கரையில் நின்ற மானுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அண்ணே! அன்றைக்கு உங்களால் நாங்க உயிர் பிழைத்தோம்! இன்னிக்கு உங்களுக்கு ஒரு ஆபத்தென்றால் எங்களால் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது." என்று சொன்ன மீனை பார்த்து மானுக்கு மீண்டும் ஆச்சரியம்!


மறுபடியும் தொடர்ந்து மீன், "மழை நிறைய பெய்ததால் எல்லா குளமும் உடைந்து ஒன்றாகிவிட்டது! அந்த நேரத்தில் மற்ற குளத்தில் இருந்த முதலைகள் இங்கு வந்தது. அவை, பசிக்காக தண்ணீர் குடிக்க வருகின்ற மிருகங்களை பிடித்து கொன்று சாப்பிட்டது. அந்த ஆபத்து உங்களுக்கு வேண்டாமென்று தான் தண்ணியில் இறங்க வேண்டாம் என்று சொன்னேன்" என்று எச்சரிக்கும் குரலில் கூறியது.

மீனுக்கு நன்றி தெரிவித்த மான், உயிர் பிழைத்த மகிழ்ச்சியோடு திரும்பியது. அப்போது குளத்தில் வாயை பிளந்து நின்ற முதலை ஏமாற்றமடைந்தது.

அறிவு என்பது நம்முடைய ஒரு பகுதியாக இருக்கிறது. ஆனால், இதயம் நம்முடைய ஒவ்வொரு பகுதியாக இருக்கிறது.

ரிரேஸ்

## வாரம் ஒரு திருக்குறள்



**கூடா ஒழுக்கம்**


**கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன**
**வினைபடு பாலால் கொளல்.**

நேராகத் தோன்றினும் அம்பு கொடியது; வளைவுடன் தோன்றினாலும் யாழின் கொம்பு நன்மையானது; மக்களின் பண்புகளையும் செயல்வகைகளையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

குறள்:279




## வாரம் ஒரு நாடு



## அல்ஜீரியா

**தலைநகர்:** அல்ஜியர்ஸ்
**பரப்பளவு:** 23 இலட்சத்து 81 ஆயிரத்து 741 சதுர கிலோ மீ.
**மக்கள் தொகை:** 3 கோடியே 4 இலட்சத்து 89 ஆயிரம்
**மொழி:** அரபி, பெர்பெரி, பிரெஞ்சு
**மதம்:** இஸ்லாம்
**நாணயம்:** தினார்
**எழுத்தறிவு:** 98.7 சதவீதம்
**அமைவிடம்:** இது ஒரு வடக்கு ஆபிரிக்க நாடு. வடக்கில் மத்திய தரைக்கடல், கிழக்கில் டுனீஷியா, மேற்கில் மொராக்கோ, சகாரா பாலைவனமும், தெற்கே மவுரிடானியா, மாலி, நைஜரும் உள்ளன.
**விளைபொருட்கள்:** கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு, மக்காச்சோளம், தேயிலை, பேரீச்சை, மாதுளை, அத்திப்பழம்.
**கனிமவளம்:** இரும்பு, துத்தநாகம், பாதரசம், செம்பு, பாஸ்பேட்டுகள், பெற்றோலியம்.
**தொழில்கள்:** கால்நடை வளர்த்தல், மதுபானம் தயாரித்தல், ஒலிவ் எண்ணெய், பெற்றோலியத் தொழில், உணவுப் பதப்படுத்துதல்.

## வானவில்



முப்பட்டகக் கண்ணாடியில் சாதாரண ஒளிபட்டு பிரதிபலிக்கும் போது, அது பிரிந்து ஏழு நிறங்களை வெளிப்படுத்துகிறது. அதுபோல நீர் துளியில் சூரியஒளி பட்டு பிரதிபலிக்கும் போது நிறப்பிரிகை அடைகிறது. அதனால் தான் வானவில் உண்டாகுது. ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு ஆகிய கண்ணுக்குப் புலனாகக் கூடிய ஏழு நிறக்கதிர்களும் சேர்ந்தே வெள்ளை நிற ஒளியான, சாதாரண சூரியஒளியை உண்டாக்குகின்றன. வெள்ளை நிற ஒளியை உருவாக்கும் இந்த ஏழு நிறக்கதிர்களும் வேறுபட்ட அலை நீளங்களைக் கொண்டுள்ளது. இதனால், ஒளியானது ஒரு ஊடகத்தில் இருந்து இன்னொரு ஊடகத்துக்குச் செல்லும்போது வேறுபட்ட அளவில் முறிவடைகிறது. காற்றில் இருந்து சூரியஒளி, நீர்த்துளிக்குள் போகும்போது இப்படி வெவ்வேறு நிறக்கதிர்களாக முறிவடைகிறது.

பின்னர் இந்த கதிர்கள் நீர்த்துளியின் உள்ளேயே இருந்து மீண்டும் காற்றுக்குள் வந்து முறிவடைந்துவிடுகிறது. இப்படி நடக்கும் போதுதான் இந்த முறிவடையும் நிறக்கதிர்கள் வானத்தில ஏழு நிறங்களாக தோன்றி வானவில்லாக ஜொலிக்கிறது.

## தகவல் துணுக்குகள்

*லோர்ட்ஸ் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடம் - லண்டன் (இங்கிலாந்து)
*இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவர் - ஏ.பி.ஜே.அப்துல் கலாம்
*விற்றமின்களைக் கண்டறிந்தவர் - டாக்டர் பங்க்
*ரொக்கெட் புறப்படும்போது உண்டாகும் ஒலி அளவு - 130 டெசிபல்
*பாதரசத்தின் உறை நிலை 39 டிகிரி செல்சியஸ் ஆகும்.
*மை (இங்க்) தயாரிக்கப் பயன்படும் உப்பு பெரோ சல்பேட்
*நீரில் மிக எளிதில் கரையும் வாயு அமோனியா
*உலகில் எடை மிகுந்த உலோகம் இரிடியம்.
*எக்ஸ்ரே ஊடுருவமுடியாத உலோகம் ஈயம்.
*வெடிமருந்தில் உள்ள தாது நைட்ரஜன்.
*மின்சார பல்பில் ஆர்கன் வாயு பயன்படுகிறது.
*குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் திரவம் பிரியான்.

### சுவை அரும்புகள்

மனிதனின் நாக்கில் 3 ஆயிரம் சுவை அரும்புகள் உள்ளன.
பசுவின் நாக்கில் 35 ஆயிரம் சுவை அரும்புகள் உள்ளன.
மானின் நாக்கில் 50 ஆயிரம் சுவை அரும்புகள் உள்ளன.

### இதயத்துடிப்பு

எலியின் இதயம் நிமிடத்திற்கு 600 தடவை துடிக்கிறது.
முயலின் இதயம் நிமிடத்திற்கு 150 தடவை துடிக்கிறது.
குதிரையின் இதயம் நிமிடத்திற்கு 40 தடவை துடிக்கிறது.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 01.08.2011

**வர்ணம் தீட்டும் போட்டி இல.899**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 897**

**பரிசுக்குரியவர்:** எஸ். கீர்த்தனா, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

**பாராட்டுக்குரியவர்கள்**

01.ஆர்.வீவன், மாப்பனாவத்துற வீதி, கண்டி.
02. சீ.நித்தியாதேவி, பாண்டிருப்பு, கல்முனை.
03 ம.கஜேந்திரன், பருத்தித்துறை.
04. க.முகிலினி, தோணிக்கல். வவுனியா.
05. தேவமகன், வாழைச்சேனை, மட்டக்களப்பு.
07. கி.சுகுணா, கடற்கரைவீதி, திருகோணமலை.
08. அ.சுதா, கொழும்பு-06


## கணித மேதைகள்

*முக்கோணவியலின் தந்தை- ஹிப்பார்க்கஸ்.
*பகுமுறை வடிவியலின் தந்தை- ரெனோ டெஸ்கார்டஸ்.
*வடிவியலின் தந்தை- யூக்ளிட்.
*இயற்கணிதத்தின் தந்தை- டியோபாண்ட்ஸ்.
*மடக்கையின் தந்தை- ஜோன் நேப்பியர்.
*எண்ணியலின் தந்தை- பிதாகரஸ்.
*புள்ளியலின் தந்தை- ஹெவிஸ்.
*தொகை நுண் கணிதத்தின் தந்தை- ஆர்சி மேட்ஸ்.
*வகை நுண் கணிதத்தின் தந்தை- டி. பெர்மட்.

## சிலந்தி வலை இரகசியம்

சிலந்தி வலை பின்னுவதை பார்த்திருப்பீர்கள். ஏழு முறை போரில் தோற்ற ஸ்கொட்லாந்து மன்னன் ரோபர்ட் புரூஸ் வெற்றி பெறக் காரணமாக இருந்ததும் இதுபோல ஒரு சிலந்தி வலைதான். தோல்வியில் நிலைகுலைந்த அவர், சோர்ந்து போய் ஒரு குகையில் பதுங்கி இருந்தார். அங்கு ஒரு சிலந்தி வலை பின்னியதாம். அந்த வலை அறுந்து அறுந்து விழுந்துகொண்டே இருந்திச்சாம். சிலந்தியும் மீண்டும் மீண்டும் மனம் தளராமல் வலை பின்னிக்கொண்டே இருந்தது. சிலந்தியின் முயற்சியைப் பார்த்தார், புரூஸ். கடைசியில் சிலந்தி வெற்றிகரமாக வலை பின்னி முடித்தது. அதைப் பார்த்து தானும் முயற்சித்தார். மீண்டும் வெற்றி பெற்றே தீருவேன் என்ற மனஉறுதியுடன் படையெடுத்தார், வெற்றி பெற்றார்.

இந்த எட்டுக்கால் சிலந்தியின் அடிவயிற்றுப்பகுதியில் இருக்கும் ஒருவித சுரப்பிகளில் இருந்து மிக நுட்பமான துவாரங்கள் மூலம் தான் இந்த நூல் வெளிப்படுகிறது. வெளியே வரும்போது திரவ வடிவத்தில் இருக்கும் நூல் காற்றுப் பட்டதும் இறுகி விடுகிறது. சிலந்தி நூலில் பலவகை உண்டு. ஒட்டிக் கொள்ளும் நூல் ஒன்று இருக்குது. இரையைப் பிடிப்பதற்காகவே விசேடமாக இந்த நூலைத் தயாரிக்கிறது சிலந்தி. சிலந்தி வலைக்கு குறுக்காக போகும் நூல் ஒட்டாத நூல். முட்டையிடும்போது அதை சுருட்டப் பயன்படும் நூல் பஞ்சு மெத்தை மாதிரி இருக்கும். வலுவாக நார் நாராகவும் இருக்கும். வலைகளில் நிறைய வடிவங்களில் இருக்குமாம். தரையில் மட்டுமல்ல நீரில் வாழும் சிலந்திகளும் இருக்கிறது. எல்லாச் சிலந்திகளும் வலை பின்னுவதில்லை.



இந்தப் படத்தில் இருக்கும் நீண்ட தடிமனான கோடுகள் நடுவில் மட்டும் சற்று வளைந்து இருப்பது போல தெரிகிறது அல்லவா? ஏன் என்று தெரியுமா?

**மஞ்சள்** காமாலை என்பது இரத்தத்தில் உள்ள பிலிருபின் (Bilirubin) என்ற பித்த உப்பு அளவு அதன் சாதாரண அளவை தூண்டுவதால் ஏற்படும் தன்மை. இது ஒரு நோய் அல்ல. மாறாக நோயின் அறிகுறி. இதை மூன்று வகையாக பிரிக்கலாம்.

1. கல்லீரல் பாதிப்பால் மஞ்சள் காமாலை: (HEPATIC JAUNDICE)

இது கல்லீரல் நோயின் காரணமாக கல்லீரல் தனது வேலையை ஒழுங்காக செய்யாததால் இரத்தத்தில் அதன் பித்த உப்பான அளவு கூடி மஞ்சள் காமாலை கண், நகம், தோல் ஆகியவற்றில் தெரிகிறது. இதன் பாதிப்பு கல்லீரல் முற்றிலும் செயல் இழந்து விடுதல், வயிற்றில் தண்ணீர் தேங்குதல் போன்ற விளைவுகள் ஏற்படலாம்.

காரணம்:

1) வைரஸ் கிருமிகள் Hepatitis A, B, C, D, E

2) பக்ரீரியாக்கள்

3) சில வகை மாத்திரைகள் Hepatitis A, E நீர் மூலம் மலம் மூலம் பரவுகிறது. Hepatitis B, C, D இரத்த மூலம் (இரத்தம் கொடுக்கும் போது பரவுகிறது) சுத்தப்படுத்தாத ஊசி, ஒரு ஊசி பலருக்கு போடுதல் தாயின் மூலம் சேய் போன்றவற்றால் B, C, D காமாலை பரவுகிறது. மாத்திரை பரசிட்டமோல் டெட்ராசைக்ளின் போன்றவை.

மி.கிராம் வரை செல்லலாம். இந்த மஞ்சள் காமாலை பற்றி கவலை இல்லை. தானாகவே சரியாகி விடும். கொஞ்சம் அதிகம் இருந்தால் காலை வெயிலில் காட்டலாம்.

**கவலைப்பட வேண்டிய மஞ்சள் காமாலை**

அ) பச்சிளங்குழந்தைகளில்

1) மஞ்சள் காமாலை பிறந்த முதல் நாள் வந்தால்.

2) மஞ்சள் கால் வரை பரவி இருந்தால்.

3) இரண்டு வாரம் வரை குறையாமல் இருந்தால்.

4) குழந்தை சோர்வுற்றுக் காணப்பட்டால்.

5). தாய்க்கு இரத்த குறூப் நெகடிவ் 'ஓ' குறூப் ஆக இருந்து 2ஆவது அதற்கு மேல் பிரசவமான குழந்தை.

6) பிறவி குறைபாடுள்ள குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை.

ஆ) பிறந்த முதல் நாள் மஞ்சள் காமாலைக்கு காரணம்:

1) இரத்த குறூப் ஒவ்வாமை தாய்க்கு Negative Group சேய் Positive தாய் O Group வேறு குரூப்.

2) கர்ப்ப காலத்தில் கிருமிகளின் தாக்குதல்.

3) தாய் எடுத்த சில மாத்திரைகள்.

4)பிறவி இரத்த சிவப்பணு குறைபாடு.



இ) பிறந்த 3ஆவது நாளுக்கு மேல் வரும் மஞ்சள்

1) இரத்தத்தில் கிருமி தாக்குதல்.

2) பச்சிளங் குழந்தை கல்லீரல் கோளாறு.

3) பித்த நீர் போகும் வழியில் அடைப்பு.

4) மிக அரிதாக தாய்ப்பாலால்

# மஞ்சள் காமாலை என்பது என்ன?

வைத்தியம்: கல்லீரலுக்கு வேலை கொடுக்காமல் ஓய்வு கொடுப்பது. கொழுப்பு எண்ணெய் போன்றவை தவிர்க்க வேண்டும். தேவையற்ற மாத்திரை எடுக்கக் கூடாது. அதிகமாக குளுக்கோஸ், கரும்பு சாறு, மோர் பானங்கள் அருந்த வேண்டும். கல்லீரல் பதப்படுத்தும் டொனிக் குடிக்கலாம். இதற்கான தடுப்பூசி இப்போது உள்ளது. மஞ்சள் காமாலை (A) தடுப்பூசி, 2 வயதுக்கு மேல் 2 டோஸ், 6 மாத இடைவெளியில் மஞ்சள் காமாலை (B) தடுப்பூசி 3 டோஸ் 1 மாத இடைவெளியில் பிறந்த உடன் போட ஆரம்பிக்கலாம்.

2. பித்த நீர் செல்லும் பாதை அடைப்பால் வரும் மஞ்சள் காமாலை (Obstructive Jaundice)

கல்லீரல் மற்றும் பித்தப்பையில் இருந்து பித்த நீர் பித்த குழாய் வழியாக குடலுக்கு செல்லும் வழியில் பித்த குழாயில் அடைப்பு காரணமாக வரும் மஞ்சள் காமாலை, மலம் களிமண் நிறத்தில் போகலாம். பிறவியிலேயே பித்த குழாயில் அடைப்பு பித்த குழாய் வழியின் கட்டி மற்றும் பிறவி வேதியியல் குறைபாடுகள். இதற்கு தகுந்த பரிசோதனைக்கு பின் அறுவை சிகிச்சை அவசியம். இந்த மஞ்சள் காமாலை சாதாரண மஞ்சள் காமாலை போல் உணவு பத்தியம் மாத்திரை மூலம் குணப்படுத்துவது கடினம்.

3. சிவப்பு அணுக்கள் சேதமடைவதால் வரும் மஞ்சள் காமாலை (Haemolytic Jaundice)

இது (R, B, C) எனும் சிவப்பு அணுக்கள் சீக்கிரமாக சேதம் அடைவதால் வரும் காமாலை. இதற்கு இரத்த சிவப்பு அணுக்கள் பரம்பரை சம்பந்தப்பட்ட குறைபாடுகளால் வருவது அரிதாகும். சில நேரம் மலேரியா போன்ற கிருமிகள் அதிகம் தாக்குதல் வரும் போது இந்த காமாலை வருகிறது. தவறாக இரத்தம் ஏற்றுவதால் கூட வரலாம்.

4. பச்சிளங் குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை

பிறந்த உடன் பச்சிளங் குழந்தைகளுக்கு மஞ்சள் காமாலை வருவது இயல்பானதே. இதற்கு (Physiological Jaundice) என்று பெயர்.

1) பிறந்து இரண்டாவது நாளில் மஞ்சள் காமாலை ஆரம்பித்து 4-5 நாளில் அதிகம் இருந்து 10ஆவது நாள் குறைந்துவிடும்.

2) இரத்த Bilirubin அளவு 15

(தாய்ப்பால் நிறுத்தக்கூடாது).

5) சிறு குடல் அடைப்பு.

6) பரம்பரை வேதியியல் குறைபாடு.

7) தைரோய்ட் குறைப்பாடு.

ஈ) பிறந்த 2ஆவது நாள் முதல் 3வது நாளுக்கும் ஆரம்பமாகும் மஞ்சள்

**காமாலை காரணம்:**

1) இயல்பான மஞ்சள் காமாலை.

2) குறை மாத குழந்தைகளுக்கு வரும் மஞ்சள் காமாலை.

**வைத்தியமுறை:**

1) இயல்பான மஞ்சள் காமாலை குழந்தையை வெயிலில் காட்டினால் போதும் அல்லது டியூப் லைட் வெளிச்சத்தில் கீழ் வைக்கலாம்.

2) தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

3) தாய்க்கு Negative Group ஆனால், முதல் பிரசவத்திலே அதற்கான பிரத்யோக ஊசி போட வேண்டும்.

மருத்துவரின் அறிவுரைப்படி பரிசோதனை செய்து Photo therapy எனும் லைட் கீழ் கொடுக்கும் சிகிச்சை அல்லது இரத்த மாற்றும் சிகிச்சை பெறலாம். மேல் சொன்ன கவனமாக இருக்க வேண்டிய மஞ்சள் காமாலை தென்பட்டால் உடனே மருத்துவரை கலந்தாலோசிக்கவும். பரிசோதனை மற்றும் சிகிச்சை முறைகளைப் பற்றி முடிவு செய்வதில் உங்கள் மருத்துவரே சிறந்தவர். குறையாக குழந்தை மற்றும் எடை குறையுள்ள குழந்தைக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டால் உடனே மருத்துவரை அவசியம் கலந்தாலோசிக்கவும்.

**தடுப்புமுறை (எல்லாவயதினருக்கும்):**

தண்ணீரை கொதிக்க வைத்து குடிப்பது, கழிவறை பயன்படுத்துவது, தடுப்பூசிகள் போட்டுக் கொள்வது. Hepatitis B, Hepatitis A, ஊசி போடும் போது ஒவ்வொரு முறையும் புது Needle பயன்படுத்துவது, இரத்தம் ஏற்றும் போது கவனம்) தாய் கருவுற்றிருக்கும் போது சரியாக பேறு கால முன் பரிசோதனை செய்து அதற்கான இரத்த பரிசோதனை செய்து மருத்துவரின் அறிவுரையை நடைமுறைப்படுத்துவது.

நன்றி இணையம்




# திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

**நாங்கள்** பதுங்கியிருந்த பக்கமாக நாய் பாய்ந்து வந்ததைக் கண்டதும் மல்லாவின் திட்டங்கள் யாவும் பயனற்றுப் போய்விட்டன என்றுதான் நினைத்தேன்.

மாது சிங் ஆட்கள் பொலிசாருக்கு போக்குக் காட்டிக்கொண்டு அவர்களை நாம் தாக்க வசதியான இடத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

பரத் சிங் ஆட்கள் திடீரென்று பக்கவாட்டில் இருந்து பொலிசாரைத் தாக்கத் தொடங்குவர். பொலிசார் அவர்களை நோக்கித் திரும்பும்போது நாங்கள் பாய்ந்து தாக்க வேண்டும் என்பதுதான் மல்லாவின் திட்டம்.

எமது ஆட்களில் ஒருவன் அவசரப்பட்டு வெளியே தலை நீட்டியதால் அதனைக் கண்டு விட்டநாய் நாங்கள் இருந்த பக்கமாக வெறியோடு பாய்ந்து வந்தது.

பெரிய காதுகள் வளைந்திருக்க, கொழுத்த உடலோடு நாக்கைத் தொங்கப் போட்டபடி அந்த நாய் பாய்ந்துவருவதைப் பார்க்க எனக்குப் பயமாக இருந்தது.

நாய் பாய்ந்து வரத் தொடங்கியதால் அது வந்த திசையில் நீட்டிய துப்பாக்கிகளுடன் பொலிசாரும் ஓடிவரத் தொடங்கினார்கள்.

நாய் இப்போது நாங்கள் பதுங்கியிருந்த குன்றின் அருகே வந்துவிட்டது.

இன்னமும் சில அடிகள் எடுத்து வைத்தால் நம்மில் ஒருவர் மீது பாய்ந்து விடும்.

பார்க்கவே பயமாக இருந்தது. என் நெஞ்சுக்குள் படக் படக் என்று அடித்தது. துப்பாக்கியைப் பிடித்திருந்த கரம் வெவெடவென்று நடுங்கியது.

மனித நாய்களைக் கண்டு கூட நான் இப்படிப் பயந்ததில்லை.

இத்தனை பெரிய, பயங்கரமான கொழு கொழு நாயை நான் இவ்வளவு கிட்டத்தில் பார்ப்பது இதுதான் முதற் தடவை.

அது குரைக்கும் சத்தமே காதுக்குள் பயங்கரமாகக் கேட்டது.

நான் மல்லாவைத் திரும்பிப் பார்த்தேன்.

நான் பார்க்கும்போதுதான் மல்லா தன் துப்பாக்கியை உயர்த்தி எதிரே பாய்ந்துவரும் நாயைக் குறிவைத்தான்.

மல்லாவிடம் பதட்டமோ, பயமோ சிறிதளவும் தெரியவில்லை.

எல்லோருமே துப்பாக்கிகளைத் தயாராக வைத்தபடி மல்லாவின் உத்தரவுக்காக பதுங்கியிருந்தார்கள்.

மல்லாவின் துப்பாக்கியில் இருந்து தோட்டா சீறிப் பாய்ந்துவிட்டது என்றால், நாங்களும் துப்பாக்கிகளை சீறவைக்க வேண்டும். அதுதான் 'சிக்னல்'.

நாய் பாய்ந்து பாய்ந்து எங்கள் அருகே மிக மிக அருகே...

ஐயோ... இது என்ன மல்லா ஏன் சுடாமல் இருக்...

ஐயோ நாய் கிட்டத்தில்...

"டுமீல்!"

மிகத் துல்லியமான சூடு. மிகவும் நிதானமாக, எவ்வித பதட்டமும் இல்லாமல் குறிவைத்து, விசையைத் தட்டியிருக்கிறான்.

குட்டிப் பிசாசு மாதிரிப் பாய்ந்து வந்த நாயின் தலை சிதறியது.

ஒரு மரண முனகலோடு நாய் சுருண்டு விழுந்தது.

மல்லா திடீரென்று எழுந்து முன்னோக்கி ஓடினான்.

சுட்டுக்கொண்டே ஓடினான். நானும் எழுந்து ஓடினேன்.

என் பின்னால் இருந்தவர்களின் துப்பாக்கிகள் பொலிசாரை நோக்கிச் சீறத் தொடங்கின.

"கொல்லுங்கடா...! சுடுங்கடா!" வெறிபிடித்தவன் போல மல்லா கத்திக்கொண்டே சுட்டுக்கொண்டிருந்தான்.

முன்னே பாய்ந்து தாவிய மல்லா மற்றொரு மலை இடுக்கின் மறைவில் இப்போது பதுங்கிக்கொண்டு பொலிசாரை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தான்.

நான் மல்லாவின் முதுகுக்குப் பின்னால் குந்தியிருந்தேன்.

நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. சுடலாம்தான். ஆனால் ஏனோ தயக்கமாக இருந்தது.

மல்லா சட்டென்று என்னைத் திரும்பிப் பார்த்தான். அதே வேகத்தில் முகத்தைத் திருப்பிக்கொண்டு பொலிசாரை நோக்கிக் குறிபார்த்தபடியே எனக்குக் கட்டளையிட்டான்.

"பயப்படாதே சுடு! காக்கிச் சட்டைகளை இரத்தத்தில் குளிப்பாட்டு. உன்னைத் துரத்தித் துரத்திக் கடித்தவர்கள்தான் எதிரே நிற்கிறார்கள் சுடு!"

மல்லாவின் கட்டளையும், அவன் வாயிலிருந்து வந்த சொற்களும் எனக்குள் நாடி நரம்பெல்லாம் தூண்டப்பட்டது போல, இரத்தமெல்லாம் சூடானதுபோல உணரச் செய்தன.

எனக்கு இப்போது மல்லாவைத் தெரியவில்லை. இதுதான் எனது முதலாவது சண்டை என்பதும் அதன் காரணமாக எழுந்த தயக்கமும் போன இடமும் தெரியவில்லை.



**"எமது ஆட்களில் ஒருவன் அவசரப்பட்டு வெளியே தலை நீட்டியதால் அதனைக் கண்டு விட்டநாய் நாங்கள் இருந்த பக்கமாக வெறியோடு பாய்ந்து வந்தது. பெரிய காதுகள் வளைந்திருக்க, கொழுத்த உடலோடு நாக்கைத் தொங்கப் போட்டபடி அந்த நாய் பாய்ந்துவருவதைப் பார்க்க எனக்குப் பயமாக இருந்தது. நாய் பாய்ந்து வரத் தொடங்கியதால் அது வந்த திசையில் நீட்டிய துப்பாக்கிகளுடன் பொலிசாரும் ஓடிவரத் தொடங்கினார்கள். நாய் இப்போது நாங்கள் பதுங்கியிருந்த குன்றின் அருகே வந்துவிட்டது. இன்னமும் சில அடிகள் எடுத்து வைத்தால் நம்மில் ஒருவர் மீது பாய்ந்துவிடும். பார்க்கவே பயமாக இருந்தது. என் நெஞ்சுக்குள் படக் படக் என்று அடித்தது. துப்பாக்கியைப் பிடித்திருந்த கரம் வெவெடவென்று நடுங்கியது."**

துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு மல்லாவின் வலதுபுறமாகச் சென்று பதுங்கிக்கொண்டு குறிபார்த்தேன்.

எங்கள் ஆட்களின் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து ஐந்தாறு பொலிஸ்காரர்கள் விழுந்து கிடந்தார்கள்.

பொலிஸ்காரர்களும் ஆங்காங்கே மலை இடுக்குகளுக்குள் மறைந்துகொண்டுதான் இப்போது எம்மை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தனர்.

திடீரென்று துப்பாக்கிச் சத்தங்கள் முன்னிலும் பார்க்க பயங்கரமாகக் கேட்கத் தொடங்கின.

"ஜே...ஜே..." மல்லா உற்சாகக் குரலில் கத்தினான்.

நான் முதன் முதலாகச் சண்டையில் ஈடுபடுவதால் துர்க்காதேவியை மனதில் நினைத்துக்கொண்டு துப்பாக்கி விசையை அழுத்தினேன்.

'டுமீல்' தோட்டா பறந்து சென்று எதிரே இருந்த மலைக்குன்றில் பட்டது.

(திருப்பங்கள் தொடரும்...)

# தாஜ்மஹால் மீது காதல்

தாஜ்மஹாலைக் காதலிக்காதவர்கள் யாராவது இருக்க முடியுமா. ராணா நாயகி தீபிகா படுகோனும் இதற்கு விலக்கில்லை. உலக அதிசயத்தில் ஒன்றாகவும், காதலின் சின்னமாகவும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தாஜ்மஹாலுக்கு கடந்த ஆண்டில் மட்டும் தீபிகா 3 முறை சென்றுள்ளார். அதுவும் பௌர்ணமி அன்று தனியாகச் சென்று இரசித்திருக்கிறார்.

பௌர்ணமி நிலவே அழகு, அந்த அழகு நிலவின் வெளிச்சத்தில் தாஜ்மஹால் கொள்ளை அழகாகத் தெரியும். இதை பார்த்து ரசிக்கத்தான் தீபிகா தனியாகச் சென்றாராம். தீபிகாவின் இந்த இரகசிய தாஜ்மஹால் விசிட் அவர் நண்பர்களில் சிலருக்கு மட்டும்தான் தெரியுமாம்.

கடந்த ஆண்டு சூட்டிங்கிற்காக முதன்முதலாக தாஜ்மஹால் சென்றுள்ளார். அதன் அழகில் மயங்கி திரும்பத் திரும்ப சென்று கொண்டிருக்கிறார். தாஜ்மஹாலில் அப்படி என்னதான் பார்த்தாய்? என்று நண்பர் ஒருவர் கேட்டதற்கு தீபிகா கூறியதாவது, நிலா வெளிச்சத்தில் தாஜ்மஹாலை பார்த்துக் கொண்டே இருப்பது நிம்மதியைத் தருகிறது என்று பதிலளித்தாராம்.

# உலகம் சுற்றும் கமல்

கிட்டத்தட்ட உலகை ஒரு சுற்று சுற்றிவிட்டு, சென்னையில் இறங்கியுள்ளார் கமல்ஹாசன். எதற்கு இந்த சுற்றல், எல்லாம் விஸ்வரூபத்துக்காகத்தான். முன்பெல்லாம் எங்கெங்கே படப்பிடிப்பை வைத்துக் கொள்ளலாம் என ஆலோசனை செய்து அங்குள்ள ஆட்களுக்கு சொல்ல ஏற்பாடு செய்யச் சொல்வார்கள். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. நேரடியாக சம்பந்தப்பட்ட படப்பிடிப்புத் தளத்திற்கு சென்று, தங்கள் மனதில் உள்ள காட்சிக்கு அந்த இடம் பொருந்துகிறதா என்று பார்க்கிறார்கள்.

படத்துக்கு பட்ஜெட் போடுவது போல, இதற்கும் தனி பட்ஜெட். அப்படி போடப்பட்ட ஒரு பெரிய பட்ஜெட்டில் உலகைச் சுற்றிப் பார்த்து, படப்பிடிப்புத் தளத்தை தெரிவு செய்துவிட்டு வந்திருக்கிறாராம் கமல். உலகிலேயே இதுவரை யாரும் பார்த்திராத பகுதிகளில் இந்தப் படத்தைப் படமாக்கப் போகிறாராம். படத்துக்கு பட்ஜெட் ரூ.100 கோடி. ஓகஸ்ட் மாதம் படப்பிடிப்பு தொடங்குகிறது. முதல்கட்டமாக 45 நாட்கள் கனடா மற்றும் அமெரிக்காவில் படப்பிடிப்புக்கு திட்டமிட்டுள்ளனர். படத்தில் எல்லாம் முடிவாகிவிட்டது, ஒன்றைத் தவிர அது, நாயகி.



# வெற்றிக்கு அவசியம் பொருத்தமான நாயகன்

இயக்குனர் லிங்குசாமியின் திருப்தி பிரதர்ஸ் பேனரில் படம் செய்யும் இயக்குனர்களுக்கு புது அறிவுரை ஒன்றை சொல்லியிருக்கிறார். கதைக்கு பொருத்தமான கதாநாயகர் கிடைக்கும்போதுதான் படம் வெற்றி பெறும். கதாநாயகர் தெரிவில் கவனமாக இருக்க வேண்டும் எனத் தனது பேனரில் படம் இயக்க வருபவர்களுக்கு அறிவுரை வழங்குகிறார் இயக்குனர் லிங்குசாமி.

அப்படி சரியாக கதாநாயகனை தேர்வு செய்ததால் தான் 'மைனா' போன்ற படங்கள் மக்கள் மத்தியில் அதிகமாக பேசப்பட்டதாக லிங்குசாமி கூறினார்.



# வதந்தி

ஏற்பட்டு விவாகரத்து கே
பரத்தாகூர் சமீபத்தில் 'தகி
செலவு செய்யப்பட்டது. பூ
செய்தார், ஆனால் படம் ஓட
விட்டன. இதனால் பல கோடிகள்
தகராறுகள் ஏற்பட்டன. எனவே க
தொடர்ந்து இருப்பதாக கூறப்ப
பரத்தாகூருக்கும் எவ்வித கரு
என்னைப்பற்றிய வதந்திகளை

# விரைவில் பனை மரக்காட்டின் பாடல்கள்

AAA மூவி இன்டநஷனல் திரைப்பட நிறுவனம் தயாரிக்கும் 'பனைமரக்காடு' திரைப்படத்திற்கான கதாநாயகனாக இந்தியாவைச் சேர்ந்த அம்ருத்தும், கதாநாயகியாக இலங்கையைச் சேர்ந்த அக்ஷராவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இம்மாத இறுதியில் திரைப்படத்தின் பாடல் காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட இருப்பதுடன் ஓகஸ்ட் மாதம் பனைமரக்காடு திரைப்படத்தின் பாடல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியீடு செய்யப்படும்.

இந்தியா, உலகெங்கும் ஒரே நாளில் பாடல்களை வெளியீடு செய்வதற்கான முன்னேற்பாடுகளும் நடைபெற்று வருவதாக பனை மரக்காடு படக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# ரஜினிக்க

சிறுநீரக பிரச்சினை
சிங்கப்பூரில் இரு
நிலையில், இ
ரஜினியை பு
"என் வா
இருக்கிற
ஏ.ஆர்.ர
விரை
பட
பெ

# இந்தியி

'கேடி' படம் மூலம் தமிழி
திரையுலகப் பிரவேசம் நடந்
படம் தோல்வியடைந்தது. இ
திருப்பினார். இ
இந்திக்கு
அஜய்தேவ்
படமே அ
ஏறக்குறை
சிங்கம்
அடுத்து
இந்தி
இந்தப்
தமன்
செய்





# சமீராவின் கன்னட ஆசை

கன்னட படம் ஒன்றில் நடிக்க ஆசை தெரிவித்திருக்கிறார் சமீராரெட்டி, பல்வேறு மொழிப் படங்களில் நடித்திருக்கும் அவருக்கு இதுவரை கன்னட படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை.

இது குறித்து தன் இணையத்தளத்தில் சமீரா ரெட்டி கூறியிருப்பதாவது: கன்னட சினிமாக்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். சின்ன வயதில் நிறைய கன்னட சினிமாக்கள் பார்த்திருக்கிறேன். ஆனால் நடிகையான பிறகு எனக்குப் பிடித்த கன்னட சினிமாவில் ஒரு வாய்ப்புக் கூட எனக்கு வரவில்லை. கன்னட மொழி பேசும் என் தோழிகள் எப்போது கன்னட படத்தில் நடிக்கப் போகிறாய்? என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

நானும் வாய்ப்பை எதிர்பார்த்து தான் காத்திருக்கின்றேன். என்று கூறியிருக்கிறார் சமீராரெட்டி.

# சிம்பு தேடும் கவர்ச்சி?

இந்தியில் வெளியாகி வெற்றி பெற்ற 'தபங்' படத்தை தமிழ் சினிமா ரசிகர்களின் ரசனைக்கு தகுந்த மாதிரி ரீமேக் செய்து வருகிறார்கள். 'ஒஸ்தி' எனும் இப்படத்தில் சிம்பு நாயகனாக நடிக்கிறார். இந்த படத்தில் வரும் கலக்கலான குத்தாட்ட பாடலில் ஆட்டம் போட நயன்தாரா, மலைகா அரோரா, ஸ்ரேயா சரண் ஆகிய நடிகைகளை நாயகன் சிம்பு அணுகியுள்ளாராம். ஆனால் சிம்பு மற்றும் இயக்குனர் தரணி இருவரும் இதை மறுத்துள்ளார்கள்.

நாங்க தற்போது படத்தின் வசனக்காட்சிகளை எடுப்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்தி படத்தில் வருகிற மாதிரி தளம் போட்டு சண்டைக்காட்சிகளை எடுக்காமல் நிஜமாகவே ஒரு கட்டடத்தில் இருந்து இன்னொரு கட்டடத்திற்கு தாவுகிற காட்சியை எடுத்துள்ளோம். 'ஒஸ்தி' படத்தின் பாடல்கள் மொத்தத்தில் பட்டய கிளப்பும் என்பதை மட்டும் இப்போது சொல்லமுடியும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

நடிகை பூமிகாவும், யோகா பயிற்சியாளர் பரத்தாகூரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். தற்போது இருவருக்கும் கருத்து வேறுபாடு

# ந்தியை மறுக்கிறார் பூமிகா

ரத்து கேட்டு வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் செய்திகள் பரவியுள்ளன.
தில் 'தகிட தகிட' என்ற படத்தை தயாரிக்கிறார், இதற்காக பல கோடிகள்
ட்டது. பூமிகா நடித்து சம்பாதித்த பணத்தையெல்லாம் இந்த படத்துக்கு செலவு
டம் ஓடவில்லை, சில நாட்களிலேயே தியேட்டர்களில் இருந்து தூக்கப்பட்டு
காடிகள் நஷ்டம் ஏற்பட்டது. இதன் காரணமாக, இருவருக்கும் அடிக்கடி வாய்த்
னவே கணவரை பிரிவதற்காக விவாகரத்து கேட்டு மும்பை கோர்ட்டில் வழக்கு
கூறப்பட்டது. இதனை பூமிகா மறுத்தார். அவர் கூறியதாவது:- எனக்கும் கணவர்
வித கருத்து வேறுபாடும் இல்லை. எங்கள் உறவு வலுவாகவே இருக்கிறது.
தந்திகளை யாரும் நம்ப வேண்டாம், எனக் கூறினார்.

# செருப்புப் பிரியை!

தற்போது 'நண்பன்' படத்தில் நடித்து வருகின்ற இலியானாவிடம் உங்களுக்கு பிடித்த பொருள் எது என்று கேட்டால் சட்டென கீழே குனிந்து செருப்பை கழற்றுகிறாராம். காரணம் இலியானாவுக்கு செருப்பு என்றால் ரொம்ப பிடிக்குமாம்.

விதவிதமான செருப்புகள் அணிவதில் ஆர்வம் கொண்ட இலியானா, அழகான செருப்புகளை பார்த்து விட்டால் அதனை வாங்காமல் வீடு திரும்ப மாட்டாராம்.

நூற்றுக்கணக்கான ஜோடி செருப்புகளை வீட்டில் சேகரித்து வைத்திருக்கும் இலியானா, சமீபத்தில் 'நண்பன்' படப்பிடிப்பிற்காக ஸ்பெயின் சென்றபோது கூட விலை உயர்ந்த செருப்புகளை வாங்கி வந்திருக்கிறார்.

# க்காக பிரார்த்திக்கிறார் ரகுமான்

பிரச்சினைக்காக சிகிச்சை பெற்று வந்த நடிகர் ரஜினிகாந்த்,
ரில் இருந்து பூரண குணமடைந்து சென்னை திரும்பியுள்ள
பில், இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் தனது இணையத்தளத்தில்
ரியை புகழ்ந்து தள்ளியுள்ளார்.
"என் வாழ்வில் முக்கிய தூண்டுகோலாக ரஜினிகாந்த்
இருக்கிறார்" எனக் குறிப்பிட்டிருக்கிறார் இசைப்புயல்
ஏ.ஆர்.ரகுமான். மேலும் சுப்பர் ஸ்டார்ள
விரைவில் முழு உடல்தகுதி பெற்று 'ராணா'
படப்பிடிப்பில் கலந்து கொள்ள இறை வன-
டம் பிரார்த்தனை செய்வதாக ரகுமான்
குறிப்பிட்டுள்ளார். ராணா படத்தில்
இன்னும் இரண்டு பாடல்கள் மட்டுமே
பாக்கி உள்ளதாக கூறிய ரகுமான்,
ரஜினியின் வருகைக்காக
காத்திருக்கிறேன் என்றும்
குறிப்பிட்டுள்ளார்.


தில்
ரியீடு
ாக பனை

# யில் தமன்னா

ம் தமிழில் அறிமுகமான தமன்னாவின் முதல்
பசம் நடந்தது இந்தியில்தான். இவர் நடித்த முதல்
டந்தது. இதனால் தென்னிந்தியா பக்கம் கவனத்தை
னார். இப்போது முன்னணி நடிகையாக மீண்டும்
ந்திக்கு செல்கிறார்.
அஜய்தேவ்கானின் சமீபத்திய படங்களில் 'சிங்கம்'
படமே அதிக தொகைக்கு விற்பனையாகியுள்ளது.
ஏறக்குறைய 80 கோடிகள். தமிழில் வெளியான
சிங்கம் படம் இந்தியிலும் தயாரிக்கப்பட்டது.
அடுத்து தெலுங்குப் படமொன்றின்
இந்தி தயாரிப்பில் நடிக்கிறார்.
இந்தப் படத்திற்காக அவர்
தமன்னாவை சிபாரிசு
செய்துள்ளார்.



# தேன் கிண்ணம்



## திருமண வாழ்க்கை சிறக்க வேண்டுமா?

**மகிழ்ச்சியான**

திருமண வாழ்க்கை வாழ துணையின் உற்சாக ஒப்புதல் இல்லாமல் எந்த காரியங்களையும் தீர்மானிக்க வேண்டாம், என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

திருமண வாழ்க்கையில் கணவன், மனைவி இருவரும் தங்கள் துணை-களை தங்களில் சரிபாதியாக பாவித்துக் கொள்ள வேண்டும். கணவன், மனைவி இருவரில் யாராவது ஒருவர் தொடர்ந்து விட்டுக் கொடுத்துக் கொண்டே இருக்கக் கூடாது.

அப்படி விட்டுக் கொண்டிருந்தால், ஒரு கட்டத்தில் தனது உரிமைகளை ஏன் விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் தலைதூக்க ஆரம்பிக்கும். இந்த எண்ணம் வாய்த் தகராறில் ஆரம்பித்து விவாகரத்து வரை செல்ல வாய்ப்பு உள்ளது.

எனவே தம்பதியர் தங்களின் எண்ணங்கள், குண நலன்கள், எதிர்பார்ப்பு உள்ளிட்டவை குறித்து தங்கள் துணையிடம் சரியான நேரத்தில் கண்ணியமான முறையில் தெரிவித்துவிட வேண்டியது மிகவும் அவசியம்.

திருமணமான ஆரம்ப காலத்திலோ, காதலிக்கும்போதோ பரிசுப் பொருள்களை அதிகமாக வாங்கி கொடுப்பது வழக்கம். நாளாக நாளாக அந்த குணம் குறைந்துவிடும். இதனால் சில தம்பதியினருக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பிக்கும். இதனால் உடலின் எடை அதிகரித்து தங்களின் எடுப்பான தோற்றத்தை இழக்க நேரிடுகிறது. இதன் மூலம் தங்கள் துணையின் வெறுப்புக்கு ஆளாக நேரிடலாம். உடலை எப்போதும் கட்டுக்கோப்பாக மிடுக்காக தம்பதியினர் வைத்துக் கொள்வது சிறந்தது.

துணையிடம் உண்மையை மறைக்க தொடர்ந்து பலர் முயற்சி செய்வது வழக்கம். இந்த விஷயத்தில் கணவனா அல்லது மனைவியா என்ற வேறுபாடு கிடையாது. தங்களது இல்லற வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிடுமோ எனத் தொடர்ந்து பலர் உண்மையை மறைத்து வருவார்கள்.

ஒரு நாள் உண்மை தெரியவரும் நிலையில், மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்து விவாகரத்து வரை செல்லும் அளவுக்கு நிலைமை மோசமாகும். தம்பதியர் ஒரு வாரத்தில் குறைந்தது 15 மணி நேரம் தனிமையாக இருக்க வேண்டும். தங்களுக்குள் பிரச்சினை நிலவினால் 25 மணி நேரம்கூட செலவழிக்கலாம்.

## புதுமைப்பெண்ணே நீ எங்கே?



பாரதி கண்ட புதுமைப் பெண்ணே நீ எங்கே?
வீறு கொண்டு மீண்டும் எழுந்திடு.

வீட்டில், வெளியில், பிறதேசங்களில்
உள்ள அடிமைத்தளைகளை உடைத்தெறிந்து
நிமிர்ந்து நில்-மீண்டும் உன் பார்வையை
சமூகத்தை நோக்கி விழித்தெழ வை
உன் நிமிர்ந்த நன் நடையும் வீறுகொண்ட
பார்வையும் ஆண் ஆதிக்கத்தை-சரிக்கும்
போர்க்கருவிகளாக செயற்படுத்த முடியும்
ஆரம்பி.
உன் வீரமான செயலால் - பண்பான
நடத்தையால் பரிவான செயல்களால்
மீண்டும் ஆரோக்கியமான சமூகத்தை
கட்டியெழுப்பு-பெண்ணே நீ உறங்கிவிடாதே
அது ஆண் ஆதிக்கத்தை தூண்டக் காரணமாக
அமையும்-நீ விழிந்தெழுந்தால் உலகமும்
வீர மங்கையாய் செயற்படும்
புதுமைப் பெண்ணே நீ விழித்தெழு-பூமி
உனக்காகக் காத்திருக்கின்றது!

ஜெ.மிதிலா-தெஹிவளை

## ஒழித்துவிடு

ஆண் பெண்ணென்று இரு சாதி
அதற்குள்ளும் பல சாதி
சாதி சொல்பவன் சாக்கடை மனிதன்
வியாதி தரும் நோய்காவியாவான்.

சாதி பார்க்காதே சாதித்துப்பார்
அறுத்து விட்டு துடைத்தெறி
கொஞ்சமும் மிச்சம் வைக்காதே
புது வசந்தம் வீசட்டும்.

புதியவர்களே புரிந்துகொள்ளுங்கள்
உதட்டுச் சாயம் தான் சாதி
மாறி மாறி ஏன் கேலி
மனதை பார்ப்பதுதான் நியதி.

பாரதி சொல்லும் கதையைக் கேள்
பசுமையான உலகைப் பார்
சாதி பார்த்து பிரிக்காதே
ஜனனம் வழி வந்ததுதான் மரணம்.

பகவத் கீதையைப் படி
உன்னையே-நீ அறிவாய்
உன்னில் இருந்து எடுத்துவிடு
சாதியை முற்றாக ஒழித்துவிடு.


ச.ஜெயரூபினி-ஆரையம்பதி.

## இணையாத எங் காதல்...

எனக்கும் தெரியும்
உனக்கும் தெரியும்
இருவரும் சேர முடியாதென்று.
தெரிந்தும் காதலித்தோம்
விதியாவது நம்மை இணைக்குமென்று.
அதுவும் விலகிச் சென்றது
வற்றிப்போன குளத்தின்
மீனாய்
துடித்துப்போனேன்
சேராத காதலுக்காய்.
பல்லில்லாத கிழவன்
சொல்லுக்கு ஆசை கொள்வதாய்
நாமும் ஆசை கொண்டோம்.
இணையாத தண்டவாளமாய்...
சோகம் பாடும் கருங்குயிலாய்
சோதனைகள் உரைக்கின்றேன்
வெண்டாமரை உன்னை நினைத்து
வெந்து துடிக்கின்றேன்.

யோ.சுதர்சன்-யாழ்ப்பாணம்.

## புகைத்தல்



காசைக் கரியாக்கி
காலத்தை விரயமாக்கும்
நவீன கருவி.

ஆயுளைக் குறைத்து
சூழலைக் கெடுக்கும்
கொடூர விசம்.

எதிர்கால
தலைமுறையை
ஊனமாக்கும்
ஊக்க மருந்து
ததும்ப வாழ்வை
சிதைத்து
கொடிய நோயை
விதைக்கும்.

கனவை வளர்த்து
வாழ்வைக் கெடுக்கும்
உண்மையை ஒழித்து
ஆண்மையை அழிக்கும்

நெஞ்சை நெருப்பாக்கி
நஞ்சை அமுதாக்கும்.

சமூக சரியை
சாய்ந்து
சாக்கடை நாத்தம்
பிறக்கும்.
சரீர பலம்
குறைந்து
சஞ்சல வாழ்வு
சங்கமிக்கும்.

பேதையை
போதையாக்கும்
மேதையை
பேதையாக்கும்
பாதையை
புகையாக்கும்
பாவையை
பகையாக்கும்.

ஒலுவில் -ஐயூ ஹாதிம்.

## ஒரே நம்பிக்கை...

அதீத அழுகையால்
வெடித்துச் சிதறுகிறது
என் உள்ளம்
ஓராயிரம் தாரகைக் கூட்டம்
என்னைப் பார்த்து எச்சில்
துப்பியதை நினைத்து நினைத்து.

வாருங்கள் என் கண்ணீர்
துளியின் அழுகுரலைக் கேளுங்கள்
வாயு மண்டலத்தில் சிறகுடைந்து
மிதக்கும் எனக்கு இறகு தாருங்கள்.

நட்டநடு இராத்தியில்
நான் அழுத கண்ணீர்த்துளி
இன்னும் என்வீட்டு மூலையில்
தேங்கிக் கிடக்கிறது ஓராயிரம்
தாரகைக் கூட்டம் என்னைப் பார்த்து
கேட்டுச் சென்ற துர்ப்பாக்கிய வார்த்தைகளை
நினைத்து நினைத்து...!

என் மரணப்படுக்கையில் கூட
காத்திருக்கின்றேன் அந்தத் தாரகைக் கூட்டம்
என் வீட்டில் கால்பதிக்கும் என்ற
ஒரே நம்பிக்கையில்.

அர்ஸாத் அலீ,
கிண்ணியா மத்திய கல்லூரி.

# முகத்தின் பளபளப்புக்கு....



வெயில் காலங்களில் எண்ணெய்ப் பசை இல்லாமல் சருமம் பளிச்சென இருக்க இதோ சில குறிப்புகள்:

முதலில் பால் ஏட்டை முகத்தில் தடவி, பஞ்சு மூலம் முகத்தில் உள்ள அழுக்கை எடுக்க வேண்டும். பப்பாளி, அப்பிள் கலந்து முகத்துக்கு 10 நிமிடங்கள் மசாஜ் கொடுக்கவும். பிறகு துளசி, புதினா இலைகளு டன் தண்ணீரைக் கொதிக்கவைத்து முகத்துக்கு ஆவி பிடிக்கவும். (ஆவி பிடித்தால் முகத்தில் உள்ள இறந்த செல்கள் வெளியேறும்.) ஒரு முட்டைக் கரு, எலுமிச்சம்பழச் சாறு, தயிர், கடலை மா, எல்லாவற்றையும் கலந்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் ஊறவைக்கவும். கடைசியாக குளிர்ந்த நீரால் முகத்தைச் சுத்தப்படுத்தவும் இப்படி வாரம் ஒரு முறை செய்து வந்தால், முகம்பொலிவுடன் காணப்படும்.

பச்சை உருளைக்கிழங்கின் சாற்றை முகத்தில் தடவி வர சூரியக்கதிர்களால் ஏற்படும் கருமை நிறம் மாறும்.

2 கரண்டி முள்ளங்கி சாற்றுடன் 2 கரண்டி மோர் சேர்த்து, முகத்தில் தடவி, ஒரு மணிநேரம் கழித்து, சுடுநீரில் முகத்தை கழுவ வேண்டும். இதை தின சரி செய்துவர, வெப்பத்தால் முகத்தில் ஏற்படும் தவிட்டு நிறமுள்ள புள்ளி மறையும்.

புளித்த மோரை முகத்தில் 15 நிமிடம் தடவி, மிதமான சுடுநீரில் கழுவ முகம் பொலிவு பெறும். இதை தொடர்ந்து 15 நாட்களுக்கு செய்து வர நல்ல பலன் கிடைக்கும்.

# கணவன் - மனைவிக்கு இடையேயான விட்டுக்கொடுப்பு



**மகிழ்ச்சியான** குடும்பத்தைக் கட்டியெழுப்பும் விடயத்தில் கணவன் - மனைவிக்கிடையிலான விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு அதீத முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கே இருவரினதும் 'உள்வாங்கல்கள்' ஆதிக்கம் செலுத்தும் நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. குடும்பத்தில் நிகழும் ஏதோவொரு குறித்த விடயத்தில் இருவருக்குமிடையில் வெவ்வேறான உள்வாங்கல்கள் நிலவலாம். இதனால் இங்கே கருத்தொற்றுமை காணப்படாத சூழல் நீடிக்கும்.


இருவரின் உள்வாங்கல்கள் மாற்றமடையாமல் - முரணாக - இருந்தபோதிலும், ஒருவர் சார்பாக மற்றவர் சந்தர்ப்ப சூழல்களை கருத்தில்கொண்டு இறங்கிவருதல் அல்லது இணங்கிவருதலே விட்டுக்கொடுத்தல் எனப்படும். மாமிசம் புசிக்காத மனைவி, கணவனுக்கு அதை சமைத்துப்போடுவது இந்த விட்டுக்கொடுத்தல் மனப்பாங்கினால் உருவானதே. ஆனால் இங்கு இருவரும் தத்தமது கொள்கைளை அதாவது மனைவி மாமிசம் சாப்பிடுவதுமில்லை, கணவன் அவளை வற்புறுத்துவதுமில்லை என்ற நிலைப்பாட்டினால் குடும்பத்தில் மாமிசம் தொடர்பாக எந்தப் பிரச்சினையும் தலைகாட்ட நியாயமில்லை.

இந்த விட்டுக்கொடுக்கும் கொள்கை நடைமுறைப்படுத்த முடியாத விடயங்களுக்கும் பொருந்தும் என்பது பகற்கனவு. "தன் கணவன் இன்னொருவன் மனைவிமீது ஆசைப்படுதல்" என்ற விடயத்தில், முன்னர் மாமிசம் தொடர்பாக விபரிக்கப்பட்ட அதே மனைவி இதிலும் விட்டுக்கொடுப்பாள் என்பது நடக்காத காரியம். இங்கே சமய - கலாச்சார விழுமியங்கள் தலையிடும். 'சாகக் கொடுத்தாலும் போகக் கொடுக்கமாட்டாள்' என்பார்கள்.

தர்மத்தை மீறிய அந்த முரணான உள்வாங்கலை கணவன் உதறித்தள்ள வேண்டும்.

ஆத்மீகம், தொழில், குடும்பம் என்ற வட்டங்களில் சமநிலை பேணும் எந்தக் கணவன்-மனைவிக்கும் எப்படியான முரணான உள்வாங்கல்களையும் உதறிவிடல் சாத்தியம். அதுவே உண்மையான விட்டுக்கொடுத்தல். குடும்ப விட்டுக் கொடுத்தல்களில் அதிக பங்களிப்பு பெண்களுக்குத்தான் போலிருக்கிறது. இல்லையென்றால் 'ஆண்களின் வெற்றிக்கு பெண்களே காரணம்' என்று முன்னோர்கள் கூறியிருக்கமாட்டார்கள்! மேலே விபரித்த விடயங்களோடு கணவன் - மனைவிக்கிடையில் ஒற்றுமைப்படல், அன்மித்திருத்தல், தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படையாக்குதல், இருவருக்கிடையிலான தொடர்பை நலமாகப் பேணுதல் ஆகிய விடயங்களும் நடைமுறையில் காணப்பட்டால் அவர்களின் 'மகிழ்ச்சியான குடும்பக் கட்டமைப்பு' நீடித்து நிலைத்திருக்கும்.

## சல்வார்களுக்கான அழகான டிசைன்கள்






# குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுங்கள்

**பிரசவத்தை** எதிர்நோக்கி காத்திருக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கு பல சந்தேகங்கள் ஏற்படலாம். அவற்றில் முக்கியமானது தாய்ப்பால் சுரப்பு எவ்வளவு இருக்கும் என்பது. பொதுவாக குழந்தை பெற்றெடுத்த ஒரு நலமான பெண்ணுக்கு சுமார் 850 மில்லி லீற்றர் தாய்ப்பால் தினமும் சுரக்கும். இந்த தாய்ப்பால் சுரப்பு காரணமாக அந்த தாயானவள் தினமும் சுமார் 600 கலோரியை கூடுதலாக இழக்க வேண்டியது இருக்கிறது.



சத்தான கீரை வகைகள், காய்கறிகள், பால், பழங்கள், புரதம் மிகுந்த உணவு பொருட்கள், தேவையான நீர் போன்றவற்றை சரியான விகிதத்தில் அந்த தாயானவள் எடுத்து வந்தால், அவளது தாய்ப்பால் சுரப்பால் ஏற்படுகின்ற கலோரி இழப்பு ஈடு செய்யப்படும். அதைத் தவிர்த்து, சத்து குறைவான உணவு வகைகள் அவளுக்கு கொடுக்கப்பட்டால் அவளது உடல் திறனும் பாதிக்கப்படும் தாய்ப்பால் சுரப்பும் குறைந்து விடும்.


பிறந்த குழந்தைக்கு முதல் உணவாக டாக்டர்கள் பரிந்துரை செய்வது அதன் தாய்ப்பாலைத்தான். அதில் இல்லாத சத்துக்களே கிடையாது. தாயிடம் இருந்து முதன் முதலாக கிடைக்கும் பாலை சீம்பால் என்கிறார்கள். பிறந்த குழந்தையின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி மிகவும் குறைவாக இருக்கும். சீம்பாலில் அந்த சக்தி அதிகமாக உள்ளது. அந்த சீம்பாலைக் குழந்தைக்கு கொடுப்பதன் மூலம் அதன் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. அதனால், எளிதில் அந்தக் குழந்தையை எந்த நோயும் தாக்காது.

நீண்ட நாட்களுக்கு குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்று ஆராய்ச்சிகளே நிரூபித்துள்ளன. இதுமட்டுமின்றி, தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் தாய்க்கும், குழந்தைக்கும் இடையேயான பாசப் பிணைப்பு பலப்படுகிறது.

ஆனால், இன்றைய அவசர உலகில், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு, குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கவே நேரம் இல்லை. அதனால் விரைவிலேயே புட்டிப்பாலுக்கு தாவி விடுகிறார்கள். அத்துடன், தாய்ப்பால் சுரப்பும் அவர்களிடம் குறைந்து போய் விடுகிறது. அவர்கள், மனதை அமைதியாக வைத்திருந்தால் தாராளமாக தாய்ப்பால் கொடுக்கலாம். தாய்ப்பால் சுரப்பில் பிரச்சினையே இருக்காது என்கிறார்கள் மருத்துவர்கள்.

வேலைக்கு செல்ல வேண்டும் என்கிற அவசரம் -பதட்டம், மன நெருக்கடி, கோபம் போன்றவற் றுக்கு ஒரு தாய் ஆளானால் அவரிடம் தாய்ப்பால் சுரப்பு குறைந்து போகும். அதனால் தாய்மார்களே... உங்கள் மனதை எப்போதும் ஓய்வாக . வைத்திருங்கள்.

# இறால் பிரியாணி



**பச்சரிசி - அரை கிலோ, இறால் - 1/4கிலோ, வெங்காயம் - கால் கிலோ**
**தக்காளி - மூன்று, பச்சைமிளகாய் - நான்கு, பூண்டு - பத்து பல், இஞ்சி - 2 அங்குல துண்டுகள், மிளகாய்**
**தூள் - 3 தேக்கரண்டி, மஞ்சள் தூள் - 1/2 தேக்கரண்டி, எண்ணெய் - 1 குழி கரண்டி, நெய் - 2 மேசை கரண்டி**
**கறிவேப்பிலை - 1 கொத்து, கொத்தமல்லி - 1 பிடி, புதினா - 1 பிடி, உப்புதூள் - 2 தேக்கரண்டி, பட்டை - 2 துண்டுகள்**
**கறுவா இலை - 2 எண்ணிக்கை**

**செய்முறை**

முதலில் பச்சரிசியை உதிரி உதிரியாக வடித்து கொள்ளவும். இறாலை நன்கு சுத்தம் செய்துக்கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய்யை ஊற்றவும். காய்ந்ததும் வெங்காயம் தக்காளி, பச்சைமிளகாய், ஆகியவற்றை நீளமாக நறுக்கிப் போடவும். பிறகு பட்டை கறுவா இலை கறிவேப்பிலை, இறாலை போட்டு நன்கு வதக்கவும். பொன் நிறமாக வதங்கியதும் தட்டி வைத்துள்ள இஞ்சி பூண்டு, மிளகாய்தூள், மஞ்சள்தூள், உப்புதூள் போட்டு நன்கு கிளறவும். அரை கோப்பை தண்ணீர் ஊற்றி வேகவைக்கவும். மசாலா தொக்கு போல் ஆன உடன் கொத்தமல்லி, புதினாவை போட்டு கிளறவும். பிறகு வடித்து வைத்துள்ள சோற்றை கொட்டி, நெய்யை ஊற்றி நன்றாக கிளறிவிட்டு இறக்கி வைக்கவும். சுவையான இறால் பிரியாணி தயார்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 278**

கேள்வி : ஒரு தாய்க்கு பால் சுரப்பதால் எத்தனை கலோரி சக்தி இழக்கப்படும்.?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 278**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **03.08.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

**பரிசுப் போட்டி இல:- 276 இற்கான விடை :-** பவுடர் மேக்கப் சிறந்தது.
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:-** C.நித்திரதேவி, 32, பாடசாலை வீதி, பாண்டிருப்பு, கல்முனை.

**278**

**பெயர்** : ..............................
**முகவரி** : ..............................
..............................
..............................
**தே.அ. அட்டை இல** : ..............................
**விடை** : ..............................
**கையொப்பம்** : ..............................

# வற்றாத நீர் ஊற்று

முன்னாள் இலங்கைக் கிரிக்கெட் அணித்தலைவர் குமார் சங்கக்கார இப்போது அணியில் ஒரு முன்னணி துடுப்பாட்ட வீரர். இந்த நிலை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் எனத் தெரியவில்லை. MCC நடத்திய கொலின் கௌட்ரி கிரிக்கெட்டின் சாரம் என்னும் சொற்பொழிவுத் தொடரில் இவ்வருடம் ( சில தினங்களுக்கு முன்) சொற்பொழிவாற்றியவர் குமார் சங்கக்காரா. லோர்ட்சில் 1500 பேர் முன்னிலையில் சங்கா இவ்வுரையை நிகழ்த்தினார். மைதானத்தில் எவ்வித சர்ச்சைகளுக்கும் உள்ளாகாமல் கிரிக்கெட் ஆடும் வீரர் இவர். கிரிக்கெட்டில் இந்திய அணித்தலைவர் மிஸ்டர் கூல் என்று அழைக்கப்பட்டால், இவருக்கும் அப்பெயர் பொருந்தும். ஆனால், அற்புதமான, யாருக்கும் கிடைத்தற்கரிய சந்தர்ப்பத்தில் இவர் தன் பெருமையை அந்த உரையின் மூலம் பெற்றுக்கொண்டார். ஆனால் உள்ளூரில்தான் அவருக்கு உயர்மட்டத்தில் ஆதரவு கிடைக்கவில்லை. மேலும் ஒப்பந்தத்தில் உள்ள ஒரு வீரர் தன்னைப் பற்றிப் பேசலாம். உள்ளூர் கிரிக்கெட் பற்றிப் பேசியிருக்கக் கூடாது என்ற வகையில் இவரிடம் விளக்கம் கோரப்படவிருக்கிறது.



சங்கா தன் உரையில், இலங்கையின் கிரிக்கெட் வரலாறு பற்றி ஏற்றங்கள் இறக்கங்கள் பற்றி விலாவாரியாக எடுத்துக் கூறியுள்ளார். இந்த உரையின் ஊடே சமகால கிரிக்கெட் சபையை அதன் திறனற்ற செயற்பாடுகள், ஊழல் , அரசியல் தலையீடு என்பன பற்றி மிகவும் குறைவான நேரத்தையே செலவழித்துக் கருத்துக் கூறியிருந்தாலும், அதுவே பெரிதுபட்டு இவர் மீது குற்றம் காணப்படுகிறது. இதற்கு முக்கியமான ஒரு காரணமாக தனதுரையில் முன்னாள் இல. அணித்தலைவர் , 1996இல் உலகக் கிண்ணம் வென்ற அர்ஜுன ரணதுங்கவைப் போற்றிப் புகழ்ந்து பேசியது மட்டுமல்ல, இலங்கைக் கிரிக்கெட்டின் மீட்பர் என்றும் பேசியதும் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இதில் ஏதோ அரசியல் இருப்பதுபோலவும் படுகிறது.

சர்ச்சைகளுக்கு அப்பால் நின்று பார்த்தால், இந்த உரையின் காரணமாக இலங்கைக்கு ஒரு கௌரவத்தை சங்கா ஏற்படுத்தியுள்ளார் என்றே பலரும் கருதுகிறார்கள். இவரது ஆங்கிலம், விடயங்களைத் தெளிவாக எடுத்துக் கூறிய முறை, விடய ஞானம், என்பவற்றின் காரண-மாக எல்லோராலும் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளார். MCCயின் முக்கிய பிரமுகரான மார்க் நிக்கலஸ் கூறுகையில், தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஆச்சிபிஷப் டெஸ்மண்ட டுட்டுவுக்குப் பின்னர், அடுத்து பெருத்த வரவேற்பைப் பெற்ற உரை சங்கக்காரவின் உரைதான் என்று புகழாரம் சூட்டியுள்ளார். இதைவிட இன்னும் பலரும் இவருக்குப் புகழாரம் சூட்டியுள்ளனர். ஆனால் தன் நாட்டில் ஒரு சாரரால் விமர்சிக்கப்படுகிறார். இது தவறு என்று கூறுகிறார்கள் விமர்சகர்கள். காலங்காலமாக இலங்கைக் கிரிக்கெட்சபை செய்து வரும் பிழையை சங்கக்கார விடயத்தில் செய்துவிடக் கூடாது என்றும் இலங்கைக் கிரிக்கெட் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர்கள் கூறுகிறார்கள். அதாவது கடந்த காலங்களில் இலங்கை அணியின் வளர்ச்சிக்கு எவ்வளவோ பங்களிப்புச் செய்திருக்கக் கூடிய றொகான் மகாநாம, ரஞ்சன் மருகல்ல, றொமேஷ் ரட்நாயக்க ஆகி-யோரின் சேவையை பிழையான அணுகுமுறைக-ளால் இழந்தோம். குமார் சங்கக்கார இலங்கைக் கிரிக்கெட்டில் காணப்படும் ஊழல்கள், தலையீடுகள், பிழையான செயற்பாடுகள், போன்றவற்றை தன் மனச்சாட்சிக்குப் பிழை இல்லாமல் எடுத்துக் காட்டியுள்ளர்.இவற்றுக்காக குமார் சங்கக்கார இலங்கைக் கிரிக்கெட்டில் இருந்து ஒதுக்கப்படுவாரானால், இலங்கை மிகச் சிறந்தது என்றும் பெறமுடியாத வளத்தை இழந்துவிடும் என்று எச்சரிக்கிறார்கள். என்னதான் சொன்னாலும் இலங்கை மற்றும் IPL ரசிகர்கள் மத்தியில் இவருக்குள்ள செல்வாக்கு அபரிதமானது அசைக்கமுடியாதது.

# விடை தெரியாத வினாக்கள்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் இண்டிகாப் ஆலம் பாகிஸ்தான் அணியின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துக் கூறும் போது அணியில் உள்ள வேறு-பாடுகள் மற்றும் முரண்பாடுகளுக்கு அணி வீரர்களே காரணம் என்று கடுமையாகக் குற்றம் சாட்டி இருந்தார். அதுவும் கடந்த மூன்று வருடங்களாக அணியில் பாரிய பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அதிகளவான வீரர்கள் அணிக்குள் வருவதும் போவதுமான நிலை. மறுபுறம் அணித்தலைமை ஸ்திரம் இல்லாமல் அடிக்கடி மாற்றம் பெற்றமை. அதோடு ஆட்ட நிரணய சர்ச்சையில் மூன்று பேர் சிக்கிக் கொண்டமை. இப்படியான சூழ்நிலையில் வீரர்களின் செயற்பாடுகளும் திருப்திகரமாக அமையவில்லை. ஆலம் கூறும்போது, முக்கியமான கிரிக்கெட்சபைக் கூட்டங்கள் அந்தரங்கமாக நடைபெற்றாலும் கூட அந்த விடயங்கள் அடுத்த பதினைந்து நிமிடங்களுக்குள் ஊடகங்களுக்குத் தெரிந்து விடுகின்றன. இதற்கு வீரர்களே காரணம். சில விடயங்கள் சபை, மற்றும் வீரர்களுக்கு மட்டும் தெரிந்தவையாக இருக்க வேண்டும். ஆனால் ஒருவருக்கு ஒருவர் குழிபறிக்கும் நோக்கில் செயற்பட்டு விடயங்களைப் பகிரங்கப்படுத்தி பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்குப் பாதகத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள் என்று கூறியுள்ளார்.

வீரர்கள் தங்கள் அதிருப்திகளைக் கிரிக்கெட் சபையுடன் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பது இவரது வாதம்.

சாஹிட் அப்ரிடியின் தலைமைப் பதவி நீக்கத்தின் பின் அணித்தலைவராக நியமிக்கப்பட்ட மிஸ்பா உல்ஹக்கும் இதே விடயங்களைச் சற்று வித்தியாசமாக எடுத்துக் கூறியுள்ளார். தற்போதைய சூழ்நிலையில் பாகிஸ்தானுக்கு விளையாடுவதென்பது மிகுந்த மனநெருக்கடிக்கும், அழுத்தங்களுக்கும் உட்பட்ட ஒரு விடயமாக இருக்கின்றது என்று அவர் கூறியுள்ளார். அணியில் முடிவில்லாத சர்ச்சைகள், ஆட்டநிர்ணய சதிவிடயங்கள், அதோடு, கிரிக்கெட் சபைக்கும், வீரர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் தன்னைப் பெரிதும் பாதிப்பதாக அவர்



சுட்டிக்காட்டுகிறார். சாஹிட் அப்ரிடி அணித்தலைமையில் இருந்து நீக்கப்பட்டாலும் அவர் ராஜினாமா நாடகத்தை அரங்கேற்றினார். இது ஒரு குழப்பத்தை உருவாக்கியது. இதேபோல் டனிஸ் கனேரியா அணியில் இருந்து நீக்கப்பட்டதும், அவர் நியாயம் கோரி நீதிமன்றத்துக்கே சென்றுவிட்டார். ஆனால் கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பம் இட்டபின் இப்படியான செயற்பாடுகள் தார்மீக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படமுடியாதவை என்பதும், ஒப்பந்தத்தை மீறி நடக்கக்கூடாது என்பதும் மிஸ்பாவின் கருத்து. ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் கூறும் கருத்து வேறு விதாக இருக்கிறது. இஜாஸ்பட் போன்றவர்கள் அரசாங்க செல்வாக்குடன் பதவிகளைப் பிடித்துக்கொண்டு தம் அதிகாரத்தைக் காட்டிக்கொண்டிருப்பவர்கள். உதாரணத்துக்கு சஹிட் அப்ரிடி மீது கொண்ட தனிப்பட்ட காழ்புணர்ச்சியே அவரை அணித்தலைமையில் இருந்து நீக்கியது எனவும். இப்படியான மன உளைச்சல்களைக் கொடுத்து அப்ரிடியை அணியில் இருந்து முழுமையாக அகற்றும் சதியே இதுவொன்றும் கூறப்பட்டது.

எனினும் மிஸ்பா இப்போது அணித்தலைவர் என்பதால் பட்டும்படாமலும் பேசிக்கொண்டு பரந்த ஒரு பார்வையை முன்வைக்கிறார். அதாவது ஒரு அமைப்பினை உருவாக்கி அதன் மூலம் தற்போதுள்ள வீரர்களுக்கும் புதிதாக தேசிய ரீதியில் வளர்த்தெடுக்கப்பட்டவுள்ள வீரர்களுக்கும் பல்வேறு விடயங்களைப் போதிகக வேண்டும் என்கிறார்.

ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சார்ந்த சர்ச்சைகள் அவ்வளவு விரைவில் தீர்க்கப்படக் கூடியவை அல்ல என்பது, நீண்டகாலமாக பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அவதானித்துக்கொண்டு வருபவர்களுக்கு நன்கு புரியும். பொதுவாகவே எல்லாத் தரப்பினரும் ஒருவரை ஒருவர் குறைகூறுவதும், முரண்படுவதும் சர்வசாதாரணம். அதிலும் அவலம் என்னவென்றால் மைதானத்தில் இறங்கும் பதினொரு வீரர்கள் இடையேகூட ஒத்த கருதது இன்மை என்பதாகும். இதுபற்றி பல கிரிக்கெட் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். மூத்த வீரர்கள் இரண்டு மூன்று கன்னைகளாகப் பிரிவதும் அவர்களின் பின்னர் இளையோரும் பிரிந்து நிற்பது ஒன்றும் புரியாத விடயம் அல்ல.

எனவே தற்போது சர்வதேச ஆட்டங்களையே தம் மண்ணில் விளையாடும் சந்தர்ப்பத்தை இழந்துள்ள பாகிஸ்தான் அணி ஒரே குடும்பமாக இணைந்து விளையாடுவது எப்போது? வீரர்கள், நிர்வாகிகள், தேர்வாளர்கள் என்று அனைவரும் ஒன்றிணைந்து பாகிஸ்தான் கிரிக்கெட்டை உன்னத நிலைக்குக் கொண்டு செல்வது எப்போது?இவை விடைதெரியாத வினாக்கள்.

# ஒதுக்கிவிட தீரகள்

இங்கிலாந்து கிரிக்கெட் சுற்றுப் பயணத்தைப் பெரிதாக முத்திரை ஒன்றும் பதிக்காமலே முடித்துக்கொண்டது. தில்ஷான் தலைமையிலான இலங்கைக் கிரிக்கெட் அணி. இங்கிலாந்துச் சுற்றுப் பயணத்துக்கு முன்னமே அணி பற்றிய தெளிவான பார்வையொன்றைப் பெற்றுக்கொள்ள இலங்கை ரசிகர்களால் முடியாது போயிருந்தது. தில்ஷான் அணித்தலைவராக நியமிக்கப்பட்டபோதும் உதவி அணித்தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. ஏஞ்சலோ மத்தியூஸ் காயப்பட்டிருப்பதால் அவர் சுகமடைந்ததும் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படக் கூடும் என்றும் ஒரு எதிர்பார்க்கை இருந்தது. ஆனால் மெண்டிஸ் தலைமையிலான புதிய தெரிவுக்குழுவும் ஒரு தடுமாற்ற நிலையிலேயே இருந்தது என்பது அதன் செயற்பாடுகளில் இருந்துதெரியவருவதாக விமர்சகர்கள் கருத்து முன்வைத்தனர். இதில் என்ன வேடிக்கை என்றால் இருபதுக்கு இருபது மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கு திலின கண்டாம்பி திடீரென உப தலைவராகக் கடமையாற்றுவார் என அறிவிக்கப்பட்டது. இது மேலும் சர்ச்சையை அதிகரித்துவிட்டது. தில்ஷானைத் தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் நீண்டகால நிரந்தர அணித்தலைவராக ஏஞ்சலோ மத்தியூஸ் நியமிக்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் திலினவின் உபதலைவர் நியமனம் புருவங்களை உயர்த்த வைத்தது.

இப்பொழுது என்னடாவென்றால் திறன்நிலைக் குறைவின் காரணமாக திலின ஐந்தாவது ஒரு நாள் போட்டிக்கான அணியில் இடம்பெறவே இல்லை. திலினவின் நிலை குறித்துக் கவலைப்படும் தில்ஷான் அவருக்குத் தன்னம்பிக்கை கொடுக்கும் வகையில் கருத்துக்கள் கூறியுள்ளமை நியாயமானதாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இலங்கை பத்தொன்பதாவது வயதிற்குட்பட்டோர் அணிக்குத் தலைமை தாங்கியவர் இவர். அத்தோடு இலங்கை 'A' அணியிலும் பிரகாசித்தவர். மேலும் இரண்டு நிலைகளிலும் தன்னை வெகுவாக நிரூபித்தவர். ஆனால் சர்வதேச நிலை என்று வரும் போது முப்பத்தேழு ஒரு நாள் போட்டிகளில் விளையாடி பெரும் பதிவொன்றையும் ஏற்படுத்தவில்லை. அதோடு தற்போதைய ஒரு நாள் தொடரில் இவர் எடுத்த ஓட்டங்கள் ஆறு, பதினொன்று மற்றும் பத்தொன்பது, இந்த நிலையில்தான் தில்ஷான் கருத்துக் கூறும்போது இவரைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தாமல் விட்டமை தவறென்கிறார். இரண்டு மூன்று ஆட்டங்களில் விளையாடுவார். பின்னர் ஆறு மாதங்களுக்குக் காணாமல் போவார். இப்படி இவரை நடத்தினால் எப்படி அவர் தன் விளையாட்டுத் திறனை மேம்படுத்த முடியும் என்று கேள்வி எழுப்புகிறார் தில்ஷான்.



அண்மைக்காலத்தில இலங்கைக் கிரிக்கெட் சார்ந்த செயற்பாடுகள் தெளிவாக இல்லை என்பதற்கு கண்டம்பியின் விடயமும் ஒரு உதாரணம் போலத் தெரிகின்றது. திலான் சமரவீர, சாமரகபுகெதர ஆகியோருடன் போட்டியிட்டு ஒரு மயிரிழையில் தான் திலின கண்டாம்பி உலகக்கிண்ண அணியில் இடம்பெற முடியாமல் போயிருந்தார். ஆகவே இவர் மிகச்சிறந்த கிரிக்கெட் வீரர் என்பதில சந்தேகம் இல்லை. எனவே இனிவரும் காலங்களில் இவருக்கு நிலையானதொரு இடத்தைக்கொடுத்து அநேக சந்தர்ப்பங்களைக் கொடுத்தால் தனது திறமையைக் காட்டுவார் என்று உறுதிபடக கூறலாம்.


மேலும் அணியின் உபதலைமை என்ற திடீரென பதவி கூட இவருக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுத்திருக்கலாம். இது இயல்பானதுதான். ஏனெனில் ஜாம்பவான்கள் சச்சின் டெண்டுல்கர், பிறைன்லாறா போன்றோர் கூட அணித்தலைமையில் பாதிக்கப்பட்டவர்கள்தான். அந்த வகையில் திலின கண்டாம்பியின் எதிர்காலத்தில் உபதலைவர் பதவியிலும் தன் கிரிக்கெட் ஆட்டத்திறமையிலும் பிரகாசிப்பார் என்று நம்பலாம்.

விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# இறுதி நேரத்தில் கழுத்தறுத்தார் சம்பந்தன்

**வெளிநாடு ஒன்றில் தலைமறைவாக வாழ்ந்து வருகின்ற புலிகளின் மூத்த தளபதி ஒருவர், புலிகளின் வீழ்ச்சிக்கான காரணங்களை விலாவாரியாகத் தனது பார்வையில், வாக்குமூலமாக இணையம் ஒன்றில் எழுதியுள்ளார். முரசும் அதனைத் தொடராக மறுபிரசுரம் செய்து வருகின்றமை வாசகர்களுக்குத் தெரியும். குறித்த அந்த வாக்குமூலத்தின் இறுதிப்பகுதியில், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும், அதன் தலைமையும் செயற்பட்ட விதங்களையும் விலாவாரியாகக் கூறியுள்ளார். அதுவே இங்கு வாசகர்களின் கவனத்திற்குத் தரப்பட்டுள்ளது.**



> "இன்னும் சில நாளில் முடியப்போகும் விடயத்தை பற்றி பேசுவதனால் எமது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளுக்கு சிங்கள தேசத்தில் எதிர்ப்பு கூடிவிடுவதுடன் நாம் வாழ முடியாது. எமக்கு இப்பொழுது இந்த வழி மோசமானதாக இருக்கிறது. இனி என்னுடன் தொடர்பு கொள்ள வேண்டாம்"
>
> எப்படி இருக்கு எமது ஏக பிரதிநிதியின் கூற்று?

இப்போது தேர்தல் காலங்களில் மறுபடியும் நமது கதையை சொல்லி வாழ்க்கை ஓட்டுகின்றார்கள். மக்களே நீங்கள் இந்த போலிகளை நம்பாதீர்கள். இவர்கள் சுயநலவாதிகள் உங்களுக்கு எதையும் இவர்கள் செய்யவும் போவதில்லை.

இவர்கள் போன்றவர்கள்தான் நம் தலைவரை இராணுவத்திடம் சரணடைந்துவிட்டார் என செய்தி பரப்பியவர்கள். அதுமட்டுமல்ல கைது செய்யப்பட்டு தலைவர் நிர்வாணமாக்கப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டார் எனவும் சொன்னார்கள். என் குடும்பத்தார் இப்பொழுது என்னிடம் கேட்கின்றார்கள் என்ன சொல்வது நான்??

நம் தலைவர் முன் மண்டியிட்ட கூட்டம் இப்ப இப்படி செய்கிறதே...

இந்த அரசியல் வாதிகளால் வேண்டுமென்றே இந்த கதை கட்டப்பட்டு இருக்காது. இது சிங்களத்துடன் சேர்ந்து தமது வாழ்வை

அவருக்கு என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது. ஆனால் அவரும் பல போராளிகளும் ஆனந்தபுரம் பகுதியில் எதிர்பாராத விதத்தில் மயக்க குண்டு வீசிய நிலையில் கைது செய்யப்பட்டார் என எமக்கு அப்போது செய்தி வந்தது. இது உறுதி படுத்தப்படவில்லை நம் தலைமையால்.

பதினையாயிரம் போராளிகளின் சரணடைவும் அவர்களை காட்டிக்கொடுப்பும்.

நம் தலைவரின் சொல்கேட்டு சரணடைந்த இந்த போராளிகள் அனைவரும் வவுனியா கொண்டு செல்லப்பட்டு அங்கு தனித்தனியாக விசாரணை செய்யப்பட்டு இந்நாள் வரை விடுதலை செய்யப் படவில்லை.

மக்களோடு சென்றவர்கள் பலர் கடைசிரை மக்களாகவே இருந்து வெளிவந்துவிட்டனர். பலர் மக்களால் காட்டிக்கொடுக்கப்பட்டதும் உண்மைதான். இது நடப்பதற்கு காரணம் ஒரு புலியை காட்டித்தந்தால் அவர் விடுதலை செய்யப்படுவார் என்ற படையினரின் சூசகமான செயல். புலிகள் எனத் தம்மை காட்டிக்கொண்ட பலர்

**சரணடைந்த** போராளிகளின் மறுவாழ்வை கவனியுங்கள், அவர்கள் குடும்பத்தை வாழவைக்க அவர்கள் விடுதலைக்கு உதவுங்கள் என்பதும், எமது அடுத்த கட்ட போராட்ட களம் புலம்பெயர் தலைவர்களிடமும் அத்தேச மக்களிடமும் தான் உள்ளது. அதனால் நீங்கள் அதற்கான வழியை எடுங்கள் என்பதுமே.

தலைவரின் கட்டளை ஒருபுறம், தலைவருக்கு இந்த புலம்பெயர் தேச தலைவர்கள் கொடுத்த உறுதிமிக்க வார்த்தைகள் ஒருபுறம் என எல்லாவற்றையும் நம்பி தலைவர், எம் போராளிகளைச் சரணடைய வைத்தார்.

நமது தமிழர் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் செய்தி இப்படி இருந்தது. அதாவது யுத்தம் நடக்கிறது. நமது மக்களை காக்க ஏதாவது எடுங்கள் என எமது தலைமையால் கோரப்பட்டது. இதற்கு இப்போது தமிழர் தலைவர்கள் நாங்களே நாம்தான் ஏகபிரதிநிதிகள் எனக்

கூறும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சொன்னது மிகவும் வேதனை மிக்கது.

ஆம். நம் தலைவர்களை காப்பாற்ற சிங்கள தலைவர்களுடன் பேசும்படி நடேசனாலும், தூசையாலும் கோரப்பட்டதற்கு இன்னும் சில நாளில் முடியப்போகும் விடயத்தை பற்றி பேசுவதனால் தங்களது அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளுக்கு சிங்கள தேசத்தில் எதிர்ப்பு கூடிவிடுவதுடன் தாம் வாழ முடியாது என்றும் தமக்கு இப்பொழுது இந்த வழி மோசமானதாக இருக்கிறதென்றும் சொல்லியதுடன் இனி தன்னுடன் தொடர்புகொள்ள வேண்டாம் என்றும் அவர் சொல்லி தொடர்பை துண்டித்துவிட்டார்.

எப்படி இருக்கு இந்த நம் ஏக பிரதிநிதியின் கூற்று? நமது செல்வாக்கினால் பதவி ஏறிய இந்த சம்பந்தன் சொன்ன சொல் எப்படி இருக்குது? அவரைப்போல்தான் மாவையும் எதுவும் செய்யாது ஒதுங்கிவிட்டார்.

தக்கவைக்க இவர்கள் செய்யும் செயல்தான் என நான் நினைக்கிறேன். ஆனால் சிங்களவன் அவரை போற்றி வருகின்றான் பாருங்கள். நம்மை கழுத்தறுக்க காத்திருந்த கூட்டத்தினர் செயலை.


ஆனால் நான் சொல்லுகிறேன். நம் தலைமை எப்பொழுதும் மண்டியிடவில்லை. பாதுகாப்பாக செல்லவே முயன்றது. அதற்காக கடைசிவரை போராடினோம். நான் மக்களுடன் கடைசியாக இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டேன். ஆனாலும் நான் சொல்லுகிறேன் நம் தலைமை சிங்களவனிடம் மண்டியிடவில்லை.


ஆனால் நம் தலைவரின் நீண்டகால மெய்ப் பாதுகாப்பாளர் கடாபி வேறு திசையில் படை நகர்த்த சென்றது உண்மைதான்.

தனி யாகக் கொண்டு செல்லப்பட்டதும் ஒருசிலர் இலங்கை புலனாய்வுத்துறைக்கு பல இலட்சம் கொடுத்து இரகசியமான முறையில் வெளிவந்துவிட்டனர் என்பது தான் உண்மை. போராளி என் பயணம் முடியவில்லை. ஏதோ ஒரு திசையை நோக்கி போய்க்கொண்டு இருக்கின்றேன். தமிழ் தமிழர்களால் அழிவதை உணர்ந்தவனாய்...


## மலையாள மாந்தரீக முறைப்படி







### 45 வருட காலம் தொட்டுச் செய்யும் எமது தெய்வீக சேவை

மழைக்கு முளைக்கும் காளான் பயிரைப் போல் அல்லாது தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழை-யாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை ஆணிவேராகக் கொண்டு வளர்ந்து வரும் எமது மகத்தான மாந்திரீக சேவையின் நிமித்தமே நாம் வாரா வாரம் செய்து வரும் விளம்பரம்.

வாடிக்கையாளர் ஒருவர் தன் பிரச்சினையை என்னிடம் ஒப்படைத்த அடுத்த விநாடியே ஒருவர் புது வீடு கட்டத் திட்டமிட்டு அஸ்திவாரம் போட்டு அவ்வீடுவரை உறுதியாக, உண்மையாக உழைக்கின்றாரே, அதேபோல் வாடிக்கையாளரின் பிரச்சினைகளை உள்வாங்கி முழுமனதோடு அவரின் பிரச்சினை தீரும் மட்டும் இருந்து இரவு பகலாக தியான பூஜைகள் நடைபெறுவது என்பது உறுதி.

தொடர்ந்து வாராவாரம் விளம்பரம் செய்வது என்றாலே அது எமது மாந்திரீக உச்சாடன பீடம் மட்டுமே. கருணை, அன்பு, நேர்மை, உண்மை, உழைப்பு இவை அனைத்தையும் கொண்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அவர்களின் சிரிப்பிலே இறை-வனைக் காண ஆதி பராசக்தி எனக்கு இந்த அற்புத அருள்ஞான சக்தியை அருளியுள்ளார்.

"நேரம் காலம் பாராது காலா காலம் பழைமை வாய்ந்த ஜோதிட மாந்திரீக சேவை என்றால் அது எனது சேவையே!" என நான் சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். நல்லது நடக்க நல்வாழ்வு பெற என்னை ஒரு முறை சந்திக்கலாமே!

ஒரே கூரையின் கீழ் சகல சாந்தி பரிகாரங்களும் செய்வதற்கு விசேட பிரிவுரைகள் உண்டு. உண்மையையும், நேர்மையையும் அடித்தளமாகக் கொண்டு, பரிசுத்தமாகச் செய்யும் என் பரிகாரத்தால், எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்குப் பிரச்சினைகள் தீரும், நல்லது நடக்கும் எனத் திட்டவட்டமாக உறுதியாக உறுதிமொழி வழங்குவது மட்டுமல்லாது உறுதிக்கடிதம் வழங்குவது மாந்திரீக சேவையில் நான் மட்டுமே.!

வெளிநாட்டவர்கள் அவரவர் குறைநிறைகளுக்கு ஜம்ம பிரம்ப முகூர்த்தத்தில் தியான பூஜைகள் கடல் கடந்து செயல் புரியும் வண்ணம் உத்வேகத்துடன் நடைபெறுகின்றது. மேலும் வெளிநாட்டவர்கள் என்னிடம் தொடர்புகொள்ள 24 மணிநேர தொலைபேசி சேவையும் எம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டவட்ட ஜாதகக் குறிப்பு என்றால், என் கணிப்புத் திட்டவட்டமாக இருக்கும். செல்வாக்கு, செல்வாக்கு அருளியது எனது குருநாதர், சிவகாமியின் செல்வ குமரகுருபரனே!

நல்லது செய்ய நினையுங்கள், நல்லது நடக்கும்,
நல்வாழ்வு பெற என்னிடம் வாருங்கள்.
எல்லாம் நன்மைக்கே!

(என்னைச் சந்திக்க முன் அனுமதி பெற்று வருவது மிக முக்கியம்.)

*** வெளிநாட்டவர்கள் ஐயாவிடம் நேரடியாக கதைக்க விரும்பினால் முன் அறிவித்தலுடன் (ஸ்கைப்) (Skype:drpksamy) மூலம் கதைக்கலாம்.**

**DESABANTHU Prof.P.K.SAMY (J.D.G.A.N.) JP. ஐயா**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO.23,MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13.
011-2470615, 011-2342463, 011-2342464. FAx.094-112344831
நுவரெலியா கிளை இல.33, Daily Fair Complex052-2222508



## மனோதத்துவ வைத்தியம்
General Psychotheraphy

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்மா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர எந்த மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

**பிரபல மனோதத்துவ நிபுணர்** Dr.P ஆறுமுகம் T.P: 0719315664, 0777569205

C/832

**தாம்பத்திய பாதிப்புக்கு 100%இற்கு 10% கூட நோய் காரணம் அல்ல. 90% மனோநிலையால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மையே காரணம்.**
***யாழில் மாதக் கடைசியில் சந்திக்கலாம். தொலைபேசி மூலம் பதிவினை மேற்கொள்ளவும்.**
***கொழும்பில் சந்திக்க விரும்புவோர் தொலைபேசியில் தொடர்புகொண்டு, திகதியினைத் தெரிந்துகொள்ளவும்.**

Dr.p.ஆறுமுகம்,
51/5 கூழாவடி வீதி,
மட்டக்களப்பு.
தொ.பே.இல:-0652224019




## கம்சன் ஹாட்வெயர்
(மொத்த விற்பனையாளர்கள்)

நேரடி இறக்குமதியாளர்கள்

எம்மிடம்

* மின்சார உபகரணங்கள்,
* விவசாய உபகரணங்கள்,
* ரைல்ஸ் கட்டிங்,
* வெல்டிங் உபகரணங்கள்,
* நீர் இறைக்கும் இயந்திரங்கள்,
* தச்சுவேலை உபகரணங்கள்,
* கதவுப் பூட்டுக்கள்,
* பாதுகாப்பு உபகரணங்கள்,
* குளியலறைச்சாதனங்கள்,
* மோட்டார் பொறியியல் உபகரணங்கள்,
*ஆமைப்பூட்டுக்கள்,
*கதவு, யன்னல் பிற்றிங் பொருட்கள்,
மற்றும் இதர ஹாட்வெயர் பொருட்கள்.



Tel:- 011 243 5413
011 233 2834
011 233 7353

235, பழைய சோனகத்தெரு,
(Old Moor Street)
கொழும்பு-12

(C/708)




# ஆபத்தானவர்கள்

**மோட்டார்** படகுகள் அல்லது கப்பல்கள் ஏதேனும் கடற்பகுதியில் தென்பட்டால் உடனே சோதனை யிடுமாறு கடற்கரைக்கு காவல்துறைத் தலைவர் உத்தரவு இடம் செய்தார்.

எப்படியிருப்பினும் டிக்சன் கடத்தப்பட்டதைத் தற்காலிகமாக வெளியுலகுக்குத் தெரியப்படுத்த வேண்டியது இல்லை என்று அவர்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்தனர்.

சுமார் அரை மணி நேரத்துக்குள் ஹெலிகொப்டர் ஒன்று அவர்களுக்காகத் தயாரானது. புஷ்பராஜும், மாத்யூவும் தாமதமின்றி அதில் ஏறினர்.

மாலைதீவில் புஷ்பராஜின் நண்பர் சுதீர் என்கிற டாக்டர், மருத்துவமனை ஒன்றை நிர்வகித்து வந்தார்.

எந்தவித முன்னறிவிப்புமின்றி புஷ்பராஜைச் சந்திக்க நேர்ந்ததில் டாக்டர் சுதீர் வியப்பு அடைந்தார்.

குசலம் விசாரிப்புக்குப் பிறகு புஷ்பராஜ் நடந்தவற்றை அவரிடம் தெரிவித்தார்.

அதைக் கேட்ட சுதீர் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" புஷ்பராஜ் கேட்டார்.

"நான் வெளியே போய்விட்டு இப்போதுதான் மருத்துவமனைக்குத் திரும்பி வந்தேன். சரக்குக் கப்பல் ஒன்றில் பயணம் செய்யும் நோயாளி ஒருவருக்கு, மருத்துவம் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார்கள். நீங்கள் சொன்னதை வைத்துப் பார்த்தால் நான் மருத்துவம் பார்த்த நபர் அநேகமாக டிக்சனாக இருக்க வேண்டும்."

"நீங்கள் சொன்னது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. எங்களது முயற்சிகள் வீணாகவில்லை!" என்ற புஷ்பராஜ், மகிழ்ச்சி மிகுதியால் டாக்டர் சுதீரைக் கட்டிப் பிடித்தார்!

உண்மையிலேயே மிஸ்டர் புஷ்பராஜுக்கு மகிழ்ச்சி அளிக்கும் செய்திதான் அது.

"நீங்கள் சொன்னது உண்மையாக இருக்கும் என்று நானும் நம்புகிறேன். இருப்பினும் அதை நான் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமே?" புஷ்பராஜ் கூறினார்.

"நியாயம்தான்! விஷயத்தைத் தெளிவாகச் சொல்லுங்கள். யார் இந்த டிக்சன்? அவரை உங்களுக்குத் தெரியுமா?" சுதீர் கேட்டார்.

"நாங்கள் தேடிக்கொண்டிருக்கும் ஒருவர் டிக்சன்?"

"ஓகோ... அப்படியானால் அவர் ஒரு குற்றவாளியா?"

"குற்றவாளியல்ல... ஆனால், நாங்கள் அவரை அவசியம் கண்டுபிடித்தே ஆகவேண்டும்!"

"என்னிடம் எதையோ மறைக்க முற்படுகிறீர்கள். என்னை நீங்கள் நம்பவில்லையா?" டாக்டர் சுதீர், புஷ்பராஜிடம் கேட்டார்.

"மறைப்பது நோக்கமல்ல. எந்த விதத்திலும் தகவல் 'வெளியாகக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு முன்னெச்சரிக்கை..." என்ற புஷ்பராஜ், அதுவரை நடந்ததைச் சுருக்கமாகக் கூறினார். "கப்பலின் உட்புறச் சூழ்நிலை எனக்குள் ஒருவிதச் சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்தது..." டாக்டர் சுதீர் கூறினார்.

"என்ன சந்தேகம்?"

"அந்தக் கப்பலுக்குள் ஆயுதம் தாங்கிய சிலரைப் பார்த்தேன். நான் சிகிச்சையளித்த நோயாளியின் அறை வாசலிலும் ஆயுதம் தாங்கியவர்கள் காவலிருந்தனர். கப்பலில் இப்படிப்பட்ட ஓர் அமைப்பையே இப்போதுதான் நான் பார்க்கிறேன்."

"அப்படியானால்..."

"அதற்குள் நுழைவது எப்படி என்பதுதான் உங்கள் யோசனை என்றால், என்னால் ஒரு சிறு உதவி செய்ய முடியும். அந்த நோயாளியை அருகிலிருந்து கவனித்துக்கொள்ள டாக்டர் ஒருவர் தேவை. அந்த டாக்டராக உங்களை நான் அனுப்ப முடியும்!"

"மருத்துவம் பார்க்க நான் போனால் எப்படி? உண்மையான மருத்துவர் அல்லவா அவருக்குத் தேவை!"

"என்னால் அடிக்கடி கப்பலுக்கு வர முடியாது என்று சொல்லிவிட்டேன். அப்படியானால், நம்பிக்கைக்கு உரிய மற்றொரு டாக்டரை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அதற்காக நான் ஒரு டாக்டரைத் தேர்ந்தெடுக்கவும் செய்தேன். பயப்படுவது மாதிரியான நிலை எதுவும் நோயாளிக்கு இல்லை. தற்சமயம் அவருக்கு வழங்கியுள்ள மருந்து மாத்திரைகளே அவருக்குப் போதும். எனவே, அந்த மாதிரியான சிக்கல் எதுவும் உங்களுக்கு ஏற்படாது!" சுதீர் விவரித்தார்.

"சரி... நான் ஒரு டாக்டராக அந்தக் கப்பலுக்குள் நுழைந்து விடுகிறேன். நான் ஒரு டாக்டராக மாற, சில மாற்றங்கள் தேவை!" புஷ்பராஜ் கூறினார்.

அப்போது ஒருவர் கதவைத் தட்டிவிட்டு அந்த அறைக்குள் நுழைந்தார்.

"சேர், பெண்மணி ஒருவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்!" வந்த வரவேற்பாளர் தெரிவித்தார்.

உடனே புஷ்பராஜ், அருகிலுள்ள மற்றோர் அறைக்குள் நுழைந்தார்.

"வரச்செல்லுங்கள்!" டாக்டர் அவரிடம் கூறினார்.

சற்று நேரத்துக்குள் இளம்பெண் ஒருத்தி அந்த அறைக்குள் நுழைந்தாள்.

இருபத்தைந்து வயது இருக்கலாம். ஒரு சினிமா நடிகை மாதிரி மேக்கப் செய்திருந்தாள். பிரவுன் நிறத் தலை முடி.

கண்களில் கூலிங் கிளாஸ். எனவே, கண் பகுதிகள் தெளிவாகத் தெரியவில்லை.

தோள்வரை புரளும் தலை முடி. அழகான பெரிய கவுண் அணிந்திருந்தாள். தோளில் ஒரு காண்ட் பாக் நாகரிகத்தில் அதிக ஆர்வம் கொண்டவளாகத் தெரிந்தாள்.

"உட்காருங்கள்..." சுதீர் கூறினார்.

உட்கார்ந்தாள். பேக்கைத் திறந்து கார்டு ஒன்றை எடுத்து மேஜை மீது வைத்தாள்.

சுதீர் அதை ஊன்றிப் பார்த்தார். அதில் ஒரு கப்பலின் படம் மட்டும் இருந்தது. உடனேயே வந்திருப்பது யார் என்று அவருக்கு விளங்கியது.

"உங்களுக்கு நான் எதையும் விளக்க வேண்டியது இல்லை என்று கருதுகிறேன்." அவள் பேசினாள்.

"வேண்டாம். உங்களுடன் அனுப்புவதற்கு டாக்டர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துவிட்டேன். இன்னும் சற்று நேரத்தில் நீங்கள் அவரை அழைத்துக்கொண்டு செல்லலாம்."


சுமார் பத்து நிமிட இடைவெளியில் ஒரு டாக்டர் வேடத்தில் சட்டென்று அடையாளம் தெரியாத வடிவத்தில் புஷ்பராஜ் ஸ்டெதஸ்கோப் மற்றும் மருந்துப் பையுடன் அந்த அறையிலிருந்து வெளிவந்தார்.

புஷ்பராஜுக்கு அந்தப் பெண் அறிமுகமானவளாகத் தெரியவில்லை.

"இவர் டாக்டர் ஷெரிப். எல்லா வகையிலும் உங்களுக்கு உதவக் கூடியவர்!" டாக்டர் சுதீர் அறிமுகப்படுத்தினார்.

தாமதமின்றி இருவரும் அங்கிருந்து வெளியேறினர். **(தொடரும்...)**

---



# வெற்றிக்கு வித்திட்ட பயிற்றுவிப்பாளர் ரமணன்

**முதல் தடவையாக 37 ஆவது கூடைப்பந்தாட்ட தேசியமட்டப் போட்டியில் வடமாகாண சார்பில் பங்குபற்றிய யாழ். மாவட்ட அணி 03 ஆம் இடத்தைப் பெற்றது அவ்வணியைச் சேர்ந்தவர்கள் தமது ஆசானுக்குப் பெருமையுடன் சமர்ப்பிக்கும் நன்றிகள்.**

**"முட்கள்** முளைத்தால் என்ன? கற்கள் எறிந்தால் என்ன. எதிர்ப்புக்கள் எழுந்தால் என்ன? எவை உன்னை அடக்க உடைக்க நினைத்தாலும் தளராது பயணி" என யாழ் வீரர்களுக்கு ஞானம் புகட்டி யாழ்மண்ணின் வீரப் பெருமைக்கு பெருமை சேர்த்த நம் குருவிற்கு என்றும் நாம் நன்றிகள் கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

ஆம் நமக்கும் நம் வீரக் குடும்பத்திற்கும் அறிந்த அவரை யாவரம் அறிவதற்காகவே இன்று இப்பத்திரிகையூடாக வெளிக்கொணர நாம் எண்ணியுள்ளோம். இன்றுஇலங்கை மாத்திரம் அல்லாது பிற நாடுகள் கூட யாழ். வீரர்களைத் திரும்பிப்பார்த்து பாராட்டும் அளவு அவர்களை வளர்த்த பெருமைக்குரியவரைப் பற்றியே கூறுகின்றோம். இவர் நன்றியைப் பாராட்ட கடமைப்பட்ட நாம் யாமெனில் தற்போது தேசிய மட்டத்தில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டத்தில் 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வடமாகாணத்திற்கே பெருமை சேர்ந்த அணியான கூடைப்பந்தாட்ட பெண் அணியினரே நாம. நாம் வட மாகாண அணியாகத் தேசியமட்டப் போட்டியில் கலந்துகொண்ட போதிலும் அவ் வீராங்கனைகள் யாவரும் யாழ்மாவட்ட வீராங்கனைகள் என்பது குறிப்பிடத்தக்கது. நாம் அங்கு வெற்றியைப் பெற எம் விளையாட்டு காரணமாக இருந்தபோதிலும் எம வெற்றிக்கு வித்திட்ட பெருமை நம் குர செ.றமணன் அவர்களையே சாரும். இவர் நாம் வெற்றிபெற வேண்டும் என்பதில் முழுமூச்சாய் நின்றமையால், இவர் அதற்காக நடந்துகொண்ட விதற்நக்ள இவரை மரணம் வரை கொண்டு சென்றது இது உண்மை. அதாவது நாம் தேசிய மட்டப் போட்டிக்கு செல்ல குறுகிய நாட்கள் இருந்த வேளையில் இவர் பெரும் நோய் ஒன்றுக்கு ஆளாக்கப்பட்டு வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டிருந்தார். இருந்த வேளையில் இவரால் பயிற்சியளிக்க வரமுடியாத நிலையில் தொலைபேசியில் மற்றும காகித குறியீடுகள் உபபயிற்சியாளர்கள் மூலம எம்முடன் தொடர்பை ஏற்படுத்தினார். இருந்தபோதிலும் எம்மை வெற்றிக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற உணர்வில் இருந்தமையால் படுக்கை இவ்வரை எழுப்பியது. நோயோடு கூடைப்பந்தாட்டத் திடலுக்கு சிகிச்சைபெற்று மூன்று நாட்களும் நிறைவுறாத வேளையில் வருகை தந்தார். மாலை 3.3 மணி தொடக்கம் இரரவு 9 மணிவரை பெண் அணி தொடர்ந்து ஆண் அணி இரண்டிற்கும் பயிற்சியளித்தார். பின்னர் வைத்தியர் பயணம் மேற்கொள்வது ஆபத்து என்று கூறியும் அதனை பொருட்படுத்தாது தேசிய மட்டத்திற்குச் சென்ற எம அணியை அழைத்து வந்த வாகனத்தில் நெரிசல்கள் இருந்த வேளையிலும் பயணத்தை நம்மோடு மேற்கொண்டு எம்மை வெற்றியை ஈட்ட முழுமூச்சாய் நின்றார். நாம் வெற்றியைத் தழுவிய போதிலும் இவரது நுட்பமான முறை களே வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. இவை மட்டுமல்ல அன்றைய தினம் பெண், ஆண் அணி இரு அணிகளும் ஒரே நேரத்தில் போட்டி நடைபெற்றமையால் பெண் அணியோடு நம் மாவட்ட விளையாட்டு அதிகாரி யாவரும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எம் அணியோடே நின்றார். அன்றைய தினம் ஆண் அணிகள தோல்வியைத் தழுவிய போதிலும், அவர்கள் தேசிய மட்டப் போட்டி ஒன்றில் முன்னர் ஒரு தடவை இவரோடு சென்று வெற்றி ஈட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி இவரது நோக்கம், விளையாடும் வீரர்கள விளையாட்டோடு மட்டும் நின்று விடுவது அல்ல. அதையும் தாண்டி கல்வி, தொழில போன்றவற்றில் ஈடுபடுவது போன்ற இவர் எடுக்கும் முயற்சிகள் எண்ணில் அடங்காதவை. இதில் சிவலவற்றைக் கூறுவதில் இன்று பல வீரர்கள் இனத்தையும் தாண்டித் தமிழருக்குத் தனித்துவம் கொடுக்கும் வகையிலும் அவருக்கு என்றுள்ள இடத்தை யாரும் பறிக்க இயலாது என்பதையும் காட்டும் முகமாக இன்று அனைத்து விளையாட்டுத் துறையைச் சேர்ந்த மிகப்பெரும் வீரர்களை விமானப் படையணி, பாதுகாப்பு அணி, பொலிஸ் அணி. போன்ற விளையாட்டு அணிகளுக்கு ஈடுபடுத்தி அவர்களிற்கு அதனைத் தொழில் மூலதனமாக மாற்றியமைத்துள்ளார். அதுமட்டுமன்றி தன்னிடம் பயிற்சி பெறுகின்ற வீரர்களுக்கு சிறந்த ஆசிரியர்கள் மூலம் கற்பித்தல் செயற்பாடுகளையும் ஈடுபடுத்தி வந்தார். அவை மட்டுமமன்றி வரை பாரி என்றும் கூறலாம. இவரின் விளையாட்டு பொருட்களை விற்பனை செய்யும் வியாபார நிறுவனமாகவே அமைகின்றது. சொல்லச் சொல்ல முடியாத எம் குரு றமணனிற்கு என்றும் எமது நன்றிகள். 37 தடவைகள் தோற்றுப்போன வடமாகாணத்தை வரலாற்றில் முதல் முறை வெற்றிக்கு வழிவகுத்து பெயர பூக்க வைத்த குருவிற்கு நன்றிகள்.

**எத்துறையில் நீர் சென்றாலும்**
**இத்துறையில் நீர் விலகாதிருக்க வேண்டும்**
**என்பதே... எம் கோரிக்கை.**

# மனதுக்கு நிம்மதி

இந்த வறுமை, எத்தனை குடும்பங்களை வாட்டிஇருக்கின்றது. இதன் பசி, எத்தனை உயிர்களைப் புசித்திருக்கின்றது.

கொடியது எது? என்ற கேள்விக்கு, "இளமையில் வறுமை கொடியது" என்றுதானே சொல்லி வைத்திருக்கிறார்கள் நமது முன்னோர்கள்.


சங்க இலக்கியமான பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப் படையும் ஒன்று. அதில் வரும் ஒரு காட்சி... சமைத்துப் பல நாட்களான அடுப்பங்கரை. மூங்கில் வேயப்பட்ட அந்த வீட்டின் கூரையை கரையான்கள் அரித்தன. அடுப்பங்கரையில் காளான்கள் முளைத்தன. அதன் அருகே அப்பொழுதுதான் ஈன்ற நாய்க்குட்டிகள். கண் திறக்காத அந்தக் குட்டிகள் பசியெடுக்க, தாயின் மார்பகங்களை வருடுகின்றன. அந்தத் தாய் நாயோ பசியால் துடிக்கின்றது. குட்டிகளின் வருடலைப் பொறுக்க முடியாமல் குரைக்கவும் சக்தி இன்றி வலியால் முணங்குகின்றது.

வீட்டின் இன்னொரு பக்கம், உண்பதற்கு ஒன்றும் இல்லை. இளைத்த தேகத்தை உடைய அந்த வீட்டுப் பெண், குப்பையில் முளைத்த கீரையைக் கிள்ளி வேக வைக்கிறாள். போடுவதற்கு உப்பில்லை. கண்ணீர்த் துளிகளையே உப்பாக்குகிறாள். அதையும் சாப்பிடுவது எதற்குத் தெரியுமா?

"அழி பசி வருத்தும் வீடு" அது. சாதாரணமான பசியில்லையாம். அழிக்கும் பசி. "பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்பார்களே. அது இதுதான். இலக்கியம் காட்டும் பாணர்களின் வறுமை வாழ்க்கை இது.

அன்பானவர்களே! வறுமை கொடியதுதான். கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். யாருக்கு இல்லை வறுமை? வறுமை வறுமை என்று சொல்லிக் கொண்டே இருந்தால் போய்விடுமா? மனதார அதை ஏற்றுக்கொள்ளுங்கள். வறுமைதான் பலரை வார்த்திருக்கிறது.

வறுமைதான் மனிதனை சாதிக்கத் தூண்டுகிறது. இன்றைய இளைஞர்களோ, வசதியில்லையே, வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தால் என்னாலும் முன்னேற முடியுமே என்று இல்லாததைப் பற்றியே ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். முன்னேற்றத்திற்கு வறுமை ஒரு தடையல்ல. சாம்பலில்இருந்து உயிர்த்தெழுகிற பீனிக்ஸ் பறவையாய் வறுமைதான் வாழ்க்கையிலிருந்து மனிதர்களை உயிர்த்தெழச் செய்கிறது. அது மட்டுமல்ல, முறையாக வாழவும் கற்றுத் தருகிறது.



# வெற்றிக்கு வறுமை தடையல்ல!

செயல்படும்போதுதானே வீரம் பிறக்கும்? அதுபோல் வறுமை இருந்தால்தான் உடல் உறுதி பெறும். கற்கள் ஒன்றோடொன்று உராய்கிற போது நெருப்பு என்கிற சக்தி பிறக்கிறது. அதுபோல்தான் வாழ்க்கையோடு வறுமை முட்டி மோதுகிறபோது அதிலிருந்து விடுபட வேண்டும் என்கிற எண்ணம் பிறக்கிறது.

வறுமைதான் மனிதனை சாதிக்கத் தூண்டுகிறது. இன்றைய இளைஞர்களோ, வசதியில்லையே, வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தால் என்னாலும் முன்னேற முடியுமே என்று இல்லாததைப் பற்றியே ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். முன்னேற்றத்திற்கு வறுமை ஒரு தடையல்ல. சாம்பலில் இருந்து உயிர்த்தெழுகிற பீனிக்ஸ் பறவையாய் வறுமைதான் வாழ்க்கையிலிருந்து மனிதர்களை உயிர்த்தெழச் செய்கிறது. அது மட்டுமல்ல, முறையாக வாழவும் கற்றுத் தருகிறது.

விதி ஒரு கதவை மூடினால் நம்பிக்கை இன்னொரு கதவைத் திறக்கிறது என்பார்கள். அந்த நம்பிக்கை கொண்டு வறுமையை விரட்டியவர்கள் உலக வரலாற்றில் பலருண்டு. அவர்கள் அந்த வறுமையை எதைக் கொண்டு விரட்டினார்கள் தெரியுமா? நம்பிக்கையைத் தருவது நல்ல கல்விதான். கல்வி என்ற ஒற்றை உளியைக் கொண்டே வறுமை என்கிற கருங்கல் பாறையை அவர்கள் உடைத்திருக்கிறார்கள்.

இந்தியாவுக்குப் பெருமை தேடிக் கொடுத்தவர் சீனிவாச சாஸ்திரிகள். 1931ஆம் ஆண்டு ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி, இந்திய நாட்டின் பிரதிநிதியாக லண்டன் வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார். "வெள்ளி நாக்கு படைத்த பேச்சாளர்" எனப் புகழப்பட்டவர் அவர். லண்டன் ஹில்ட் ஹவுஸில் தன்னுடைய புகழ்பெற்ற உரையை நிகழ்த்தினார். அவருடைய தெளிவான சிந்தனையையும், ஆங்கிலப் புலமையையும் கண்டு வாயடைத்துப் போனார்கள், ஆங்கிலேயர்கள்.

இப்படி புகழுக்கு உரியவராகத் திகழ்ந்த அவரின் இளமைப்பருவம் எப்படி இருந்தது தெரியுமா? வறுமை. வறுமை! கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது மேல் சட்டை அணியாமல் ஒருநாள் சென்றுவிட்டாராம். அதைக் கண்ட முதல்வர் பில்டர்பெக், எட்டணா அபராதம் விதித்தார்.

"சேர்! என் ஒரே சட்டை, மழையில் நனைந்துவிட்டது. அதனால் இன்று சட்டை இல்லாமல் வந்துவிட்டேன். அபராதத் தொகை எட்டணா என்னிடம் இருந்தால் ஒரு புதிய சட்டை வாங்கியிருப்பேனே?" என்றார்.

சீனிவாசனின் நிலையைக் கண்ட முதல்வரின் மனம் வாடியது. உடனே அவர் தனது சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய் எடுத்து நீட்டினார்.

"எட்டணாவை அபராதமாகச் செலுத்திவிட்டு மீதிக்கு சட்டைத் துணி வாங்கிக் கொள்" என்று கூறினார். அந்தச் சீனிவாசன்தான் வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்ற சீனிவாச சாஸ்திரிகள்.

வறுமையில் பிறப்பது உன் தவறல்ல. வறுமையோடு இறப்பதுதான் உன் தவறு.

சீனிவாச சாஸ்திரிகள் மட்டுமா? காரல் மார்க்ஸ், ஷேக்ஸ்பியர், சார்லஸ் டிக்கன்ஸ்...

இப்படிப் பலரும் கல்வி என்கிற ஒற்றை ஆயுதத்தைக் கையில் ஏந்தி வறுமையை ஓட ஓட விரட்டியிருக்கிறார்கள்.

வறுமையைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கும்போதே எழுதுகிற என் பேனாவுக்கும் வறுமை வந்துவிட்டது! என்ன? பேனாவுக்கு வறுமையா? பொய்யில்லை. பேனாவில் மையில்லை. மையில்லை என்பதற்காக எழுதாமல் இருக்க முடியுமா? மையைத் தேடி எடுத்து நிரப்பினேன். எழுதும் ஆற்றல் தொடர்ந்தது. வறுமை விலகியது. வாழ்க்கைப் பயணத்தில் வரும் வறுமையையும்' இப்படி முயற்சியால் முறியடிக்க முடியும்.

கலைமகள் கையில் எப்போதும் புத்தகம் இருந்து கொண்டே இருக்கும். எதற்கு தெரியுமா? 'கல்வி கரையில' என்பதை எடுத்துக்காட்டத்தான். தொடர்ந்து படியுங்கள். வாழ்க்கையின் மிகப் பெரிய இன்பம் படிக்கின்றபோதுதான் கிடைக்கிறது. ●

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 428

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | | | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| | 26 | | | | |
| 31 | 32 | 33 | | | |

போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 03.08.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-428
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. – த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.426 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எஸ்.சிந்துஜா, பசறை வீதி, பதுளை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01.கே.மதிவதனி, தென்னங்கும்புர, கண்டி.
02. ந.குகன், செங்கலடி, மட்டக்களப்பு.
03. பி.பிருந்தா, தம்பலகாமம், திருகோணமலை.
04. ம.கிருஸ்ணா, நுணாவில், சாவகச்சேரி.
05. இ.கிருஷா, நெல்ஷன்பிளேஸ், வெள்ளவத்தை.
06 ம.பியூனா. பேசாலை, மன்னார்.
07. எச்.எம்.எம்.ஆஷா, கொங்காவல வீதி,மாத்தளை.
08. கே.மதுபாலா,ஹில் வீதி, கம்பளை.
09. ஜே.யதுஷன், தோனிக்கல், வவுனியா.
10. டெ.சனா, கச்சேரிவீதி,நல்லூர்.

**இடமிருந்து வலம்**

01.எருது என்றும் கூறலாம்.

04.சூதாட்டத்தின் ஒருவகை. (குழம்பியுள்ளது)

07.வியப்பு என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)

11.பசளை என்றும் கூறலாம்.

13.மறைவு அல்லது மறைப்பு என்று பொருள். (குழம்பியுள்ளது)

21.நட்சத்திரம் என்றும்பொருள்படும்.

31.ஏடு அல்லது புத்தகம். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01.திசைகாட்டியிலே பயன்படுத்தப்படுவது.

02.பயன் என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)

05.நிறை என்றும் கூறலாம். (திரும்பியுள்ளது)

06.கிருஷ்ணரின் வாகனம்.


09.பாட்டு என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது)

26.இரத்த ஓட்டத்துடன் சம்பந்தப்பட்டது.

## குறுக்கெழுத்துப் போட்டி 426- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஒ | 2 வ் | 3 வா | 4 மை | | 6 ஈ |
| 7 ய் | | 9 லி | 10 ஆ | | 12 ச |
| 13 யா | 14 னை | | | 17 ஆ | 18 ல் |
| 19 ர | | 21 பு | | 23 ண | |
| 25 ம் | | 27 வி | 28 க | 29 ம் | 30 பு |
| | 32 பூ | | | 35 வ | |

# விண்கலம் செயல்படும் விதம்


விண்கலம் பறப்படும் காட்சி

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், கனடா உட்பட பல்வேறு நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்தை படிப்படியாக உருவாக்கி உள்ளன. அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிலையத்தில் இருந்து விண்வெளி ஓடங்கள் மூலம் விண்வெளி வீரர்களும், விஞ்ஞானிகளும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அமெரிக்கா அனுப்பிய விண்வெளி ஓடங்கள் விமானம் போல விண்வெளிக்கு பறந்து சென்றுவிட்டு மீண்டும் பூமிக்கு திரும்பி வரும் வகையில் செயல்படும். ரஷ்ய நாட்டின் விண்கலம் ரொக்கெட் மூலம் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கு ஆய்வுப்பணிகள் முடிந்த பின்னர் வீரர்கள் மட்டும் பாதுகாப்பு கவசம் மூலம் தரை இறங்குவார்கள். அதை மீண்டும் பயன்படுத்த முடியாது. இந்த விண்கலங்கள் குறித்த தகவல்களை இங்கு அறிந்துகொள்வோம்.

விண்வெளிக்கு செல்லும் விண்கலத்தின் பணிகள் பல்வேறு வகையானவையாகும். தேவை மற்றும் இலக்கு அடிப்படையில் விண்கலங்களின் பயணம் மற்றும் பணிகள் அமைந்து இருக்கும். ஆரம்ப காலங்களில் செயற்கை கோள்களை சுமந்தபடி செல்லும் விண்கலங்கள் விண்வெளியில் குறிப்பிட்ட உயரம் சென்ற பின்னர், செயற்கைகோள்களை விண்வெளியில் நிலைநிறுத்தும் பணியை செய்தன. பின்னர் விண்வெளி வீரர்கள் மற்றும் விஞ்ஞானிகளுடன் சென்று விண்வெளியில் பறந்தபடி ஆய்வுப்பணிகளை மேற்கொண்டனர். விண்கலத்தில் செல்லும் வீரர்கள், அதில் இருந்து வெளியே வந்து ஆய்வுகள் செய்தனர். விண்வெளியில் சுழன்று கொண்டிருக்கும் செயற்கைகோள்களில் உள்ள பழுதுகளை நீக்கும் பணியையும் இவர்கள் செய்துள்ளனர்.

விண்வெளியில் தனது பணிகளை முடித்த பின்னர் விண்கலம் பூமிக்கு திரும்பும். முதலில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும். அதன் பின்னர் விண்வெளியில் தலைகீழாக மிதந்த படி சில கிலோ மீற்றர் தூரம் நகர்ந்து செல்லும். அதன்பின்னர் தனது என்ஜினை இயக்கி பூமியை நோக்கி தரை இறங்கும். புவியீர்ப்பு விசை பகுதியை கடக்கும் போது விண்கலம் நெருப்பில் இட்ட இரும்பு போல வெப்பத்தில் தகிதகிக்கும். இந்த வெப்பம் விண்கலத்தை பாதிக்காத அளவுக்கு அதன் வெளிப்புறப்பகுதியில் செராமிக் தகடுகள் பதிக்கப்பட்டுள்ளது. ரொக்கெட் ஏவுதளம் அருகே வந்ததும் வழக்கமாக விமானங்கள் தரை இறங்குவது போல விண்கலம் தரை இறங்கும்.




"என்ன இப்படி உளர்றே? உன் உதவியெல்லாம் எனக்குத் தேவையே இல்லை. ஞாயிற்றுக்கிழமை எல்லாம் முடிஞ்சிடும். அதுக்குப் பிறகு போயிடு. நான் மறுபடி சுதந்திரமாக இருப்பன்."

அவன், அவள் சொல்வதைக் கவனிக்காமல்,

"உங்களோடையே இங்கேயே இருக்கிறன். இருந்து உங்களைக் கண்ணும் கருத்துமா பார்க்கிறன். எங்க அப்பா,அம்மாக்கிட்டச் சொல்லிட்டு உங்களைக் கல்யாணம் செய்துகொண்டு, அப்புறம் மெல்லப் பார்த்துக்கலாம். அமெரிக்காவும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம். என்னைப்பத்தி உங்களுக்குத் தெரியாது. மனசில ஒன்று தீர்மானிச்சுட்டேன்னா மாத்தமாட்டேன். நம்ம இரண்டுபேரையும் இணைஞ்சிருக்கு. ஒரு இராத்திரிக்கு மட்டும் இல்லை ;அகல்யா-ஒரு வாழ்நாளைக்கு அதை நான் நிருபிச்சே ஆகணும். ஐ லவ் யூ அகல்யா, ரொம்ப சம்பிரதாயமான வார்த்தையாக இருந்தாலும் வேறவிதமாக எனக்குச் சொல்லத் தெரியலை. வாங்க, இப்பவே போய் கல்யாணம் பண்ணிக்கலாம். அதுக்கப்புறம் அபோஷன் பண்ணிக்கலாம்."

"நீ ஒரு பைத்தியம் என்று நினைக்கிறேன். பில்லைக் கொடுத்துட்டு வா. எனக்கு நேரமாச்சு. செக்கப் போகணும்."

அகல்யா அவனைப் புரியாமல் பார்த்தாள்.

நிஜமானவனா இல்லை ஒரு கிறுக்கல் சித்திரமா?

இப்படியும் ஆசாமிகள் இருப்பார்களோ?

"இப்ப என்ன செய்யணும் சொல்லுங்க அகல்யா."

"பாஸ்போர்ட் அலுவலகத்துக்குப் போய் டுப்ளிகேட்டுக்கு அப்ளை பண்ணு. அதான் என்னால சொல்ல முடியும்."

"இன்னும் நீங்க என்னைப் புரிஞ்சிக்கலை."

"பாரு, எனக்கு இப்ப இருக்கிற ஒரே கவலை எனக்குள்ள வந்துவிட்ட

> அகல்யாவைப் பார்ப்பதற்கு ஸ்ரீதர் வந்திருந்திருந்தான். ஆனால் அகல்யாவுக்கு முதலில் அவனை அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒரே ஒரு நாள் விழாவின் இரைச்சலில் எத்தனையோ முகங்களுக்கிடையே பார்த்தது. ஏதோ ஒரு விதத்தில் அவன் அடையாளம் மாறியிருந்தான். ஸ்ரீதர் அமெரிக்கா செல்வதற்காகவும், அங்கு சென்ற பின்னர் அகல்யாவை தன்னிடம் அழைப்பதற்காக அவ-ளின் விபரங்களையும் கேட்டறிவதற்கு வந்திருந்தான். ஸ்ரீதர் அகல்யா மீது கொண்ட காதலை வெளிப்படுத்தினான். அன்றொரு நாள் நடந்த சம்பவத்தால் அகல்யா கர்ப்பமாக இருப்பது தெரிந்ததும் அவன் அமெரிக்கா செல்லும் எண்ணத்தைக் கைவிட்டான். அகல்யா எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் அமெரிக்கா செல்லும் எண்ணத்தைக் கைவிட்டான்.

வேண்டாத விருந்தாளியைப் போகச் சொல்லுறது. வேற எதுக்கும் நான் தயாரா இல்லை. கல்யாணமா! எனக்கு எவ்வளவு வ்யசு தெரியுமா உனக்கு? குழந்தையுடன் ஒரு குழந்தை எண்டு சொல்லுறாங்க கிருத்திகா மேடம்."

அவர்கள் வெளியே வந்தபோது மோட்டார் சைக்கிளில் ப்ரமோத் வந்தான்.

"அகல்யா உன்னை எங்கெல்லாம் தேடு-றது? கிருத்திகா மேடம் கூப்பிடுறாங்க."

"இது யாரு" என்றான் ஸ்ரீதரை முதன் முதலாகப் பார்த்து.

'இதான் ஸ்ரீதர்' என்றாள் கலவரத்துடன்.

'ஓ ஹலோ ஸ்ரீதர்! உன்னைத் தனியா சந்திக்கணும் ஸ்ரீதர்.

அகல்யா,"ப்ரமோத் கொஞ்சம் வரியா" என்று அவனைத் தனியா அழைத்து, "இப்ப ஒண்ணும் கலாட்டா வேண்டாம். எனக்கு இருக்கிற டென்ஷன்போதும்."

"சொல்லிட்டியா?"

"ஆச்சு."

"என்ன சொல்றான் திருடன்?"

"என்னவோ உளர்றான், பாஸ்போர்ட்டை கிழிச்சுப் போட்டுட்டான். அமெரிக்கா போகாம என் கூடவே இருக்கிறன் என்று சொல்றான்."

"எல்லாம் பொய். எல்லாம் டுப்ளிகேட்டா இருக்கும். இவனைக் கவனிக்கிற விதத்துல கவனிச்சுக்கிறேன்."

"அதெல்லாம் வேண்டாம் ப்ரமோத்... எனக்கு டாக்டர் சுபாஷினி கிளினிக்கில அப்பொயின்ட்மெண்ட் இருக்கு. அழைச்சுட்டுப் போறியா? மேடம் காத்துக்கொண்டிருப்பாங்க.

'அவங்கதான் உன்னை கூட்டிவரச் சொன்னாங்க. ஏம்பா ஸ்ரீதரா... உங்கூட நம்ம நண்பர்கள் எல்லாம் பேசவேணும் என்று ஆசைப்படுறாங்க காலையில விடுதிப்பக்கம் வர்றியா?"

"வரேனே. அகல்யாவிடம் வந்து, அகல்யா இவங்களுக்கெல்லாம் நம்ம சமாச்சாரம் தெரியாதில்லையா? தெரிஞ்சாகூட என்ன... நாமதான் கல்யாணம் செய்துக்கப்போறமே... எங்க அப்பா அம்மாவையும் பார்த்துவரட்டுமா?"

"வேண்டாம்!"

"நீ கல்லூரிப்பக்கம் வாப்பா, அழைச்சுக்கொண்டு போறேன்; என்றான் ப்ரமோத்.

"எங்க வரணும்?" சொன்னான்.

"ப்ரமோத் அல்லது ரகு என்று சொன்னா யாரும் அடையாளம் காட்டுவாங்க."

போகும்போது "ப்ரமோத், அவனை அடிக்கக் கிடிக்க வேண்டாம்." என்றாள் அகல்யா.

"கவலையே படாதே. பூ கணக்கா பாத்துக்குவான் ரகு."

"நடந்ததுக்கு நானும்தான் பொறுப்பு."

"அதுக்காக?"

ப்ரமோத்தின் மோட்டார் சைக்கிள் பின் சீட்டில் அகல்யா ஏறிக்கொண்டு, ஒருமுறை ஸ்ரீதரை திரும்பிப் பார்த்தாள். திகைப்பில் இருந்தான். அவளுக்கு வயிற்றில் கவலை கவ்வியது.

அகல்யாவை கிளினிக்கில் விட்டபின் அங்கிருந்தே விடுதிக்கு போன் செய்தான்.

"ரகு, நான் ப்ரமோத்ரா, அந்த ஸ்ரீதரன் நம்மைத் தேடிக்கிட்டு மெட்ராசுக்கே வந்திட்டான்.

ரகு காலை எழுந்ததிலிருந்து கண் எரிச்சல், வயிற்றுவலி, லேசாக ஜுரம் என்று மிகுந்த வெறுப்பில் இருந்தான். கிளாஸ் பக்கம் ஒருவாரமாகப் போகவில்லை.

"வரச்சொல்லு. துவையல் பண்றேன் அவனை."

'அனுப்பியிருக்கேன். கொஞ்சம் ஜாக்கிரதையாக இரு. எல்லாம் ஊமை அடியா இருக்கட்டும்" என்றான் ப்ரமோத்.

ப்ரமோத்தையும் அகல்யாவையும் அனுப்பிவிட்டு, ஸ்ரீதர் விடுதிக்குப் போய் ரகுவைப் பார்க்கலாமா? வேண்டாமா? என்பதை மனக்குள் விவாதித்தான். கிளினிக் பெயர் கேட்டு வைத்துக்கொண்டிருந்தால் நேராக அங்கேயே போயிருக்கலாம். எதற்கு விடுதிக்கு ஒருமுறை போகவேண்டும்? மடையன் நான்; என்று எண்ணிக்கொண்டான். வேறு காரியம் இல்லாமல் ரகு என்பவனைப் பார்க்கச் சென்றான். அவன் விதி அவனைச் செலுத்தியது.

குழப்பமான பதட்ட எண்ணங்களும், அகல்யாவின் மேல் அபார ப்ரேமையும் பச்சாதாபமும் ஏற்பட்டது. இந்தப் பெண்ணைக் காப்பாற்றிக் கைப்பிடிக்க வேண்டியது என் கடமை. நான் செய்த பொறுப்பற்ற காரியத்தால்தானே இவள் இந்தக் கதிக்கு ஆளானாள்...? இசைவிழா இரவு அவனுக்குத் தெளிவாக ஞாபகம் இருந்தது. பின்னிரவின் நிச்சலனத்தில் அபசுரமாக ஒரு ஆட்டோ ரிக்ஷா இரைச்சலாகச் செல்ல, சடக்கென்று கண்விழித்தபோது, கட்டிலிலிருந்து அகல்யாவின் கை தொங்கிக்கொண்டிருந்தது. அவன் தரையில படுத்திருக்க அவன் கைக்கு மிக அருகே இருந்தது. தொட்டுப்பார்க்க உள்ளம் துடித்தது. தொட்டால் மட்டும் கோபிக்கமாட்டாள் என்று தெரிந்தது.

தொடும்போது அவள் கை எதிர்க்கவில்லை. தொட்ட உடனே வில-காமல் சற்றுத் தயங்கியது. அகல்யாவும் விழித்திருந்திருக்கிறாள். கைவிரல்கள் பரிச்சயம் பண்ணிக்கொண்டன. உள்ளங்கையை அறிமுகப்படுத்தின. அதன்பின் இவன் விரல்கள் அவள் முழங்கை வரை வர தைரியம் பெற்றன. எல்லாம் மௌனமாக.

**இன்பம் தொடரும்**

---

இவ்வாரச் சிறுகதை

# குடும்பச் சுமை

அதிகாலை நான்கு மணியில் இருந்து தன்னந்தனியாக சுழன்று கொண்டிருந்த சுமதிக்கு எரிச்சல், கோவம் எல்லாம் ஒன்றாய் கொழுந்து விட்டு எரிந்த கொண்டிருந்தது. இரவு நித்திரையில்லை. குழந்தை உறங்க 1 மணி ஆகிவிட்டது.

"என்ன செய்வது என் கஷ்டம் எப்ப தீருமோ.? அப்பவே சொன்னான் பாழாய்ப்போன கலியாணம் எனக்கு வேண்டாம் எண்டு கேட்டுதுகளே.. பாரம் இறக்கி வைக்கிறம் எண்டு பாழுங்கிணத்துக்கை தள்ளி விட்டிட்டு அவை சந்தோசமாய் இருக்கினம். நான் படுறபாடு எனக்குத்தானே தெரியும்." தன் சோகங்களை தனியாகவே புலம்பிக்கொண்டு வேலைகளை செய்தவளிற்கு குழந்தையின் அழுகையை கேட்டதும் கோவம் கொழுந்து விட்டெரிந்தது.

"சுமதி இங்க கொஞ்சம் வாரும். பிள்ளை ஒண்டுக்குப்போட்டுது போல அழுகுது" நித்திரை கலையாத ரவியின் குரல்.

"அதுக்கும் நானே வரோணும் பக்கத்தை எல்லாம் கிடக்கு எடுத்து மாத்துங்கோ" ரவியின் உடுப்புகளை அயன் பண்ணியபடி பதில் தந்தாள் சுமதி. "இங்க வந்திட்டுப்போம். என்னால முடியாது" என்ற படி மறுபக்கம் திரும்பி படுத்துக்கொண்டான் ரவி. இதைக்கேட்டதும் சுமதிக்கு அழுகையே வந்தது.

கலியாணத்திற்கு முன்னர் "உன்ரை அம்மா மாதிரி நான் உன்னைக் கவனிப்பன்" என்று வாக்குறுதியை வழங்கிய ஆண்மகன் ரவி. பிள்ளைக்கு 'நப்பி' மாத்திறது, பிள்ளை வண்டி தள்ளுறது இதுகளை பெண்கள் வேலையாகவும், வீட்டுவேலைகள் யாவும் பெண்களே செய்ய வேண்டும் என்ற சிந்தனை கொண்ட படித்த இளைஞன்.

குழந்தையின் அழுகை நிண்டபாடில்லை. அது அழுது கொண்டிருக்க தாய்க்கு வேலை ஓடுமா? அப்படியே போட்டுவிட்டு படுக்கையறை சென்று குழந்தையை பார்த்து அழுகையை நிறுத்திப் பாலும் கொடுத்துவிட்டு வந்தாள்.

ரவியைப் பார்க்கையில் வேதனையாக இருந்தது.

"என்னை ஒரு மிசினாக நினைச்சிட்டாரோ" தனக்குள் கேள்வியை கேட்டுக்கொண்டு மறுபடி புலம்பலை ஆரம்பிக்கிறாள். தினமும் தனியனாய் நான்கு மணிக்கு எழும்பி.. பள்ளி செல்லும் பிள்ளை, வேலைக்குப்போகும் கணவன், இவைகளின் அன்றாட வேலைகளையும் செய்து, தனது வேலைகளும் செய்து... அயன் பண்ணி, சமையல் செய்து, குளிக்கவைத்து, சாப்பாடு பரி-மாறி, தான் வேலைக்குச்சென்று மறுபடி வந்து குழந்தைகளை அழைத்து, வீட்டுவேலைகள் பார்த்து நித்திரைக்குப்போக 10-11 ஆகிவிடும். அதிகாலை 4 மணிக்கு எழுந்தால் தான் அனைவரையும் சரியாக கவனித்து 8 மணிக்கு தானும் வேலைக்குப் போகலாம். கணவனிடம் இருந்து எந்த உதவியும் ஆதரவும் இன்றி தன்னந்தனியாக சுழலும் அவளது மன உளைச்சலையும், சுமையையும் பங்கிட அவன் தயாராக இல்லை.

அவனைப்போலத்தான் அவளும் வேலைக்குச்செல்கிறாள் உழைக்கிறாள்.. ஆனால் அவளுக்கு மட்டும் குடும்பத்தில் சுமை ஏன் அதிகம்..? வீட்டு வேலைகள் பெண்கள் வேலையாம். அதைச்செய்ய வெட்கப்படும் அவன்,

"நான் பொட்டையன் இல்லை உதுகள் செய்ய" என்பான். உதவி கேட்டால் தேவையில்லாத பிரச்சினை.

"என்ன நீர் தான் பெரிய வேலைக்குப்போற பொம்பிளை மாதிரி தினம் படம் காட்டிறீர்.. உங்க மற்றவை போறதில்லையோ? பிள்ளையளை கவனிச்சுக்கொண்டு எங்கட அம்மாமார் வீட்டு வேலை செய்யலையோ? உமக்கு வேறை வோசிங் மிசின், காஸ் அடுப்பு இப்படி நிறைய வசதிகள் கிடக்கு அவை எவ்வளவு கஷ்டப்பட்டவை" என்று பேசுவான்.

"ஏண்டா என்னை மாதிரி அவையும் வேலைக்குப் போனவையே?.. 24 மணி நேரம் வீட்டில இருந்தவை செய்திச்சினம். நான் வேலைக்கும் போய் இங்கையும் மிசினாய் வேலை செய்யவேண்டியதாய் எல்லோ? கிடக்கு, வோசிங் மிசினுக்க உடுப்பு போடாமல் தானாய் தோய்க்குமே.. அடுப்பில காய்கறியளை வெட்டி வைக்காமல் தானாய் காய்ச்சுமே..? அதுக்கு தான் உதவி வேணும் எண்டிறன். நான் என்ன மிசினே வீட்டிலையும் மாடாய் வேலைசெய்து ஒபிசிலையும் வேலை செய்து கஷ்டப்பட" அவளும் கேட்காமல் இல்லை..

அவளது பேச்சிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. அவனைவிட அவள் எந்த விதத்தில் உயர்ந்தவள் அல்லது எந்த விதத்தில் தாழ்ந்தவள். இரண்டு வேலை செய்ய அவனால் முடியாதவிடத்து அவளால் எப்படி முடியும். குடும்பம் அவளுடையது, குழந்தைகள் அவளுடையது அதற்காக தனியாக கஷ்டப்பட முடியுமா.?

சுகங்களை பகிரும் துணை-வன் சுமைகளையும் பகிரும் போதுதானே அவளுக்கும் மகிழ்ச்சி. அவனும் ஒரு கை கொடுத்தால். 4 மணிக்கெழும்பி 8 மணிவரை சுடுதண்ணியாய் கொதிப்பவள். சற்று தாமதமாய் எழுந்து பிள்ளைகளையும் கவனிச்சு சந்தோசமாய் ஆரோக்கியமாய் இருக்கலாம் தானே. இது அவளது கேள்விகள்.

அவன் அதை உணர்ந்ததாய் தெரியவில்லை. எத்தனை நாள் தான் வாய்விட்டுக்கேட்பது அது தான் தனக்குள் புலம்புகிறாள். மணி 7 அடித்துவிட்டது. 6.30 க்கே பிள்ளைகளை எழும்பி குளிக்க வைத்து தயார்படுத்திவிட்டாள். தானும் தயாராகிவிட்டாள். 7 அடித்ததும் ரவி படுக்கையை விட்டு எழுந்தான்.

"உடுப்புகள் றெடியா..." எந்த சேட் அயன் பண்ணினீர். அதற்குள் ஆயிரம் கேள்விகள்.

நீங்களும் பேபியே, அயன்போட்ல கிடக்கு போய்ப்பாருங்கே?.. பிடிக்காட்டால் திரும்ப அயன் பண்ணுங்கோ?.. அவள் பதில் சொல்லிவிட்டு பிள்ளைகளை அதட்டி உணவு ஊட்டிக்கொண்டிருந்தாள். ரவி குளித்து முடித்து வந்து மேசையில் வைத்திருந்த தேநீர்க் கோப்பையை தூக்கியபடி சென்று தொலைக்காட்சிப்பெட்டிக்குள் தன்னை நுழைத்துக்கொண்டான்.

அழைப்பு மணி அலறியது.

"கதவைத்திறக்கிறியளே" என்று குரல் கொடுத்தாள். "போய்த்திறவும் உமக்குத்தான் ஆக்கள் வந்திருப்பினம்" என்றான் ரவி. அவனை முறைத்துப் பார்த்தபடி கதவைத் திறந்தாள் சுமதி. வாசலில் நின்றது பக்கத்துவிட்டு சுந்தரி..


'வாங்கோ என்ன சுந்தரியக்கா இந்த நேரம்."ஆச்சரியமாக கேட்டாள். ஏனெனில் சுந்தரியும் இப்ப அவசரமாய் வேலைக்கு கிளம்பிக் கொண்டிருக்க வேண்டியவள். "ஒரு உதவி கேக்க வந்தனான் சுமதி" என்றாள் சுந்தரி.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)



**நன்றி இணையம்**

# பொன்மொழி



உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

சுவாமி விவேகானந்தர்

## சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! ஜனாதிபதி உட்பட்ட அமைச்சர்களின் வருகை தேர்தலில் தாக்கத்தைச் செலுத்துமா?

எஸ்.மகேஸ், யாழ்ப்பாணம்.

● தேர்தல் முடிவுகளில் கடந்த காலத்தைப் போல் தமிழ் மக்கள், ஏமாற்றப்பட்டார்கள் என்ற நிலை உருவாகிவிடக்கூடாது என்பதற்காக தென்னிலங்கை நிலைப்பாட்டை வட பகுதி மக்களோடு பகிர்ந்து கொள்வதற்கு இந்தச் சூழல், அவசியம் என்று உணரப்பட்டிருப்பதையே அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியின் வருகை காட்டுகின்றது.

✉ சிந்தியா! இறைமையுள்ள நாடுகளின் எல்லைகளுக்கப்பால் தலையிட முடியாது என சர்வதேச குற்றவியல் நீதிமன்ற தலைமை நீதிபதி கூறியிருப்பது பற்றி..?

கே.பரசுராமன், திருகோணமலை.

● அவர் மட்டுமல்ல, இன்னும் எத்தனை பேர் சொன்னாலும் தன்மானமில்லாத, கூட்டமைப்புக்கு மட்டும் அது புரிவதாக இல்லை. இவர்கள் தான் தமிழ் மக்களின் தலைவர்களாம். வாழ்க தேசியம்.

✉ சிந்தியா! உலகத்தில் மக்கள் விரும்பிய அல்லது விரும்புகிற அரசியல்வாதி யார்?

சீ.எழினி, கொழும்பு-06.

● தற்போதைக்கு எவரையும் சுட்டிக்காட்ட முடியவில்லை. காமராஜருக்குப் பிறகு அந்த இடம் காலியாகவே இருக்கிறது.

✉ சிந்தியா! இன்றை காலகட்டத்தில் காதல் திருமணமா? பேச்சுத் திருமணமா? பொருத்தமானதாக இருக்குமென நினைக்கின்றீர்கள்?

எம்.குருபரன், மட்டக்களப்பு.

● இந்தத் விவாதம் தற்காலத் திருமணங்களுக்கு ஏற்புடையதல்ல. வரம்புகளுக்குள் இல்லாமல் விரும்பிய வகையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும் அதன் விபரீதங்களில் வீழ்ந்து உழல்வதும் நவீன கலாச்சாரமாக இருக்கிறது.

✉ சிந்தியா! கோயில்களுக்கு நாம் போடும் காணிக்கை உண்மையாகவே கடவுளுக்குத்தான் சென்றடைகிறதா?

க.லக்ஷ்மி, நீர்கொழும்பு.

● கையேந்துகின்ற பிச்சைக்காரனுக்கு வழங்காமல் உண்டியலுக்குள் போட்டு அதன் பிரதி உபகாரமாகப் புண்ணியம் தேடும் எவரது பணமும் இறைவனைச் சென்றடையாது.

ஏதோவொரு வகையில், பாவத்தைச் செய்து பணம் சம்பாதிப்பதால் என்னவோ மனிதனிடமிருந்து பணம் வந்து சேர்வதற்கு இறைவன் வங்கிகளைத் திறக்கவில்லை. ஆனால் உண்டியல் ஆசாமிகளின் வங்கி.

✉ சிந்தியா! மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்கிறார்கள். அதற்கு நீங்களும் சம்மதமா?

ம.யசீந்தன், மன்னார்.

● கேட்கப்படுகின்ற சூழலும் பேசிக்கொள்கின்ற மனிதர்களும் எப்படியெல்லாம் புரிந்துகொள்கிறார்களோ அப்படியெல்லாம் மொழிபெயர்க்கப்படும் பன்முகப் பொருள் கொண்ட மொழி மௌனம்.

✉ சிந்தியா! நீங்கள் கடன் அதிகமாகக் கொடுப்பீர்களா? அல்லது வாங்குவீர்களா?

சீ.ராகவன், கிளிநொச்சி.

● கொடுப்பதும், வாங்குவதும் நட்புக்கு பகை என்பார்கள். நான் சில நண்பர்களை இழந்ததும் என்னைச் சிலர் இழந்ததும் இந்தக் கடன் என்ற நாசகாரத்தால்தான். ஆகவே வாங்கவும் கொடுக்கவும் கடனைப் பிரயோகிக்க நான் வெறுக்கிறேன்.

அதை அன்பளிப்பாக வழங்கிவிட்டால் எல்லோருக்கும் நல்லது.

✉ சிந்தியா! இங்கிலாந்தில் நடைபெற்ற பயிற்சிப் போட்டியில் இந்திய அணியினர் எதிர்பார்த்தளவு சோபிக்கவில்லையே?

எஸ்.மதன், மகரகம.

● பயிற்சிப் போட்டிதானே என்ற அக்கறையீனம்தான் இந்திய அணியினரின் மோசமான துடுப்பாட்டத்துக்கு காரணம் என்று இங்கிலாந்து வீரர்களே தெரிவித்திருக்கின்றார்கள்.

அது ஒருவகையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. ஏனெனில் இந்திய அணியின் துடுப்பாட்டம் சச்சின், ராவிட், லக்ஷ்மன், ஷேவாக் என ஹர்பஜன்சிங் வரை பலமானதாகவே அண்மைக் காலத்தில் விளங்கிவருகிறது.

இருந்தபோதிலும் இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சையும், இங்கிலாந்தின் காலநிலையையும் சமாளிப்பதற்கு இந்திய வீரர்களுக்கு அதியுச்ச மனக்கட்டுப்பாடும், லாவகமும் அவசியம் என்பதற்கு மறுப்பதற்கில்லை. ஆரம்ப விக்கெட் வீழ்ந்தால் ஒட்டுமொத்தமாக சுருண்டு போகும் இந்திய அணியின் வியாதி தொற்றிக் கொள்ளாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.



---

## இலக்கிய நயம் 36

# பிடியென நடையாள்

கே.வி. குணசேகரம்

விபச்சாரத்தை பற்றிக் கண்டிக்காத நூல்கள் இல்லை. உலகில் உள்ள எந்தமொழியானாலும் பஞ்சமா பாதகங்களில் ஒன்றான விபச்சாரத்தைப் பற்றிக் கண்டிக்கிறது.

விபச்சாரம் என்பது தனது மனைவியைத் தவிர்ந்த வேறு பெண்களுடன் கூடி மகிழ்வது, மகிழ நினைப்பது. விபச்சாரம் செய்யும் பெண்கள் பணத்திற்காகப் பொருளுக்காக வேறு நன்மை தரும் செயல்களுக்காக பல்வேறு ஆடவர்களுடன் கூடி மகிழ்வது.

ஆண்கள் ஒருபொழுதும் தனது மனைவியைத் தவிர்ந்த இன்னொரு பெண்ணை மனதாரக் கூட நினைக்கக் கூடாது. அத்துடன் இன்னொருவரின் மனைவியை விரும்பக்கூடாது.

இத்தகைய பெண்கள் அன்பு காரணமாக ஒருவனை விரும்பாது பொருள் காரணமாகவே விரும்புவாள். அவர்கள் பேசுகின்ற இனிமையான வார்த்தைகள் என்றும் துன்பத்தையே தரும்.

கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கேற்ப இனிய வார்த்தைகளைப் பேசுகின்ற இனிய வார்த்தைகள் கேட்பவனுடைய குடும்பத்தை அழித்துவிடும்.

பலவீனம் உள்ளவர்கள், அடங்காத அந்த சில கண்களிலும் அவர்களின் மனம், தான் தழுவியவரிடமிருந்து எதைப்பெறலாம் என்ற நினைவிலேயே இருக்கும். தாம் தினமும் தழுவுவதால் தழுவுபவர் பேரின்பமடைகிறார் என்று அவர்களின் செயல்கள் மூலம் அறிந்தால் அவர்களின் பொருட்கள் முழுவதையும் சூறையாடிவிடுவார்கள். இதை விட தான் தொடர்புகொண்டுள்ளவர்களை விட அதிகமான பொருள் உடையவனைக் கண்டால் அவர்கள் தாழ்ந்த சாதிக்காரர்களாக இருந்தாலும், அவர் தேவர்களைவிட மேலானவர் என்று கூறி அவர்களுடன் உறவு கொள்வார்கள். அவரின் புகழையே பேசுவார்கள். அவனைப் பிரியாது இருப்பர். அவர் பொருளற்றவரானதும் அவரை ஏதோ ஒரு காரணம் காட்டி விலக்கி வைப்பாள்.

பெண்களின் அங்கங்களில் உள்ள கவர்ச்சி கலைஞர்களை மட்டுமன்றி வயோதிபர்களையும் தடுமாற வைக்குமென்று சுமார் 6000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த திருமூலர் உணர்ந்திருக்கிறார். அதனால் இளம்பெண்கள் தங்கள் அங்கங்களின் பொலிவைக் காட்சிப்படுத்தக் கூடாது. அன்று இன்றைய பெண்களைப் போலவே தலை முடியை விரித்துவிட்டு அரைகுறை ஆடைகளுடன் பெண்கள் வீதிகளில் உலாவி இருக்கிறார்கள். அதனால் அன்று வாழ்ந்த ஆண்கள் அவர்கள் வெளிக்காட்டிய உடற்கவர்ச்சியில் மயங்கி காமத்தை உடையவர்கள், பஞ்சமாபாதகங்களை மகிழ்வுடன் செய்பவர்கள்தான் பொதுமகளின் அற்பமான இன்பத்தைச் சொர்க்கம் என்று எண்ணித் தமது பொருள்களையெல்லாம் கொட்டிக் கொடுத்துத் தமது குடும்பத்தவர்களின் முன்னேற்றத்தைக் கெடுப்பார்கள்.

இத்தகைய பொது மகளின் தன்மைகளைப் பற்றித் திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது.

**"இயலுறும் வாழ்க்கை இளம்பிடிமாதர்**
**புயலுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்**
**மயலுறும் வானவர் சார் விது என்பர்**
**அயலுறப் பேசி அகன்றொழிந்தாரே"**

கண்களைக் குத்துகின்ற பொலிவும் மிக்க அழகுங்கொண்ட பெண் யானையை ஒத்த இளமை யான பெண்கள் மேகம் பொழியும் மழையைப் போல, உடலும் உயிரும் உவகை கொள்ளும்படி தழுவிப் பேரின்பத்தைத் தருவார்கள். அப்படியான பேரின்பத்தைத் தருகின்ற அவர்களின் பின்பே அலைந்து திரிந்து தம் பொன்னான வாழ்வையுங்கெடுத்து, நோயாளிகளாக, பலவீனர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். இதைக் கண்ட திருமூலர் சிவனின் பெருமைகளை விதந்து கூறும் சாத்திர நூலான திருமந்திரத்தில் இழிந்த பெண்களின் நிலையையும் அதனால் ஆடவர்கள் பட்ட துக்கங்களையும் இலக்கியச் சுவையுடன் எடுத்துக் கூறுகிறார்.



# தீர்விற்கான பேச்சுக்களும் முஸ்லிம்களின் நிலைப்பாடும்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

தசாப்தங்கள் கடந்து விட்டபோதிலும் இனப்பிரச்சினைக்கான பேச்சு வார்த்தைகள் அவ்வப்போது தலைகாட்டி விட்டு மறைந்து விடுகின்றன. இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் எவை என்பதை விட யார் யாருக்கு என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதிலும் இன்னமும் தெளிவில்லை.

பிரச்சினைகளால் உண்டான மேலதிகப் பிரச்சினைகளே இப்பொழுது பூதாகாரமெடுத்து நிற்கின்றன. இந்தத் தறுவாயில் இனப்பிரச்சினையின் தோற்றுவாய் எது என்பதும் யார் யாருக்கு இது அழிவு நாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதும் அனைவரும் புரிந்து கொள்ளும்படியான பொதுத் தளத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

எந்த சமூகம் அதிகம் பாதிக்கப்பட்டார்கள், யாருக்கு யார் கூடுதலான இழப்பை ஏற்படுத்தினார்கள் என்று சத்திர சிகிச்சை செய்து கொண்டிருப்பதைவிட தற்போதுள்ள சாதகமான சூழ்நிலையை நாட்டு மக்களின் நலன் கருதி • நாமெல்லோரும் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பற்றிச் சிந்திப்பதே அறிவுடமையான காரியமாகும்.


யுத்தம் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் சமூகமும் இழப்புக்களையும் இன்னல்களையும் சந்தித்தது என்ற வகையில் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அந்த சமூகத்தையும் இணைத்துக் கொள்ளவேண்டுமென்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. இது பற்றிய அபிப்பிராயங்களைப் பலரும் வெளியிடுகிறார்கள்.

தற்போது தமிழ்க் கட்சிகளுடன் அரசாங்கம் பேசுகிறது. நாட்டின் இனப்பிரச்சினையில் சிக்குண்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம் மக்களும் என்ற அடைப்படையில் பேச்சுவார்த்தை என்று வரும்போது அவர்களை அழைக்க வேண்டிய தேவை ஏற்பாட்டாளர்களுக்கு உண்டு. அதிலே பங்கு பற்றி சுயமாகக் கருத்துப்பரிமாறி முஸ்லிம் சமூகத்தினதும் ஒட்டுமொத்த நாட்டு மக்களினதும் நலன்சார்ந்த விடயங்களை முன்வைக்க வேண்டிய கடப்பாடு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு உண்டு.

ஏக பிரதிநிதித்துவம் என்பது எவருக்குமில்லை என்று கூறுகிறது அரசு, சிறுபான்மையினரின் விவகாரங்கள் என்று வரும்போது ஏக பிரதிநிதிகள் யார் என்ற கேள்விகள் பெரும்பான்மைச் சமூகத்திலிருந்தும் எழுகின்ற அதேவேளை சிறுபான்மைச் சமூகங்களும் இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு தானிருக்கின்றனர்.

நூறு வீதப் பிரதிநிதித்துவம் யாருக்கும் கிடைக்கப் போவதில்லை. முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி என்ற அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸிற்கு மற்றவர்களோடு பேச ஒரு வழி இருக்கிறது. அதற்காக முஸ்லிம் சமூகத்தின் ஏனைய பிரதிநிதிகளோடும் கட்சிகளோடும் பேசக்கூடாது சேரக்கூடாது அவர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்பதல்ல.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் அந்த சமூகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள். அவர்களில் கூடுதல் ஆதரவு பெற்றவர்கள், குறைந்த ஆதரவு பெற்றவர்கள் என்பதைவிட அவர்கள் எல்லோருடனும்தான் பேச வேண்டும். அதுவே பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகுக்கும்.



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை, அதிலுள்ள அரசியல்வாதிகள், அந்தக் கட்சியின் செயற்பாடு பற்றிய விமர்சனங்கள் பலமாக இருக்கத்தக்கதாகவே முஸ்லிம்கள் அதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றார்கள்.

எனவே முஸ்லிம் சமூக நலன்சார்ந்த விடயங்களில் ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்குமான பொறுப்புக்கூறல் இன்னமும் அந்தக் கட்சிக்கு இருக்கிறது என்பதை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மறந்து விடக்கூடாது என முஸ்லிம்களின் அரசியல் ஆர்வலர்கள் கருத்துரைக்கின்றனர்.

அதனால் தனித்தரப்பு, ஏக பிரதிநிதித்துவம் என்ற வெற்றுக் கோசங்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு முஸ்லிம் சமூகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதி நிதிகள் அனைவரும் ஒரு பொதுத்தளத்திற்கு வந்து அதிலிருந்து ஒரு பொறி முறையை வகுத்துக் கொண்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்தப் பேச்சு வார்த்தையிலும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அரசியல் விமர்சகரான முஹ்ஸீன் வலியுறுத்தினார்

தமக்குள் பகைமைப்பட்டுப் பிரிந்து சென்ற முஸ்லிம் அரசியல் வாதிகள் அனைவரும் இப்பொழுது அரசுடன் இணைந்து கோலோச்சுகிறார்கள். அரசாங்கத்தோடு இணைந்திருக்கின்ற அதே வேளை ஒரு பொதுத் தளத்தில் நின்று முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை இவர்கள் ஒருமித்த கருத்தில் ஏன் பார்க்கவில்லை என்பது வெறுப்புக்குரியதாகவும் கண்டிக்கத்தக்கதாகவும் முஸ்லிம் சமூகத்தால் நோக்கப்படுகிறது. இது சமூகத்தையும் நாட்டு மக்களையும் ஏமாற்றும் செயலாகும். இது உலகில் எங்குமே காணப்பட முடியாத ஒரு புதுமையான அரசியலாகவே இருக்கிறது.

எனவே, எதிர்காலத்திலாவது அனைத்து தரப்புக்களும் தங்களிடையேயான கருத்துவேறுபாடுகளை புறந்தள்ளி வைத்துவிட்டு அரசியல் தீர்வு விடயத்தில் இதய சுத்தியுடன் கலந்துகொண்டு ஏனைய தரப்புக்களின் கருத்துக்களுக்கும் இடம்கொடுத்து பரந்த சிந்தனையோடு செயற்படவேண்டும் என்பதே அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகும். ■

> ஏக பிரதிநிதித்துவம் என்பது இருந்தபோதும் எவருக்குமில்லை என்று கூறுகிறது அரசு, சிறுபான்மையினரின் விவகாரங்கள் என்று வரும்போது ஏகபிரதிநிதிகள் யார் என்ற கேள்விகள் பெரும்பான்மைச் சமூகத்திலிருந்தும் எழுகின்ற அதேவேளை சிறுபான்மைச் சமூகங்களும் இந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டுதானிருக்கின்றனர். நூறு வீதப் பிரதிநிதித்துவம் யாருக்கும் கிடைக்கப் போவதில்லை. முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரையில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி என்ற அடிப்படையில் முஸ்லீம் காரங்கிரஸிற்கு மற்றவர்களோடு பேச ஒரு வழி இருக்கிறது. அதற்காக முஸ்லிம் சமூகத்தின் ஏனைய பிரதிநிதிகளோடும் கட்சிகளோடும் பேசக்கூடாது சேரக்கூடாது அவர்களைப் புறக்கணிக்க வேண்டும் என்பதல்ல.

---

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி **குடும்பச் சுமை...)**

"என்னக்கா சொல்லுங்கோ" கருசனையோடு வினவினாள் சுமதி.

"என்னெண்டால் கண்ணன் நேற்றொரு சின்ன கார் விபத்தில கொஞ்சம் காயப்பட்டிட்டார். இரவு ஒரு பாட்டியால் வரேக்க நடந்திருக்குது அது தான் நீங்கள் உங்கட பிள்ளையளை பள்ளிக்கூடம் கூட்டீட்டு போகேக்க கபிலனையும் கூட்டீட்டுப்போறியளோ எனக்கு கொஞ்சம் வேலை கிடக்கு.. வழமையா அவர் பிள்ளையளை வெளிக்கிடுத்த நான் சமைக்கிறனான்.. அவர் பிள்ளையளை கொண்டே விட்டிட்டுவர நான் வெளிக்கிட்டிடுவன் போகலாம்.

இண்டைக்கு இரவு கண் முழிச்சது என்னால வெள்ளெனவும் எழும்ப முடியேல்லை. பாவம் கண்ணன் நான் சமைக்காமல் போனால், பிறகு நாங்கள் வந்து அவசரப்படுவம் எண்டு ஏலாததோட எழும்பி சமைச்சு கஸ்டப்படுவார். அது தான் இவனை உங்களோட விட்டால் நான் சமைச்சு வைச்சிட்டு என்ர நேரத்துக்குப்போவன். உங்களுக்கு ஏலும் எண்டால் சரி, இல்லாட்டால் நான் கடையில எடுத்து வைச்சிட்டுப்போறன்" என்று முடித்தாள் சுந்தரி.

"சே பிரச்சனையில்லை, அக்கா இவை இரண்டு பேரும் இப்ப தயாராகிட்டினம் நான் போகேக்க கூப்பிடுறன் கொண்டு வந்து ஏத்திவிடுங்கோ. பின்னேரமும் நான் கூட்டீட்டுவாறன். கண்ணன் அண்ணைக்கு நல்லாகும் மட்டும் நான் கூட்டீட்டுப்போறன் அக்கா நீங்கள் கஸ்டப்படாதேங்கோ" என்ற சுமதி பெருமூச்சுத்தான் விட முடிந்தது.

சுமதிக்கு ஒரு விதத்தில் சுந்தரிமேல் பொறாமை தான். இயலாத நேரத்திலும் கண்ணன் அண்ணை அவாக்கு உதவி செய்ய நினைக்கிறார். அவர் கஸ்டப்படக்கூடாது என்று மனைவி எப்படித்துடிக்கிறா இதெல்லோ வாழ்க்கைத்துணை என்ற சொல்லிற்கே அழகு. இனி என்ன செய்வது மௌனமாய் விட்டுவந்த பாதி வேலையை தொடரச்சென்றாள் சுமதி.

ம்... ஒற்றுமையாய் வாழுற அந்த குடும்பத்திற்கு இந்த உதவியை ஆவது செய்வமே என்று புறுபுறுத்த படி பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு பாடசாலை சென்றுவிட்டாள் சுமதி. மறுநாள் வழமையை விட சற்று முன்னரே எழும்பிய ரவி.. தன் வேலைகளை தானே செய்யலானான்.. அப்படியே பிள்ளைகளையும் கவனித்தான். அத்தோடு நின்று விடாமல். " சுமதி நான் வேணும் என்றால் இண்டைக்கு பிள்ளையளை கொண்டே விட்டிறன். நீர் வரேக்க கூட்டீட்டுவாருமன்." என்றான் ரவி.

சுமதிக்கு ஒரே ஆச்சரியம் என்ன இண்டைக்கு சந்திர சூரிய கிரகணம் ஏதுமே என்று முழித்தாள். "என்ன லூசு மாதிரி முழிக்கிறீர்.. இல்லை நேற்று சுந்தரி கண்ணனுக்கு சுகமில்லை என்ற உடனை வழமை குழம்பி கஸ்டப்பட்டு உன்னட்டை உதவி கேட்டு வந்திட்டா.. அவனுக்கு ஒன்று என்றதும் அவவின்ர நாளாந்த வாழ்க்கையில இத்தனை மாற்றம். ஆனால் எனக்கு ஒன்டென்றால் உனக்கு எந்த மாற்றமும் இருக்காதே. நான் நல்லாய் இருக்கும் போது கூட.. நலமற்றவன் மாதிரி நடந்திருக்கிறனே, இனியாவது கொஞ்சம் சுமப்பம்.

"என் குடும்பச்சுமைகளை சுமப்பதில் சுகம் காணுவம்" என்றபடி கண் சிமிட்டினான். அவனது பேச்சைக்கேட்க பாவமாய் இருந்தது சுமதிக்கு. இருந்தாலும் அதுதானே உண்மை. சுகதேகியான அவன் இத்தனை நாளும் அவளில் சார்ந்தல்லவோ இருந்தான். குழந்தைகளோடு அவனையும் சேர்த்தல்லவோ அவள் சுமந்தாள். "சரி ரவி நீங்கள் கூட்டிக்கொண்டு போங்கோ நான்.. அடுப்பிலை வைச்சதுகளை இறக்கி வைச்சிட்டு ஆறுதலாய்ப்போறன்." என்ற அவளின் வார்த்தையில் ஒரு தெளிவும் குளிர்ச்சியும் நிறைந்திருந்தது. அதை கவனித்த போது அவனுக்கே உறைத்தது. இனியாவது விடிய விடிய வீட்டில் வெடி விழாமல்.. அமைதியாய் நாட்கள் மலரட்டும் என்று கூறி பிள்ளைகள் கையைப்பிடித்தான். ■

# இந்தவாரம் உங்கள் பலன்

(21.07.2011 தொடக்கம் 27.07.2011 வரை **ஸ்ரீதர்**

### மேடம்

கொஞ்சம் அசமந்தப் போக்கான வாரமாகும். எந்தவித இலாபமுமின்றி வீண் அலைச்சலாயிருக்கும். தொழில் ஸ்தானத்தில் ஒருவித இரண்டுங்கெட்டான் நிலை தோன்றும் உங்களது உடல் உபாதைக்குட்படலாம். மருத்துவச் செலவு நிச்சயமுண்டு. மேலதிகாரிகள் பாசமாயிருப்பர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திடீர்ப்பயணத்துக்கு வாய்ப்புண்டு. சிலவேளைகளில் பதவி உயர்வுக்கும் இடமுண்டு. தந்தை வழியில் உருவாகிய மனக்கசப்பு விலகிப்பாசம் உண்டாகும். மாணவ உலகம் நன்மையும். உற்றார் உறவினர் பாசமுடனே நடந்துகொள்வர். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமீட்டுவர். பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து பின் முடிவெடுக்கவும். அதிர்ஷ்ட நாள்:வெள்ளி.

### இடபம்

நன்மைகள் அளிக்கவல்ல நல்ல வரமாகும். திடீர் பணவரவுகள், பொருள் வரவுகள் உண்டு. திட்டமிட்டவாறு எல்லாம் நடக்கும். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் வேலைப்பளு அதிகரிக்கும். வாழ்க்கையில் வெறுப்புக்கும விரக்திக்கும் ஆளாவீர்கள். பிறருக்காக உங்கள் பணம் செலவாகப் போகிறது. குடும்ப உறுப்பினர்கள் சந்தோஷமாக இருப்பர். சிலவேளைகளில் கடனோ, கைமாற்றோ வாங்க வேண்டி நேரிடக் கூடும். எந்தக் காரியமும் இழுத்தடிக்குமே தவிர நன்கு நிறைவேறாது. மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகாமல் அவர்களை அனுசரித்துச் செல்லவும். எதிலும் நிதானமாக நடந்துகொள்ளவும். கலைஞர்கள், வர்த்தகர்கள் நன்மை அடைவர். சினத்தை அடக்கவும். அதிர்ஷ்ட நாள்: – சனி.

### மிதுனம்

இநதவாரம் உங்களுக்குச் சிக்கலான வாரமாகும். வீண் செலவுகளால் கவலை உண்டாகும். பணத்தைச் சேமிக்க முடியாது திண்டாடுவீர்கள். எதிர்பார்ப்புக்கு மேலாகவே பணம் வரவிருக்கும். கொடுத்த கடன் வசூலிப்பீர்கள். இல்லத்தில் சுபகாரியங்களுக்கான பேச்சுக்கால் தொடங்கும். இருந்தாலும் கௌரவத்துக்காகப் பகட்டாக நடந்துகொள்வீர்கள். விருந்துபசாரங்களால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்கள் தாமாகவே வந்து உதவுவார்கள். மாணவர்கள் கல்வியில் நாட்டமன்றிக் காணப்படுவர். உடல்நிலையில் அதிகமாற்றமில்லை, கலைஞர்கள், வர்த்தகர்கள் நஷ்டமுறுவர். கடவுள் வழிபாடு நன்மை பயக்கும். அதிர்ஷ்ட நாள்: – செவ்வாய்.

### கடகம்

இவ்வாரம் தொடர்ச்சியாக வேலைப்பளு அதிகரித்துக் காணப்படும். மனைவி வழியால் சில நன்மைகள் கிடைக்கும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். எந்தக் காரியத்தையும் ஆறுதலாக யோசித்துச் செயற்பட வேண்டும். அவசர முடிவுகள் ஆபத்தை விளைவிக்கக் கூடும். நீங்கள் எதைச் செய்தாலும் குற்றம் குறை கண்டு அதை விமர்சித்து உங்களைக் கோபக்காரர்களாக மாற்றும் நடவடிக்கை நடைபெறும். தொழில் ஸ்தானத்தில் வீண்பழி சுமத்துவார்கள். எதையும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். மாணவ உலகம் கல்வியில் நாட்டங்காட்டும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். கலைஞர்கள், வர்த்தகர்கள் கௌரவம் பெறுவர். அதிர்ஷ்ட நாள்: – புதன்.

### சிங்கம்

இந்தவாரம் உங்களுக்குச் சுமாரா கக் கழியும். வீட்டு வசதி வாய்ப்புக்களுக்காகக் கொஞ்சம் பணம் செலவாகலாம். வீண் விதண்டாவாதங்களில் ஈடுபட வேண்டாம். நீங்கள் எதிர்பார்க்காத சில காரியங்கள் நடைபெறவாய்ப்புண்டு. செல்வாக்கும் சொல்வாக்கும் அதிகரிக்கலாம். உறவினர்களும் நண்பர்களும் பொறாமையால் சினமுறுவர். நீண்டநாளாக இழுத்தடித்த காரியம் சுமூகமாக நிறைவேறும் சுற்றத்தார்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பின் சாந்த நிலை தோன்றும். ஓய்வு ஒழிச்சலின்றித் தொடர்ந்து வேலைசெய்ய நேரிடலாம். மாணவர்கள் கல்வியில் கவனஞ்செலுத்துவர். செலவுத்தானம் கூடும். கலைஞரகள் வர்த்தகர்கள் லாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்: – வெள்ளி.

### கன்னி

இவ்வாரம் நன்மை பயக்கும் வாரம். திட்டமிட்டவாறு எல்லாம் நடக்கும். எதிர்பார்த்த உதவிகள் விரைவில் ஈடேறும் இல்லத்தில் சுபகாரியங்கள் இடம்பெறும் சூழ்நிலை உருவாகலாம். எதிர்பார்த்த ஒரு விடயம் ஏமாற்றத்தைத் தரலாம். தொழில் ஸ்தானத்தில் சங்கடங்களும் சச்சரவுகளும் ஏற்பட்டாலும் முடிவில் நன்மை கிடைக்கும். கடன் வசூலாகும். தேவையற்ற விடயங்களில் வீணாகத் தலையிட வேண்டாம். வேலைகள் அதிகரித்தாலும் சினக்காமல் செய்து முடிப்பீர்கள். அரசியல்வாதிகள் இலாபமுறுவர். மாணவர்கள் களியாட்டங்களில் ஈடுபடுவர். கலைஞர்கள், வர்த்தகர்கள் கௌரவிக்கப்படுவார்கள். எதையும் நிதானமாகச் செய்யவும். அதிர்ஷ்ட நாள்: – சனி.

### துலாம்

மங்களகரமான வாரம். நினைத்தவை எல்லாம் திட்டமிட்டவாறு நலமாய் நிறைவுறும். பணப்புழக்கம் தாராளமாக உண்டு. உறவினர்களும் நண்பர்களும் பொறாமைப் படுமளவுக்கு சமூகத்தில் மதிப்பு உயரும். பிறர் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டாம். நீங்களே ஆற அமர யோசித்து நடக்கவும். தொழில் ஸ்தானத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம். புதிய புதிய திட்டங்கள் மனதில் உருவாகி அது நல்ல நிலைக்கு உங்களை இட்டுச் செல்லும். சுற்றத்தவர்கள் மனஸ்தாபம் வரத்தக்கதாக நடந்துகொள்வர். நீதிமன்றம், வழக்கு என்று போகவேண்டிவரும். மாணவர்கள் நன்கு படிப்பர். கலைஞர், வர்த்தகர் இலாபமுறுவர். அதிர்ஷ்ட நாள்: – ஞாயிறு.

### விருச்சிகம்

இந்தவாரம் சுப்சமான வாரம். எடுத்த காரியங்கள் முதலில் தடைப்பட்டலாம் பின்பு நலமாக முடியும். சில கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாமலும் போகலாம். தொழில் ஸ்தானத்தில் எண்ணம்போல் எல்லாம் நிறைவேறும். நினைத்தவை யாவும் அப்படியே நடக்கும். சில இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். பணப்புழக்கம் நன்றாகவே காணப்படும். சில வேளை களில் உங்கள் திக்கதரிசனத்தால் கூடுதலான இலாபத்தைக் கொடுக்கும். குடும்ப உறுப்பினர்கள் தாம் நினைத்தபடியே நடந்தாலும் பாதிப்பு இருக்காது. தெருவிபத்துக்கு ஆளாகலாம். மாணவர்கள் விளையாட்டிலே நாட்டங்காட்டுவர். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமீட்டுவர். எதிலும் நிதானம் தேவை. அதிர்ஷ்ட நாள்: – திங்கள்.

### தனுசு

இந்தவாரம் சிறிது குழப்பந்தரும் வாரமாகும். எதிலும் பொறுமையும் நிதானமும் தேவை. வீண்செலவுகளால் சிரமடைவீர்கள். நீண்டநாட்களாக இழுத்தடித்த ஒரு விடயம் சுமூகநிலைக்கு வரலாம். தொழில் ஸ்தானத்தில் வேலைப்பளு கூடும். சக ஊழியர்கள் விடுமுறையில் செல்ல உங்களைக் கசக்கிப் பிழிவார்கள். கொடுத்த கடன்காசு குழப்பத்தை உண்டு பண்ணும். வழக்கு, நீதிமன்றம் என்று போகவேண்டி வரும். குடும்ப உறுப்பினர்கள் பாசமாக இருப்பது போல நடிப்பார்கள். அதனால் மனக்கிலேசம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கலாம். மாணவர்கள் படிப்பார்கள். பணவரவு தடைப்படும். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமடைவர். அதிர்ஷ்ட நாள்: – திங்கள்.

### மகரம்

இவ்வாரம் உங்களுக்கு அனுகூலமான வாரம். கணிசமான பணவரவுகள் உண்டு. திட்டமிட்டவாறு காரியங்கள் தடையின்றி நிறைவேறும். விருப்பமில்லாத செயல்களைச் செய்ய நேரிடலாம். குடும்ப அங்கத்தினர்கள் ஆடை, அலங்காரப் பொருட்களை வாங்குவதில் அதிக அக்கறை செலுத்துவர். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் தலை தூக்கும். வேலையில் அதிருப்தி, ஆதங்கம் ஏற்படலாம். உடல்நிலை கவலைக்கிடமாகித் திடீர் வைத்தியச்செலவு உருவாகும், உறவினர்களுடன் பட்டும்படாமலும் நடந்து கொள்ளவும். சோர்வும் சோம்பலும் உங்களிடம் குடிகொள்ளும். மாணவர்கள் கல்வியில் நாட்டமுறுவர். கலைஞர், வர்த்தகர் கௌரவிக்கப்படுவர். அதிர்ஷ்ட நாள்: – செவ்வாய்.

### கும்பம்

இவ்வாரம் நல்ல பலன் நடக்கும் வாரமாகும். திட்டமிட்ட காரியங்கள் செவ்வனே நிறைவேறும். தொழில் ஸ்தானத்தில் எதிர்பார்த்ததை விடக் கூடுதலான பணம் வரும். குடும்ப உறுப்பினர்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படும். செய்யும் வேலைகள் தாமதமின்றி விரைவில் முடிவுறும். சக ஊழியர்கள் உங்களைக் கண்டு பொறாமையால் பொசுங்கிப் போவார்கள். பொலிஸ், வழக்கு, நீதிமன்றம் என்று வந்தாலும் உங்களுக்கு எவ்வித பாதிப்புமில்லை. மனைவி, பிள்ளைகள், வீண் செலவுகளை ஏற்படுத்துவார்கள். மாணவர்கள் கல்வியில் கவனஞ் செலுத்துவர். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். கலைஞர்கள், வர்த்தகர்கள் நல்லபயன்பெறுவர். அதிர்ஷ்ட நாள்: – வெள்ளி.

### மீனம்

இவ்வாரம் உங்களுக்குக் குழப்பமான வாரம். வீணான பழிச்சொல்லுக்கும் தண்டச் செலவுகளுக்கும் ஆளாகலாம். எதிர்பார்த்த பணவரவுகள் தடைப்படும். உடம்பில் அடிக்கடி சோர்வும் சோம்பலும் காணப்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒத்துழைக்கமாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் வீண் குழப்பத்தால் விதண்டாவாதம் ஏற்பட்டுக் கைகலப்பில் முடியலாம். எதிலுமே நிதானம் தேவை. பூர்வீகச் சொத்துக்களால் வீணான சண்டை சச்சரவுகள் ஏற்படலாம். மாணவர்கள் கேளிக்கைகளில்டுபடுவர். கடன் தந்தவர்கள் சண்டைக்கு வருவர். வாழ்க்கையில் விரக்தி, அதிருப்தி ஏற்படும். கலைஞர்கள் வர்த்தகர்கள் இலாபமுறுவர். அதிர்ஷ்ட நாள் வியாழன்.

# காதிலை பூ கந்தசாமி



## நோட்டீஸ் பலகை

நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
– காதில பூ கந்தசாமி –

**வணக்கமுங்கோ! வடக்கில் நடைபெற இருக்கிற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டி யிடுகின்ற கூத்தமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவரை காதிலை பூ கந்தசாமி சந்திச்சிருக்கிறார்.**

**கா.பூ:-** இத் தேர்தலில் போட்டியிடக் காரணம்?

**கூ.பீ:-** தேர்தல் நடாத்துவதற்கு அரசு தீர்மானித்ததினால் போட்டியிடுகிறோம்.

**கா.பூ:-** அப்படியானால் தேர்தல் அரசியல் மீது உங்களுக்கு நம்பிக்கையில்லையா?

**கூ.பீ:-** அப்படிச் சொல்லவில்லை. உள்ளூராட்சித் தேர்தலில் எனக்கு ஆர்வமில்லை.

**கா.பூ:-** ஆர்வமில்லையா... ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

**கூ.பீ:-** ஆர்வமுடன் ஆட்டத்தில் இறங்கி வோட்டு கேட்பதற்கு ஏற்ற பலன்கள் இச் சபைகளில் கிடைக்காது என்பதால் ஆர்வம் குறைவாக இருக்கிறது. நடப்பது நாடாளும் தேர்தல் என்றால், வெற்றி பெறும் பட்சத்தில் நல்ல பல காரியங்கள் கைகளுக்கு வந்து சேரும். அதிகாரமானவர்களின் கோடிகளை தேடிச் சென்றாவது சொந்த வேலைகள் செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

ஆனால், அப்படி எதற்கும் உதவாத இந்தத் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம், றோட்டுப் போடவும், குப்பை அள்ளவுமே அதிகாரம் கிடைக்கும். குப்பைத் தனமான உந்த அதிகாரம் யாருக்குத் தேவை.

**கா.பூ:-** அப்படியாயின் தங்களின் கட்சி எதறகாக இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறது.

**கூ.பீ:-** இடையிடையே நடைபெறுகின்ற இவ்வாறான தேர்தல்களிலும் போட்டியிடாவிட்டால் மகாஜனங்கள் நினைவுகளில் நிலைகொள்வது என்பது எட்டாத காரியமாகிவிடுமே! எனவேதான் ஒப்புக்கு கொஞ்சப்பேரைப் பிடித்து கொம்பு சீவி விட்டிருக்கிறோம்!

**கா.பூ:-** இத்தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தும் அளவிற்கு உங்களின் உறுப்பினர்கள் அல்லது செயற்பாட்டாளர்கள் இருக்கின்றார்களா?

**கூ.பீ:-** (சற்றுக் கோபமாக முறைத்துப் பார்க்கிறார்) என்னிடம் நக்கல் பண்ணவேண்டாம். வேட்பாளர்களைத் தேடி ஓடிய ஓட்டம் எனக்குத்தான் தெரியும். ஓடினோம் ஓடினோம் கிராமம் கிராமமாக ஓடினோம். தெருத்தெருவாக ஓடினோம். சந்துகளுக்குள் புகுந்து ஓடினோம். ஓடிய ஓட்டத்தின் பயன் கண்ணில்பட்டவர்களையும் விளக்கம் இன்றி தலையை ஆட்டியவர்கள் அனைவரையும் பிடித்து வேட்பாளர்கள் மகுடம் சூட்டிக் களத்தில் இறக்கியிருக்கின்றோம்.

**கா.பூ:-** இப்படியானவர்கள் வெற்றி பெற்றால் மக்களுக்கு சேவை செய்வார்களா?

**கூ.பீ:-** மக்களுக்குச் சேவை செய்வார்களா இல்லையா என்பதற்கான பதிலை நான் கூற விரும்பவில்லை. யாழ். மாநகர சபையிலும், வவுனியா நகரசபையிலும் கௌரவ கூத்தமைப்பு உறுப்பினர்கள் போடுகின்ற கூத்துக்களையும் பிடுங்குப்பாடுகளையும் பார்த்து நீங்களே தீர்மானத்திற்கு வாருங்கள்.

**கா.பூ:-** அப்படியானால், நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தங்கள் உறுப்பினர்கள்கள் வெற்றிபெற்றால்....

**கூ.பீ:-** அதோ கதிதான்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# மின்சாரத்துக்குக் கடிவாளமிட்டவர்



இன்றோ தான் எடுத்த பிரசங்கக் குறிப்புக்களை அவர் கூறியபடியே விரிவாக எழுதினான். அவசரமாக வரைந்துகொண்டு வந்த படங்களையெல்லாம் ஆர அமர நிதானமாக வரைந்தான். தான் எழுதியவைகளையும் வரைந்தவைகளையும் அப்படியே ஒன்றாகக் கட்டினான். மறு நாள் இப்படித் தாம் தயாரித்த புத்தகத்தை டேவியின் பெயருக்கு விலாசமிட்டு. அவர் வீட்டுத் தபால் பெட்டியில் கொண்டு போய் போட்டுவிட்டு வந்தான். இதனால் ஏதோ பெரிய அதிசயம் நிகழ்ந்துவிடும் என்று பாரடே நினைக்கவில்லை. ஆனால் இந்தச் செயல்தான் பாரடேயின் வாழ்க்கையையே மாற்றி அமைத்தது.

தன் தபால்களைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த டேவிக்கு வியப்பான வியப்பு. முதல் நாள் தாம் செய்த பிரசங்கம், வரிக்கு வரி அப்படியே எழுதப்பட்டு, அதற்கான வரைபடங்களும் ஆங்காங்கே சேர்க்கப்பட்டு, அற்புதமான முறையில் புத்தக உருவில்...! தம் உதவியாளரைக் கூவி அழைத்தார். டேவி. "இதோ பார்த்தாயா? இதை அனுப்பியவரின் பெயர் பாரடேயாம். இந்தக் கனவான் ஓர் அமெரிக்கராக இருக்க வேண்டும். சிறந்த விஞ்ஞான அறிவுள்ளவராகத் தோன்றுகிறார். இவர் ஆங்கிலேயராக இருந்தால் எனக்குத் தெரியாதிருக்க முடியாது. இவருக்கு இன்றைக்கே தகவல் கொடு. நாளை பிற்பகல் என்னை வந்து சந்திக்குமாறு" என்றார் டேவி. தம் பிரசங்கங்களை இவ்வளவு கச்சிதமாகக் குறிப்பபெடுத்துள்ளவர் ஒரு சிறந்த அறிவாளியாகத்தான் இருக்க வேண்டும் என்று திடமான முடிவோடு இருந்தார் டேவி.

**உலகை வியக்க வைத்தவர்கள்**

[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)

# கடல் கன்னி?







சீனாவில் உள்ள கடற்கரை ஒன்றில் கடல் கன்னி ஒருவர் சில வாரங்களுக்கு முன் தோன்றி இருந்தார் என்று இணையங்களில் படங்களுடன் பரபரப்பான செய்தி வெளியாகி உள்ளது. ஆயினும் இது உண்மையிலேயே கடல் கன்னியின் உருவம்தானா? அல்லது பம்மாத்து வேலையா? என்பதை உறுதிப்படுத்த முடியாது உள்ளது. படங்களை பார்த்து நீங்களே முடிவு எடுங்கள்.

# சர்ச்சை

சீனாவில் குயிங்டவ் மற்றும் ஹுவாங்டவ் தீபகற்பத்தை இணைக்கும் வகையில், கடலில் கட்டப்பட்ட உலகிலேயே மிக நீளமான பாலம், பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக, தற்போது சர்ச்சை எழுந்துள்ளது. சீனாவில் கடலில் கட்டப்பட்ட இப்பாலம், 42.5 கிலோ மீற்றர் நீளமானது. பாலத்தின் இணைப்பு பகுதிகளில் விரிசல் இருப்பதாக, தற்போது சீனப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. கடந்த மாதம் 30ஆம் திகதி, இப்பாலம் திறக்கப்பட்டதில் இருந்து, தினமும் 18 ஆயிரம் வாகனங்கள் பாலத்தில் செல்கின்றன. 10 ஆயிரத்து 580 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இப்பாலம், நிலநடுக்கம் உட்பட பேரழிவுகளை தாங்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது. பாலத்தின் இணைப்புகளில் போடப்பட்டுள்ள போல்ட்கள், ஒயர் இணைப்பிற்காக அவ்வப்போது கழற்றப்பட்டு பின்னர் மாட்டப்படும். இதில், ஆபத்து எதுவும் இல்லை என்று, இப்பாலம் கட்ட நிதியுதவி வழங்கியுள்ள உள்கட்டமைப்பு நிறுவனம் பதில் அளித்துள்ளது. இப்பாலம் கட்ட நான்கரை ஆண்டுகள் பிடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# கல்யாணம்



இந்தியாவின் ராஜஸ்தான் பிரதேசத்தில் குரங்குகள் இரண்டிற்கிடையில் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இவ் விநோதமான திருமணத்தின் மணமகனாக ராஜுவும் மணமகளாக ஷின்கியும் திகழ்ந்தனர். 03 வருடங்களுக்கு முன்பு உணர்வின்றி இருந்த ராஜு எனும் குரங்கினை 38 வயதுடைய ராஜேஸ் எனும் முச்சக்கர வண்டி ஓட்டுனர் தான் பிள்ளையாக வளர்த்தார். இந்த ராஜு தன்னோடு இணைந்து உணவு அருந்துதல், புகைபிடித்தல், தூங்குதல் போன்ற பல விடயங்களை செய்யும் என ராஜேஸ் குறிப்பிட்டார். தான் குழந்தையாக வளர்த்த தனது ராஜுவிற்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற அவாவில் பிறிதொரு கிராமத்தைச் சேர்ந்த மதகுரு ஒருவரினால் வளர்க்கப்பட்ட ஷின்கி எனும் பெண் குரங்குடன் ராஜுவிற்கு திருமணம் செய்து வைக்க தீர்மானிக்கப்பட்டது. வன பரிபாலன அதிகாரிகளிடம் இருந்து இதற்கு எதிர்ப்பு ஏற்பட்டது. இந்தியாவில் குரங்குகள் அரசின் சொத்து எனவும் அவற்றை செல்லப்பிராணியாக வளர்த்தல், மற்றும் பயிற்றுவித்தல் சட்டரீதியாக தவறு என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதனால் குரங்குகளை திருமணம் செய்து வைப்பது சட்டவிரோதமான செயல் எனக் குறிப்பிட்டு இத்திருமணத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

எப்படியிருப்பினும் இரகசியமான முறையில் இத் திருமணம் காடொன்றில் நிகழ்ந்தது. இத்திருமண ஜோடியை தேடி சென்ற வன பரிபாலன அதிகாரிகள் ஷின்கியின் நெற்றியில் குங்குமத்துடன் அதன் அருகில் இருந்த மணமகன் ராஜுவையும் பிடித்துள்ளனர். பின்னர் அவற்றை காட்டிற்குள் சுதந்திரமாக விடுவதாக அவ் அதிகாரிகள் கூறியுள்ளனர். இருப்பினும் இவை இரண்டும் என்றோ ஒரு நாள் தன்னிடம் திரும்பி வரும் என ராஜேஸ் உணர்வுபூர்வமாக கூறுகிறார்.




TOPAZ

எனும் எமது புதுக்கடையினை
15.7.2011 வெள்ளிக்கிழமை
யாழ் நகரில் மங்களகரமாக
திறந்து வைத்துள்ளோம்
என்பதை மகிழ்வுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

சேட், ரவுசர், சல்வார், சிறுவர்களுக்கான சூட் வகைகள்,
முகூர்த்தப் பட்டுப்புடவைகள், மற்றும் சாறி வகைகள்
என்பனவற்றைக் குறைந்த விலையில்
மனம் நிறைவாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

இல 70 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

C/828